

# தமிழரசு

1-9-1973 40 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT-3506

# மீன் ஏற்றுமதி!

தமிழ்நாட்டிலிருந்து 1973-ஆம் ஆண்டு 5½ கோடி ரூபாய் மதிப்புள்ள பதப்படுத்தப்பட்ட மீன்வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன


தமிழரசு

இதழ் 5

1-9-1973

மலர் 4



# தியாகத்தைப் போற்றிடுவோம்!
# தியாகிகளை மதித்திடுவோம்!

இன்று நடைபெறுகின்ற இந்த விழா எவ்வளவு உணர்ச்சியை — உற்சாகத்தை நம்முடைய உள்ளத்திலே ஏற்படுத்துகிறது என்பதனை நம்முடைய ஆளுநர் அவர்களும் நாவலர் அவர்களும் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்திய நாடு விடுதலை பெற்ற 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிறைவு விழாவை நாம் கொண்டாடுகிற நேரத்தில் இந்த ஓராண்டுக் காலத்திலே அரசின் சார்பில் தியாகிகளைப் போற்றுகின்ற அளவுக்கு—பாராட்டுகின்ற அளவுக்கு, எப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் செய்திருக்கிறோம் என்பதனை நீங்கள் வெகு நன்றாக அறிவீர்கள்.

இந்தியப் பொன்னாடு முழுவதும் இன்றைய நாள் மிகக் குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது என்கிற போதிலும்—விழாக்கோலத்திற்கு இடையிலே இன்றைக்கு நாட்டிலே இருக்கிற நிலைமைகளையும் எண்ணிப் பார்த்து—அவைகளைக் களைந்தெறிவதற்கான வழிமுறைகளைக் காணவும்—அந்த முறைகளைத் தயவு தாட்சண்யமின்றிச் செயல்படுத்தவும்—ஆளுகின்றவர்களும் — ஆளப்படுகின்றவர்களும் உறுதியாகச் சூளுரை மேற்கொள்ள வேண்டிய நாள் இந்நாளாகும்!

இந்த நாளில்; மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள இந்த மாமன்றத்தில்—நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட தியாகச் செம்மல்களாம் உங்களை எல்லாம் காண்பதிலும்—உங்களுக்கெல்லாம் வணக்கம் செலுத்துவதிலும்—இந்த நாட்டின் மண்ணுக்குச் சுதந்தரம் பெற்றுத் தந்த உங்களது வீரத் திருவடிகளுக்குத் தொழுகை நடத்துவதிலும் நான் இந்த நாட்டின் குடிமகன் என்கின்ற

முறையிலே பெருமை அடைகின்றேன்—கௌரவம் கொள்கின்றேன்.

இந்த அரசு தியாகிகள்பால் எவ்வளவு பற்றும், பாசமும், அன்பும் கொண்டு நடந்து வருகிறது என்பதைக் கடந்த காலப் பல்வேறு சாதனைகள் எடுத்து விளக்கிக் கொண்டிருக்கின்றன.

தியாகிகளுடைய பட்டியலை நம்முடைய நாவலர் அவர்கள் இரண்டு பெரிய புத்தகங்களாக இங்கே வெளியிட்டு அதை ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பட்டியலைத் தயாரிப்பதற்காக 1964-ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொண்டு — அந்த முயற்சி நல்ல வெற்றிக் கனியாக ஆகின்ற அளவுக்கு இந்தப் பட்டியலைத் தயாரித்துக் கொடுத்த செல்வி விஜயலட்சுமிக்கும் அவர்களோடு ஒத்துழைத்த ஏனைய குழுவின் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது வெறும் பெயர்ப் பட்டியல் கொண்ட புத்தகம் மட்டுமல்ல. இந்திய நாட்டினுடைய தியாக வரலாற்றுப் புத்தகமாகும். அந்தப் புத்தகத்தைத் தான் இங்கே நாவலர் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளில் சுப்பிரமணியன், கந்தன், கந்தசாமி என்றெல்லாம் பெயர்கள் இருக்கலாம். ஆனால் ஏறத்தாழ 15 ஆயிரம் பெயர்கள் அடங்கிய அந்தப் புத்தகங்களில்—கந்தன், கந்தசாமி, சுப்ரமணியம் என்பதல்ல அதில் உள்ள பெயர்கள். எல்லாப் பெயர்களுக்கும் உள்ள ஒரே பெயர், இந்திய நாட்டின் மண்ணுக்காகப் போராடிய 'தியாகி, தியாகி, தியாகி' என்பதுதான் அதன் பொதுப் பெயராகும்!

அந்தப் பொதுப் பெயர் இணைந்து தான்—தொகுக்கப் பெற்றதுதான் இங்கே வெளியிடப்பட்ட புத்தகமாகும்.

தமிழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலே பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு—தியாகிகளுக்காகச் செய்யப்பட வேண்டிய காரியங்கள் செய்யப்படுமா என்கின்ற ஐயப்பாடு சிலருக்கு எழுந்த நேரத்தில்—அதற்கு உதட்டளவிலே இல்லாமல்—செயல் அளவிலே சாதனையைச் செய்து காட்டியவர்—எங்களையெல்லாம் பயிற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்கள்!

கிட்டத்தட்ட இந்த நான்கைந்து ஆண்டுகளில் தமிழகத்திலே உள்ள 7500 தியாகிகளுக்கு மான்யம் வழங்கி வருகிறோம்.

தொடக்கத்திலே ரூ. 50 மான்யம் என்றிருந்தாலும் வெள்ளி விழா ஆண்டுத் தொடக்கத்தின் போது — சென்ற ஆகஸ்ட் மாதம் சட்டப் பேரவையிலே அறிவித்த தற்கிணங்க அந்த ரூ. 50, இன்றைக்கு ரூ. 75 ஆக உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதனை அறிவீர்கள்.

தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி போன்றவர்களுக்கு — தென் ஆப்பிரிக்காப் போராட்டத்திலே உத்தமர் காந்தியடிகளோடு உடனிருந்து கலந்து கொண்ட அந்த உத்தமத் தியாகிகளுக்கு அவர்களுடைய மூதாதையர் வாழ்ந்த திருநகராம்—தில்லையாடியில்—வள்ளியம்மை நகரென்றும், நாகப்பன், நாராயணசாமி பெயரால் நினைவுச் சின்னங்கள் என்றும் இந்த அரசு அமைத்திருப்பதையும் நீங்கள் உணர்வீர்கள்.

பழம் பெரும் தியாகிகளை எல்லாம் தமிழக அரசு அலட்சியப்படுத்தி விடாமல்—அவர்களுடைய குடும்பப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆவன செய்து வந்திருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அது மாத்திரமல்லாமல் செக்கிழுத்த சிதம்பரனாருக்குச் சிலை—கவிச்சக்கரவர்த்தி பாரதியாருக்குச் சிலை என்பது போல் இந்த அரசு தியாகிகளை எல்லாம் மதித்திருக்கிறது.

என்றைக்கோ தியாகி சிதம்பரனாரால் இழுக்கப்பட்டு—எங்கேயோ ஒரு மூலையில் கிடத்தப்பட்டு — சீந்து வாரற்றுக் கிடந்த அந்தச் செக்கை எடுத்து—இன்றைக்குச் சென்னை மாநகரத்தில்—அனைவரும் காணத்தக்க வகையில் ஓர் அழகான இடத்தில் சிதம்பரனார் இழுத்த செக்கை வைத்திருக்கின்ற பெருமையை இந்த அரசு பெற்றிருக்கின்றது என்று சொன்னால்—அது அந்தத் தியாக சீலனிடத்தில் நாம் கொண்டிருக்கிற அன்பின் அடையாளமாகும்.

**முதல்வர் கலைஞர்**

இந்த விழாக்கள் கட்சிச் சார்பற்ற முறையிலே நடைபெற வேண்டும் என்பது என் ஆசை. அந்தக் காரணத்தினாலேதான் நான் முதலமைச்சர் பொறுப்பையேற்ற பிறகு கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக ஆகஸ்டு 15 அன்று மாலை நேரங்களில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கின்ற கூட்டம் ஒன்று நடத்த வேண்டுமென்று திட்டமிட்டு அவ்வாறு செய்யப்பட்டு வந்தது.

நான் எல்லாக் கட்சிகளுக்கும் ஒவ்வோர் ஆண்டும் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். இந்த ஒரு நாளை—கட்சிகளை மறந்து விட்டுக் கொண்டாடுவோம்: இந்த ஒரு நாளில் கட்சிகளை, காழ்ப்பு உணர்ச்சிகளை, மனமாச்சரியங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லாரும் இந்தியர்—எல்லாரும் தமிழ்நாட்டுக்காரர்—எல்லாரும் தமிழர்கள்—எல்லாரும் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் என்ற எண்ணத்தோடு கொண்டாடுவோம்: இந்த நாளை இந்திய நாட்டின் பொது நாளாகக் கொண்டாடுவோம். ஆகவே தனித்தனியாகக் கட்சிக் கூட்டங்கள் தேவையில்லை. இந்த நாளில், அனைவரும் ஒரே கட்சி—இந்தியாவின் கட்சி: என்று ஒன்றாகக் கொண்டாடுவோம் என்று வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

ஆனால், விடுத்த அந்த வேண்டுகோள் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதே என்று வேதனைப்படாமல் என்னால் இருக்க முடியாது.

ஆனாலும் இந்த உருக்கமான எனது வேண்டுகோள் உயிரற்றுப் போய்விட்டது என்று எண்ணாமல், எதிர்காலத்திலாவது கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் மீண்டும் கூடி யோசித்து, இந்திய அளவிலே இந்த ஒரு நாளைக் கட்சிச் சார்பற்ற முறையிலே அனைவரும் கொண்டாடுகின்ற ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வேளை எனது வேண்டுகோளில் உள்ள மதிப்பு என்

வயதின் காரணமாகக் குறைந்திருக்கலாம்.

ஆகவே என்னைவிட வயதிலே பெரியவர்கள் அத்தகைய வேண்டுகோளின் கர்த்தாக்களாகி, அந்த வேண்டுகோளுக்கு இந்திய நாட்டிலே இருக்கிற எல்லாக் கட்சிக்காரர்களும் இணங்கி வருவார்களேயானால் எங்களைப்போல மகிழ்ச்சி அடைபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. இந்த நல்ல நாளில் எனது வேண்டுகோளைச் சிந்தித்துப் பார்த்திட வேண்டும். இந்திய அரசின் சார்பில் விடுதலை வீரர்களுக்குத் தாமிரப் பத்திரம் வழங்குகின்ற விழா சென்ற ஆண்டு நடைபெற்ற நேரத்தில், நம் தமிழகத்திலே மாத்திரம் இது வரை 1922 தாமிரப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் மத்திய அரசின் தாமிரப் பத்திரங்கள், 253 தாமிரப் பத்திரங்களாகத் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டால், 2175 தாமிரப் பத்திரங்கள் வழங்கி நிறைவு பெறுகின்றன என்று பொருளாகும்.

அதன்னியில் மூன்று மாதம் சிறை சென்றவர்கள்—தாமிரப் பத்திரங்கள் வழங்குவதற்குச் சில விதிமுறைகளுக்கு உட்பட்டாக வேண்டும் என்ற நிலையிலே உள்ளவர்களுக்கு, அந்த விதி தளர்த்தப்பட்டு—இதனைப் பெறுவதற்காகத் தகுதி பெற்றவர்கள் என்கின்ற அளவில் சிலர்—எங்களுடைய முறையீடுகளை, ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசிடத்திலே கேட்டு மத்திய அரசு ஒன்றிரண்டை ஏற்றுக்கொண்டாலும், இந்த மூன்று மாதச்சிறைத் தண்டனைகளை ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவர்களுக்கிருந்த சங்கடங்களினால், நான் சட்ட மன்றப் பேரவையிலும் மேலவையிலும் அளித்த உறுதிக்கிணங்க, தமிழக அரசின் சார்பிலேயே தியாகச் செம்மல் பட்டங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு முன் வந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட பட்டயங்கள் தமிழக முழுவதும் இதுவரை எடுத்த கணக்கின்படிப் பத்தாயிரம் பட்டயங்கள் வழங்கப்பட இருக்கின்றன. மேலும் விவரங்கள் வந்தால் இன்னும் ஓராயிரம்—இரண்டாயிரம் கூடுதலாகலாம். அதற்காகும் செலவையும் இந்த அரசு பொருட்படுத்தப்போவதில்லை.

இன்றையத் தினம் மாத்திரம் 4749 பேருக்கு இந்தப் பட்டயங்கள் தமிழக அரசின் சார்பிலே வழங்கப்படுகின்றன. சென்னையிலே இன்றைக்கு 274 பட்டயங்கள் வழங்கப்படுகின்றன. அதைப் போலவே இன்றைக்குத் தாமிரப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தாமிரப் பத்திரங்களைப் பெறுவதற்காக வந்தவர்களையும், தமிழக அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற தியாகச் செம்மல் பட்டயங்கள் பெறுவதற்காக வந்தவர்களையும், நான் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் வழங்குகிறோம். அதனால் எங்களையும் ஒரு பொருட்டாக மதித்து வந்ததற்காக நன்றி கூறிப் பாராட்டுகிறேன். அவர்களது நல்ல உள்ளங்களுக்கெல்லாம் என் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

தாமிரப் பத்திரங்களைப் பெறுகிறவர்களை விடத் தமிழக அரசின் பட்டயங்களைப் பெறுகின்றவர்கள் ஓரளவுக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டசாலிகள் என்று சொன்னால், தாமிரப் பத்திரங்கள் பெறுபவர்கள் பொறாமைப்படக் கூடாது. எதிர்காலத்திலே அவர்களுடைய பேரக் குழந்தைகள் இந்தி படித்திருந்தால்தான் இதில் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் தமிழக அரசின் பட்டயங்களைப் பெறுகிறவர்கள் எதிர்காலத்தில் பேரன் பேத்திக் காலம் வரையில் படித்து என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். காரணம் நாங்கள் தருகின்ற பட்டயங்கள் தமிழில் தரப்படுகின்றன.

எப்போதுமே நம் எதிர்காலத்திலே வருகின்ற நம் வாரிசுகள், நம் பரம்பரையினர் நம்முடைய பாட்டன், பூட்டன் நம் குடும்பத்திற்கு எதைச் செய்து விட்டுப் போனான் என்று அக்கறை செலுத்துவதுண்டு! இன்றைக்கு கூட என் தகப்பனார் பயன்படுத்திய வெற்றிலைப் பெட்டியைப் பார்த்துப் பார்த்து, 'என் தகப்பனார் பயன்படுத்திய வெற்றிலைப் பெட்டி அல்லவா' என்ற உவகை எனக்குப் பிறக்கத்தான் செய்கிறது, அதைப்போலத்தான் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கிற பேரன், பேத்திகள், தங்களது முன்னோர்கள் வைத்துவிட்டுப்போன பொருட்களை எடுத்துப்பார்ப்பதும், அந்தப் பசுமையான நினைவால் உள்ளம் உருகி நிற்பதும், உரிய இயல்பு.

அதைப்போலத்தான் இன்றைக்கு நீங்கள் பெறுகின்ற இந்தப் பட்டயங்களை உங்கள் வாரிசுகள் படித்துப்பார்த்து, 'ஆகா' நம் குடும்பத்திலே இந்த நாட்டைக் காப்பாற்றப் போரிட்ட ஒரு விடுதலை வீரன் இருந்திருக்கிறான் என்று பூரிப்படைவதற்குப் பயன்படும் என்கிற அந்த வகையிலேதான், இந்தப் பட்டயங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

நீங்கள் நம் ஆளுநர் இங்கு கூறிய கருத்துக்களையெல்லாம் உள்ளத்திலே பதிய வைத்திருக்கிறீர்கள். நமது இந்தியாவின் பலத்தை — ஒற்றுமையை — வலிவை, நாம் என்றென்றும் நம் உணர்வுகள் கெடாமல், நம் உரிமைகள் பாதிக்கப்படாமல் பாதுகாத்து நிற்க வேண்டும் என்ற சூளுரையை இன்றையத் தினம் எடுத்துக் கொள்கிறோம்.

இந்த நன்னாளில், தமிழக அரசு மேலும் ஓர் அளவுக்கு விதிகளைத் தளர்த்தி, நேதாஜி படையிலே இருந்த ஐ.என்.ஏ. வீரர்களுக்கும், இந்தப் பட்டயங்கள் வழங்குவது ஒரு சிறப்பான அம்சமாகும்.

எப்படியும் இந்தியா விடுதலை பெற்றாக வேண்டும்! ஏன்—இப்படிப் பெற்றால் என்ன! என்று ஆர்த்தெழுந்தார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். அவர்களுடைய படையிலே அணி வகுத்து எதிரிகளின் துப்பாக்கி முனைகளுக்கு ஈடு கொடுப்பதற்காக அன்றைக்குச் சென்ற வீரர்கள், இன்றைக்கு இந்தப் பட்டயங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

மத்திய அரசின் தாமிரப் பத்திரத்தில் வெறும் தாமரை மலர் மாத்திரமே போடப்பட்டிருப்பதைக் காண்கிறீர்கள். மாநில அரசின் தமிழ்ப் பட்டயத்தில், அன்னம் ஒன்றும்—, யானை ஒன்றும் போடப்பட்டிருப்பதைக் காண்கிறீர்கள். அன்னம்போல் மென்மையாகவும் இருப்போம். எதிரிகள் வந்தால் யானைபோல் பலம் பெற்று இருப்போம் என்பதைக் குறிக்கின்ற விதத்தில் அந்த அடையாளங்கள்—இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்பதனைத் தெரிவித்துப்பட்டயம் பெறும் அனைவரையும் வரவேற்று வாழ்த்துகிறேன்.

—15–8–73 அன்று ராஜாஜி மண்டபத்தில் ஆற்றிய உரை



# தமிழகத் தலைநகரில் விடுதலை நாள் விழா

இந்த ஆண்டு விடுதலை நாள், இந்தியாவின் இருபத்தாறுவது விடுதலைநாள் ஆகும். எனவே, இது வெள்ளி விழா, நிறைவு நாளாக நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது.

சென்னைக் கோட்டையில் 15—8—1973 அன்று காலை 8 மணி அளவில் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் நாட்டுக் கொடியை ஏற்றுவித்தார். அமைச்சர்களும், அரசு அலுவலாளர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கொடி வணக்கம் செலுத்தினார்கள்.

அன்று காலை 10 மணி அளவில் இராஜாஜி மண்டபத்தில் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களின் தலைமையில் விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசின் தாமிரப் பத்திரம், தமிழ்நாடு அரசின் தாமிரப் பட்டயம் ஆகியவை வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமையேற்ற ஆளுநர் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்:

''விடுதலைப் போராட்டத்தில் மூன்று மாதமோ ஆறு மாதமோ சிறை சென்றிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் தமிழக அரசு சிறப்புச் செய்ய முன் வந்துள்ளதை நினைத்து உள்ளம் பூரிக்கிறது.

'' ஜனநாயகத்திற்கு மேலும் வலுவூட்டவே கட்சிகள் துணை புரிய வேண்டும். பெற்ற சுதந்தரத்தை எப்பாடு பட்டாகிலும் பேணிக் காத்துப் போற்ற வேண்டும்.''

ஆளுநர் உரைக்குப் பிறகு, டாக்டர் விஜயலட்சுமியின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் உருவாக்கப்பட்டுள்ள 'விடுதலை வீரர்கள் யார், யார்?' என்ற இரண்டு தொகுப்புகளைக் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் வெளியிட ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொகுப்புகளை வெளியிட்ட நாவலர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''மைய அரசின் வேண்டுகோளுக்கு இணங்கத் தமிழ்நாட்டு விடுதலை வீரர்களின் வரலாற்றுத் தொகுப்புப் பணி 1964–ஆம் ஆண்டே மாநில அரசால் தொடங்கப்பெற்றது. பதினையாயிரத்திற்கு மேற்பட்ட விடுதலை வீரர்களின் வரலாற்றுக் குறிப்புகளைக் கோவைப்படுத்தித் தொகுத்து வெளியிடக் குழு ஒன்று நிறுவப்பட்டது. குறிப்புகளை மூன்று தனித்தனித் தொகுப்புகளாக வெளியிட முடிவெடுக்கப்பட்டு இன்று இரண்டு தொகுப்புகள் வெளியிடப்படுகின்றன. இந்தத் தொகுப்பு நூல்கள் வருங்காலத் தலைமுறையினரின் உணர்ச்சிக் களஞ்சியமாகத் திகழும் என்று நான் நம்புகிறேன்''

அதன்பிறகு, முதல்வர் கலைஞர் அவர்கள் விடுதலை வீரர்களுக்குத் தாமிரப் பத்திரமும் தாமிரப் பட்டயமும் அளித்து உரை யாற்றினார்கள். (முதல்வரின் உரை முந்திய பக்கங்களில் வெளியாகியுள்ளது).

இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 80 வயது நிறைந்த கருப்பையாத் தேவர் மற்றொருவரின் துணையோடு சிரமத்துடன் மேடைக்குச் செல்ல முயன்றபோது, அவரது நிலையை உணர்ந்த முதல்வர் கலைஞர் அவர்கள் மேடையை விட்டுக் கீழே இறங்கிச் சென்று அந்த முதியவருக்குத் தாமிர பத்திரத்தை வழங்கிய காட்சி, முதல்வரின் இரக்க உள்ளத்தை எடுத்துக் காட்டியது.

இந்திய நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு புதுமையைத் தமிழகம் செய்துள்ளது.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடி ஏந்திய நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அமைத்த இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த வீரர்களுக்குத் தமிழக அரசு தாமிர பட்டயம் வழங்கிப் பெருமைப் படுத்தியதுதான் அந்தச் சிறப்பு.

விருது பெற வந்த இ.தே.ரா வீரர் சிலர் காக்கி உடையில் வந்து நின்று, 'சல்யூட்' அடித்து விருது பெற்ற நிகழ்ச்சி அனைவரின் இதயங்களையும் கவர்ந்து விட்டது.

பத்திரம், பட்டயம் பெற்றவர்களின் சார்பில் திரு ஆர்.வி. சாமிநாதன், எம்.பி, அவர்களும், சட்டமன்ற மேலவை உறுப்பினர் சக்திமோகன் அவர்களும் நன்றி தெரிவித்துப் பேசினர்.


திரு ஆர். வி. சாமிநாதன், தமது உரையில் குறிப்பிட்டார்:

'' தியாகிகளைப் போற்றிச் சிறப்பிப்பதில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை இந்த விழா தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

''நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்தில் ஆறு மாதத்திற்கும் குறைவாகச் சிறைத் தண்டனை பெற்ற தியாகிகளை இது வரை எந்த மாநில அரசும் சிறப்பிக்கவில்லை. தமிழ்நாடு அரசுதான் அவ்வாறு செய்திருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இதில் முந்திக் கொண்டுவிட்டார்.

நன்றி உரை—தமிழக அரசின் சாதனைக்குச் சூட்டிய பாராட்டு உரையாகத் திகழ்ந்தது—தமிழ்நாடு எல்லா நற்பணிகளிலும் பிறமாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்ற கருத்து மெய்யானதுதான் என்பதற்குச் சான்றுரையாக அமைந்தது.

மொத்தத்தில் பட்டயம் வழங்கும் விழா—தமிழக வரலாற்றுப் பட்டயத்தில் பாங்காக இடம் பெற்ற விழாவாக அமைந்துவிட்டது!



## இந்திய விடுதலை வெள்ளி விழா நிறைவு நாள்.

வெள்ளி
இந்திய நாட்டு விடுதலையின்
விழாவையொட்டி விடுதலைப் போரில் ஈடுபட்டு
6 மாதங்களுக்குக் குறையாமல் சிறை சென்ற
தியாகிகளைப் பாராட்டுமுகத்தான் அவர்களுக்
குத் தாமிர பத்திர விருது அளிக்க இந்திய அரசு
முடிவு செய்து, இதுவரை தமிழ்நாட்டில் 1922
தியாகிகளுக்குத் தாமிர பத்திரம் வழங்கப்பட்
டுள்ளது. 15-8-72-ல் தமிழ் நாடெங்கும்
நடைபெற்ற விழாவில் 553 தியாகிகள் தாமிர
பத்திரம் பெற்றனர்.

சுதந்திரப் போரில் ஈடுபட்டுள்ள எல்லா
தியாகிகளுக்கும், அவர்கள் சிறைத் தண்டனை
அனுபவித்த காலவரம்பு பாகுபாடின்றி தாமிர
பத்திரம் வழங்க வேண்டுமென்று பல
கோரிக்கைகள் வந்தன. இக்கோரிக்கைகளுக்
கிணங்க, விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத்
தளர்த்தி, எல்லோருக்கும் தாமிர பத்திரம்
வழங்க வேண்டுமென்று இந்திய அரசை, இம்
மாநில அரசு கேட்டுக் கொண்டது. ஏற்கனவே
இத்திட்டத்தின்கீழ் பல பிரிவினர் சேர்க்கப்
பட்டுள்ளதாகவும் அதனல் விதிக்கப்பட்டுள்ள
நிபந்தனைகளைத் தளர்த்த இயலாதென்றும்
இந்திய அரசு அறிவித்துள்ளது. எனவே
தமிழக அரசே மூன்று மாதங்களுக்குக் குறை
யாமல் சிறைத் தண்டனை பெற்ற தியாகிகளுக்
கும், முன்னுள் இந்திய தேசிய இராணுவத்
தினர் அனைவருக்கும், வருமான வரம்புப்பாகு
பாடின்றிப் பட்டயம் வழங்க முடிவு செய்
தது.

15-8-73 அன்று எல்லா மாவட்டத்தலைநகர்
களிலும் மாவட்ட ஆட்சியாளர்கள் பட்டயம்
வழங்கினர்கள். சென்னை ராஜாஜி மண்டபத்
தில் நடைபெற்ற விழாவில் ஆளுநரின் தலைமை
யில் தமிழக முதல்வர் அவர்கள் பட்டயம்,
தாமிர பத்திரம் விருதுகளை வழங்கினர்கள்.

15-8-73 அன்று நடைபெற்ற விழாவில்
மாவட்ட வாரியாக தாமிர பத்திரம், பட்டயம்
பெற்ற தியாகிகளின் பட்டியல் விவரம்
வருமாறு:—

## 15-8-1973 அன்று தாமிர பத்திரம் பெற்ற தியாகச் செம்மல்கள்.

| | மாவட்டம். | | 25-7-73 வரை. | 15-8-73 அன்று. |
|---|---|---|---|---|
| 1. | சென்னை ... | ... | 227 | 16 |
| 2. | செங்கற்பட்டு | ... | 79 | 1 |
| 3. | வட ஆர்க்காடு | ... | 157 | 23 |
| 4. | தென் ஆர்க்காடு | ... | 79 | 1 |
| 5. | மதுரை ... | ... | 204 | 34 |
| 6. | இராமநாதபுரம் | ... | 206 | 41 |
| 7. | திருச்சி ... | ... | 128 | 7 |
| 8. | தஞ்சாவூர் | ... | 216 | 21 |
| 9. | சேலம் ... | ... | 115 | 9 |
| 10. | தர்மபுரி ... | ... | 28 | 6 |
| 11. | திருநெல்வேலி | ... | 151 | 11 |
| 12. | நீலகிரி ... | ... | 20 | ... |
| 13. | கன்னியாகுமரி | .. | 18 | 19 |
| 14. | கோயம்புத்தூர் | ... | 294 | 64 |
| | | மொத்தம் | 1,922 | 253 |

## 15-8-73 அன்று பட்டயம் பெற்ற தியாகச் செம்மல்கள்.

| | மாவட்டம். | | எண்ணிக்கை. |
|---|---|---|---|
| 1. | சென்னை | ... | 274 |
| 2. | செங்கற்பட்டு | ... | 127 |
| 3. | வட ஆர்க்காடு | ... | 89 |
| 4. | தென் ஆர்க்காடு | ... | 246 |
| 5. | மதுரை | ... | 200 |
| 6. | இராமநாதபுரம் | ... | 1,050 |
| 7. | திருச்சி ... | ... | 516 |
| 8. | தஞ்சாவூர் | ... | 1,652 |
| 9. | சேலம் ... | ... | 183 |
| 10. | தர்மபுரி ... | ... | 27 |
| 11. | திருநெல்வேலி | ... | 214 |
| 12. | நீலகிரி ... | ... | 19 |
| 13. | கன்னியாகுமரி | ... | 26 |
| 14. | கோயம்புத்தூர் | ... | 126 |
| | மொத்தம் | ... | 4,749 |



# காகம்



யாகம் என்பதோ ஆதிநாள் வழக்கம்!
யோகம் என்பதோ உழைப்பிலா உயர்வு!
தாகம் என்பதோ தண்ணீர் வேட்கை!
மேகம் என்பதோ மழைதரும் வள்ளல்!
மோகமே காதலின் முன்னுரை யாகும்!
காகமே! நீயோ கறுப்புப் பறவை!
ஆக்ரா வினிலோ அழகிய தாஜ்மகால்!
நீக்ரோ விடம்உன் நிறம்நான் காண்கிறேன்!
மணிப்புறா கிளியெலாம் மனிதனின் கைதிகள்!
நினைப்பினில் இதைநீ நிறுத்திடு! நீ, சு
தந்தரப் பறவை! தகுதிசேர் பஞ்ச
தந்திரக் கதைப்புகழ் தந்திரப் பறவைநீ!
நற்சொல்லை யெல்லாம் நயமுடன் உணர்ந்த
நச்செள்ளை என்னும் நம்தமிழ்ப் புலவரைக்
காக்கை! 'பாடுநீ!' எனச்சொன் னையா?
காக்கை பாடினி எனும்புகழ் பெற்றார்!
'கா! கா!' என்கிறாய்; காக்கச் சொல்வதாய்ப்
பாவேந்தர் எங்கள் பாரதி தாசனார்
உன்வாய்ச் சொல்லின் உட்பொருள் விளக்கினார்!
தென்தமிழ் வேதமாம் திருக்குறள் தந்தவர்
'காக்கை கரவா கரைந்துண்ணும்!' என்றுன்
வாழ்க்கைச் சிறப்பினை வகையாய்ப் புகழ்ந்தார்!
பகலிலே ஆந்தையைப் பதம்பார்ப் பாய்நீ!
திகிலுறும் வண்ணம் திருப்பித் தாக்கும்
இரவிலே உன்னை எரிவிழி ஆந்தை!
ஒருகுறள் மூலம் உணர்கிறோம் இதனை!

வீட்டின் மேலே வீற்றுநீ கரைந்தால்
நாட்டினர் தங்கள் நல்விருந் தினரை
எதிர்பார்க்க லாம்என இயம்பிடு கின்றனர்!
அதுசரி யில்லை! நீ ஆகார வேட்கையில்
கரைகிறாய்; சிறுவர்கைக் கல்லினைக் கண்டால்
மறைகிறாய்; பறந்து திரிகிறாய்; அலைகிறாய்!
பகுத்தறி வற்றநீ 'பகுத்துண்க!' என்று
பகுத்தறி வினர்க்கும் பகர்கிறாய்; உணர்கிறேன்!
ஆடோ ஆலின் தழைதனைத் தின்னும்;
மாடோ பசும்புல் மதித்துத் தின்னும்;
சாப்பிட முடியாச் சங்கடக் கசப்பு
வேப்பிலை ஒட்டகம் விரும்பித் தின்னும்!
இனிப்புக் கனிகளை எற்றுநீ பசியினைத்
தணிப்பதை விடுத்துத் தங்க நிறத்து
வேப்பங் கனியினை விரும்பித் தின்கிறாய்!
மாப்புயம் கொண்ட மையிருள் பறவையே
சின்னஞ் சிறுவர் சிறியகைக் கொண்டு
தின்னும் தீனிநீ திருட லாமா?
குயிலின் முட்டைஉன் கூட்டில்! நீயோ
அயலார் முட்டையை அடைகாக் கின்றாய்!
வாழ்க்கையில் உயர்ந்த வாய்ப்பினைப் பெறச்சிலர்
கால், கை பிடிப்பதைக் காக்காய் பிடிப்பதாய்
ஆக்கி உரைப்பார் அஞ்சா தேநீ!
காக்கைநீ பறந்திடு கவலை மறந்தே!




புலவர் பொன்னிவளவன்

# மீன் பிடித்தலைத் தொழில் மயமாக்குவோம்

## தொழிலமைச்சர் திரு மாதவன்

"பிழைப்புக்காக மீன் பிடித்தல்'' என்றிருந்த நிலைமை மாறி, ''மீன் பிடித்தல் ஒரு தொழில்'' என்ற நிலைமை விரைவாக மலர்ந்து வருகின்ற இந்த நேரத்திலே, தமிழ்நாடு அரசின் மீனளத் துறை, கடல் பொருள் உற்பத்தியை மேம்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் பற்றி விவாதித்து, பயன்தரும் முடிவு காண வேண்டும் என்ற நோக்குடன் ''தமிழ்நாடு கடல்வளப் பெருக்கக் கருத்தரங்கை'' ஏற்பாடு செய்திருப்பது அறிந்து மன மகிழ்வு அடைகின்றேன். பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பல்வேறு நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், தொழிலில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள நிருவாகிகளும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளதை அறிந்து என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொழிலின் பல்வேறு கூறுகளிலும் சிறந்த அனுபவம் பெற்றுள்ள நீங்கள் இரண்டு நாள் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில், தமிழ்நாட்டின் கடல் வளப் பெருக்கத்திற்கு உகந்த உத்திகளைப் பயன்படுத்தித் தமிழ்நாடு அரசு திட்டமிடுவதற்குப் பயனுள்ள யோசனைகளைக் கூறி உதவுவீர்கள் என்று நம்புகின்றேன்.

நீண்ட காலமாகப் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மீன்பிடித்தல் ஒரு பிழைக்கும் வழியாகவே இருந்து வந்துள்ளது. மீன் பிடித்தலை ஒரு தொழிலாக—நவீன மயமாக்கும் முயற்சியில் நாம் விரைவாக மேற்கொள்ளும் மேம்பாட்டுப் பணிகள், பரம்பரையாக மீன் பிடித்து வாழ்ந்து வரும் மீனவப் பெருமக்களுக்குப் பெருஞ் செலவை ஏற்படுத்துவனவாக இருக்கக் கூடாது! மீன்பிடிக்கும் தொழிலை நவீன மயமாக்குவதால் மீனவ சமுதாயத்தினரின் வாழ்வு பாதிக்கப்படாமல் இருக்க வகை செய்யும் முகத்தான், மேம்பாட்டுத் திட்டங்களின் அமைப்பில் பெரும்பாலான மீனவப் பெருமக்கள் பயன்பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. இதன் காரணமாகவே, மீன் பிடிப்பதற்காக விசைப் படகுகளையும், பிடிக்கும் மீன்களின் அளவு கணிசமாக உயருவதற்காக இதர நவீன சாதனங்களையும மீனவப் பெரு மக்களுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு மீனவர்களுக்குக் கடனுதவி செய்தும் வருகிறது. பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாத்துச் சேமித்து வைப்பதற்காகச் சில குளிர்பதன நிலையங்களையும் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

நமக்கு மிக மிக இன்றியமையாது தேவைப்படும் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும், உள்நாட்டுத் தேவையை ஈடு செய்வதற்கும் தேவையான உபரி நிலைமையை உருவாக்க வேண்டி மீன் பிடிக்கும் தொழிலை நவீன மயமாக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நேரம் வந்து விட்டது. இக்குறிக்கோளை எய்திடக் கடலோரப் பகுதிகளிலும், ஆழ்கடல் பகுதிகளிலும் பெருமளவில் மீன் பிடிப்பதற்கு உதவிடும் விசைப் படகுகளும், இழுவைகளும் நமக்கு ஏராளமாகத் தேவைப் படுகின்றன.

கடல் மற்றும் உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்குவதற்குரிய வசதியையும், வாய்ப்பினையும் தமிழ்நாடு நிறையப்பெற்றுள்ளது. 1,000 கிலோ மீட்டர் கடற்கரையும் 35,000 சதுர கிலோ மீட்டர் கடற் பரப்பையும் பெற்றுள்ளதால், தமிழ்நாட்டில் கடல் மீன் வளத்தைப் பெருக்கப் பெரும் வாய்ப்பு உள்ளது! மேலும், தமிழ்நாட்டில் உள்நாட்டு மண்வளத்தைப் பெருக்குவதற்குரிய ஆதாரங்களான—எப்பொழுதும் நீர் தேங்கி நிற்கக்கூடிய ஏராளமான பெரிய நீர்த்தேக்கங்களும், பருவ மழைக் காலத்தில்



நீர் பிடிக்கக் கூடிய குளங்களும், சில ஆற்றுப் பள்ளத் தாக்குகளும், உப்பங் கழிகளும் நிறைந்துள்ளன. நீண்டு கிடக்கும் நமது கடலோரப் பகுதிகளில் மட்டுமே தற்போது மீன் பிடிக்கப்பட்டு வருகிறது. கடற்கரை ஓரத்திலும், கடற்கரையின் வெகு தூரத்தில் உள்ள ஆழ்கடலிலும் இருந்து 9 இலட்சம் டன்னிற்கும் மேற்பட்ட அளவு மீன் பிடிக்க முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பெரும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவே, சாதாரண முறையில் மீன் பிடிக்கப் பட்டு வருவதற்கு உதவும் வகையிலும், படிப்படியாகக் கடல் மீன் பிடிப்பதை இயந்திர மயமாக்கிடவும் வழி வகுக்கும் ஒரு பேராவல் திட்டத்தைத் தமிழ்நாடு துவக்கியுள்ளது.

**இது வரை மீன் பிடிக்கப் படாத இடங்களைக் கண்டு பிடித்து மிகவும் திறமையானதும் அதே நேரத்தில் குறைந்த செலவில் செய்யப்படக் கூடியதுமான படகுகள், 'கியர்' மற்றும் இதர சாதனங்களை உருவாக்குவது, அந்நியப் பொருள்களையே நம்பி இருக்காமல், நம் நாட்டிலேயே தகுந்த இறக்குமதி மாற்றுப் பொருள்களைக் கண்டு பிடித்து மீன் பிடிப்பதில் இயந்திர மயமாக்குவதை அதிகப்படுத்துவது ஆகியவற்றின் மூலம் கடல் மீன் பிடிப்பைப் பெருக்குவதே நமது கொள்கையாகும்.** இவைகளின் மூலம் கடலில் வெகுதூரம் சென்று, ஆழ்கடலில் உள்ள மீன்களையும் தற்பொழுது பிடிக்கப்படுவதைவிட அதிக அளவில் பிடிக்க முடியும். உள்நாட்டு உணவுத் தேவைக்கான மீன்களைப் பாதுகாத்தல், பதப்படுத்தல் ஆகியவற்றில் தொழில் நுட்பங்களை மேம்படுத்துவது, சேதமாவதைக் குறைப்பது, பொருளாதாரச் சிறப்பற்ற மீன் வகைகளை முழு அளவில் பயன்படுத்துவது போன்றவற்றில் மிகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மீன் பிடிக்கும் தொழிலில் மேம்பாடு அடைந்துள்ள நாடுகளில் மீன் பிடிக்கும் தொழிலை விரிவுபடுத்துவதற்குப்பல்வேறு நோக்கங்கள் இருக்கலாம். பொருளாதார சமநிலைப் படுத்துவதும், கடலோரப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் அந்நோக்கங்களில் இடம் பெற்றிருக்கலாம். அதிக அளவில் உணவு கிடைக்கச் செய்வதே அந்த நோக்கங்களில் மிகவும் முக்கியமானதாகும். வளர்ந்து வரும் நாடுகளில் வாழும் மக்களின் உணவில் மீன் முக்கிய இடம் பெறுகிறது. எனவே, மீன்களைப் பிடிப்பது, பதப்படுத்துவது, விற்பனை செய்வது ஆகியவற்றில் மேம்படுத்துவதும், நவீனப் படுத்துவதும் மிகவும் இன்றியமையாததாக உள்ளன. இம்மேம்பாட்டுப் பணிகளில் பலவற்றிற்கு அரசின் ஊக்குவிப்பும், சிலவற்றிற்கு முதலீடும் தேவைப் படுகிறது!

மேற்கூறிய குறிக்கோள்களை எய்தித், தமிழ்நாடு அரசு சிறப்பாக இரு தொழில்களை வளர்த்து வருகிறது. அவைகளின் மூலம், நமது கடல் பகுதிகளில் ஆழ்கடல் மீன் பிடிப்பதை ஊக்குவிப்பதற்கு வழிகோல முடியும்! விசைப் படகுகளுக்கு டீசல் இயந்திரங்கள் ஏராளமாகத் தேவைப்படுவதால், கடலில் பயன்படுத்துவதற்குரிய டீசல் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் திட்டத்தைத் துவக்கிடத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் மூலதனமிட வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் எண்ணூரில் துவக்கப் படக்கூடும். தமிழ்நாடு மேம்பாட்டு நிறுவனம் (TIDCO) இத்திட்டத்திற்கான அனுமதியை முன்பே பெற்றுள்ளதுடன், இத்திட்டத்தைத்துவக்கிட ஆவன செய்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான தகுந்த தொழில் நுட்பக் கூட்டுறவும் பெறப்படும்.

**தற்பொழுது, கடலோர மீன்பிடிப்பிலிருந்து, ஆழ் கடல் மீன் பிடிப்பில் கவனம் செலுத்தப்படுகிறது.** ஆழ் கடல் மீன் பிடிக்க உதவும் இழுவைகள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. இத்தகைய இழுவைகளைத் தொடர்ந்து இறக்குமதி செய்வதால், நமது அந்நியச் செலாவணி பாழாகிறது, ஆழ்கடல் மீன் பிடிக்க உதவும் இழுவைகளை நாமே தயாரித்துக் கொள்ளும் வகையில் மண்



டபத்தில் அத்தகைய இழுவைகளை உற்பத்தி செய்ய தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அந்த நிலையம் கடலில் மீன்பிடிக்க உதவும் விசைப்படகுகளைப் பராமரித்தல், பழுது பார்த்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும். அதன் மூலம் அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியும். அந்நிலையத்தை அமைத்திட ஏறத்தாழ 1.5 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரு நிலையங்களும் அமைக்கப்படுவது, தமிழ்நாட்டில் இயந்திரம் மூலம் மீன் பிடிப்பதில் துரித முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும்!

மீன் பிடித்தலைப் பெருமளவு இயந்திரமயமாக்க, படகுகள் வந்து தங்குவதற்குரிய வசதிகள் தேவை. இத்தேவையை ஈடு செய்யவே தமிழ்நாடு அரசு மீன் பிடி துறைமுகங்களை அமைப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. படகுகள் கரை வந்து சேருவதற்கும் தங்குவதற்கும் உரிய வசதிகளை விரிவு படுத்த ஐந்தாவது திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மீனின் அளவை நாம் அதிகப் படுத்தும் பொழுது, மீன்களைப் பதப்படுத்திச் சேமித்து வைக்கப் போதிய வசதி இல்லாத பிரச்சினை எழுகிறது. குளிர்பதன நிலையங்கள் ஏராளமாக அமைக்கப்படுமானால், இப்பிரச்சினை தீர்ந்துவிடும்! 'சிப்காட்' எனப்படும் மாநிலத் தொழில் ஊக்குவிப்புக் கழகம் சென்னைக்கு அருகில் ஒரு குளிர் பதன நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு நிதி உதவி செய்யவிருக்கிறது. இத்திட்டம் குளிர்பதன நிலையம் அமைப்பதுடன், ஆழ்கடல் மீன் பிடிக்க உதவும் இழுவைகளை வாங்கவும் வழி வகுக்கும். 28 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் பயனாய் 180 மெட்ரிக் டன் இறால்களை ஏற்றுமதி செய்யவும், 350 மெட்ரிக் டன் இதர வகை மீன்கள், 400 மெட்ரிக் டன் உப்பிட்ட மீன்கள். ஆகியவைகளை உள்நாட்டில் விற்பனை செய்யவும் இயலும்.



1973-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் புழக்கத்திலிருந்த ரூபாய் நோட்டுக்களின் மதிப்பு ரூ. 4,915 கோடி ஆகும். இந்தத் தொகையில், 224 கோடி மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் வங்கிகளிடமிருந்தன. மீதமுள்ள 4,691 கோடி ரூபாய் நோட்டுகள் பொது மக்களிடம் புழக்கத்தில் இருந்தன.

* * *

வங்கிகள் நாட்டுடைமை செய்யப்பட்ட பொழுது மொத்தம் 8,262 வங்கி அலுவலகங்கள் இருந்தன. 1972-ஆம் ஆண்டில் 14,739 வங்கி அலுவலகங்கள் இருந்தன. அதாவது வங்கிகள் நாட்டுடைமையாகிய பின்னர் 6,477 புதிய கிளைகள் தோன்றியுள்ளன. 1973-ஆம் ஆண்டில் 1,500 கிளைகளும், 1974ல் 2,000 கிளைகளும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; மொத்தத்தில் 1974-ல் 18,000 கிளைகள் இருக்கும்.

* * *

குசராத்தில் ஒரு சலவைத் தொழிலாளியின் கழுதை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்து விட்டது. அது ஒன்றையே நம்பியிருந்த அந்தத் தொழிலாளி மிகவும் துன்பப்பட்டார். வேறொரு கழுதை வாங்குவதற்குப் பணம் கடன்தரவேண்டுமென்று ஒரு வங்கியில் மனுச் செய்தார். வங்கி, அவருக்குப் பணம் தருவதற்கு உடனடியாகச் சம்மதித்துப் பணமும் தந்தது. சலவைத் தொழிலாளி அந்தப் பணத்தைப் பெற்றுக் கழுதை வாங்கிக், குறித்த தவணைகளில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டாராம்.

ஏற்றுமதி செய்வதற்குப் பெரும் வாய்ப்பு உள்ளமையே மீன் பிடிக்கும் தொழிலின் சிறப்பாகும் தமிழ்நாட்டிலிருந்து 1972-ஆம் ஆண்டில் 5.41 கோடி ரூபாய் மதிப்புள்ள 26 இலட்சம் கிலோ மீன்கள், குளிர்பதனப் படுத்தப்பட்ட மீன்கள், இதர கடல் உற்பத்திப் பொருள்களின் தயாரிப்புகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1972-ஆம் ஆண்டில் 41 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 14 இலட்சம் கிலோ உலர்ந்த கடல்வளப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திட்டக் குழுவின் மீனளத் துறை பற்றிய செயல் அணி, ஐந்தாவது திட்டக் காலத்தில் 33.75 கோடி ரூபாய், ஆறாவது திட்டக் காலத்தில் 75.7 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் உணவுகளை ஏற்றுமதி செய்ய முடியும் என்று மதிப்பிட்டுள்ளது இப்பேராவல் குறிக்கோளை எய்திட நாம் பெரும் முயற்சி செய்திட வேண்டும். இந்த இலக்கினை எய்திட, தமிழ்நாடு அரசு அனுபவ சாத்தியமான திட்டத்தைத் தயாரித்திடுவதற்குத் தகுந்த யோசனைகளை இக்கருத்தரங்கு தெரிவிக்கும் என நம்புகின்றேன்.

மீன் பிடிக்கும் தொழிலை சரியான வழியில் நவீன மயமாக்கினால், மீன்பிடிக்கும் தொழில் தமிழ்நாட்டின் பொதுவான பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுவதுடன் நம் நாட்டு மக்களுக்கு மிகமிகத் தேவைப்படும் புரதச் சத்தைத் தரும் ஆதாரமாகவும், அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டவும், ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், கிராமப்புற வருவாயை உயர்த்தவும், பொதுவாக, சமூக - பொருளாதாரத்தேவைகளின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையக்கூடும்.

(தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள் சென்னை இராஜாஜி அரங்கில் 1–8–1973 அன்று நடைபெற்ற கடல் வளப் பெருக்கக் கருத்தரங்கில் சிறப்பு மலரை வெளியிட்டு ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)

# மீன் பிடித்தலை இயந்திரமயமாக்குவோம்

அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து



தமிழ்நாடு கடல் வளம் மிகுந்தது என்பது உலகறிந்த உண்மையாகும். நாம் ஏறத்தாழ 1,000 கிலோ மீட்டர் கடற்கரையைப் பெற்றுள்ளோம். சற்றேறக் குறைய ஒரு இலட்சம் மீனவப்பெருமக்கள், கடலில் மீன் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 30,000 கட்டுமரங்களும், ஓடங்களும், மீன் பிடிக்க உதவும் இதர பழமையான சாதனங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் 1,300 சிறு விசைப் படகுகளும் உள்ளன.

கடல் மீன் பிடிப்பதில் கேரளா, மகாராட்டிரம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு உள்ளது. கடல் மீன் மற்றும் உள்நாட்டு மீன் ஆகிய இரண்டின் உற்பத்தியையும் சேர்த்து நோக்கினால், இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் 16 சத அளவைத் தமிழ்நாடு வழங்குகிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

மீனளப் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும் தமிழ்நாடு ஓரளவுக்குச் சிறப்பான இடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டின் எருல்களும், செங்கெருல்களும் தவளைக் கால்களும், தரமான மீன்களும், உலர்ந்த மீன்களும் நாளுக்கு நாள் உலகமெங்கும் விற்பனை வாய்ப்பைப் பெற்று வருகின்றன; அதுவும்குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஜப்பானிலும் நல்ல விற்பனை வாய்ப்பைப் பெற்றுள்ளன.

மீன்களைப் பதப்படுத்தி, குளிர்பதனப் படுத்துவதற்கு உள்ள வசதிகளைப் பொறுத்தவரையில், கேரளாவிற்கு அடுத்த நிலையிலேயே நாம் இருந்து வந்த போதிலும், அண்மைக் காலத்தில் இத்தகைய வசதிகள் பொதுத் துறை மூலமாகவும், தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் பெருமளவில் அமைக்கப்பட்டு வருகின்றன. சில திங்களுக்கு முன்பு, மண்டபத்தில் மீன் தூள் தயாரிக்கும் நிலையத்தைத் துவக்கிவைக்கும் பொழுது, நமது அன்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், கூடிய விரைவில் நமது கடலோரப் பகுதி எங்கும் விசைப்படகுகளும், பதப்படுத்தல் மற்றும் குளிர்பதனப் படுத்தும் நிலையங்களும் நிறைந்திருக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்' அவருடைய விருப்பத்தை எவ்வளவு குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியுமோ, அவ்வளவு குறுகிய காலத்தில் நிறைவேற்றிட நாங்கள் எல்லா வகையிலும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறோம்.


நாள்தோறும் ஐம்பது டன் கச்சா மீன்களிலிருந்து 10 டன் உற்பத்திப் பொருள் தயாரிக்கக்கூடிய—இந்தியாவிலேயே மிகப் பெரிய— மீன்தூள் தயாரிக்கும் நிலையத்தை நாம் பெற்றுள்ளோம். இந்நிலையம் நார்வே நாட்டு உதவியுடன் மண்டபத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

நமது மீனவர்களிடையே மீன்பிடிக்க உதவும் 'கியர்' களில் நைலான் உபயோகம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. மீனளத் துறையில் தொழில் நுட்ப மாற்றங்கள் தோன்றிடத் துவங்கியுள்ளன!

இவ்வாறாக, மீன் பிடிப்பது விரைவாகத் தொழில்மயமாகும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பரம்பரையாக மீன் பிடிப்பதில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் பெரும்பாலும் கடலோரப் பகுதிகளிலேயே மீன் பிடித்து வருகின்றார்கள். அவர்களுடைய நடமாட்டம், வேகம் விசை ஆகியவை, அவர்கள், மீன்பிடிக்கப் பயன்படுத்தும் சாதனங்களுக்கு ஏற்பக் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாகக் கடலில் மீன் பிடிக்கும் பெரும்பாலான மீனவர்களின் பொருளாதார நிலைமை தொடர்ந்து கீழ்த்தரமாகவே உள்ளது. பரம்பரையாகக் கடலில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் கடலில் ஏறத்தாழ 10 'பாத்தம்' ('பாத்தம்' என்பதுகடல் மைல் தூரத்தைக் குறிக்கும் சொல்லாகும்) அளவு தூரத்திற்கே சென்று மீன் பிடித்து வருகின்றனர். இத்தூரத்திற்கும் மேலே சென்று, அவர்கள் அதிக மீன் பிடிக்க வேண்டுமானால், அதிக சக்தியும், கடல் நீர் அரிப்பையும், கடல் அலை ஆட்டத்தையும் தாங்கிக் கொண்டு, நன்கு இயங்கக் கூடியதுமான பெரிய விசைப் படகுகளைப் பயன்படுத்த வேண்டும்.

மீன்வளவு ஆய்வு மூலம், 10 'பாத்தம்' தூரத்திலிருந்து 100 பாத்தம் தூரம் வரையான ஆழ்கடலிலேயே கடலின் ஆழத்தில் வாழக்கூடிய மீன்களையும், கடலின்மேல் அல்லது நடுமட்டத்தில் வாழக்கூடிய மீன்களையும் பெருமளவில் பிடிக்க முடியும் என்பது தெளிவாகியுள்ளது. இவ்வாறு மீன்பிடித்தால், கடலின் அடிமட்டத்தில் வாழக் கூடிய மீன் வகைகளைப் பொறுத்தவரையில் தற்பொழுது கிடைக்கும் அளவைவிட 3 மடங்கு மீன் பிடிக்க முடியும் என்று தெரிய வருகிறது. அதுபோலவே தற்பொழுது கிடைக்கும் மேல்மட்ட அல்லது நடு மட்டத்தில் வாழக்கூடிய மீன்களின் அளவைவிட 4 முதல் 5 மடங்கு மீன் பிடிக்க முடியுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கட்டு மரங்களும் ஓடங்களும் செல்ல முடியாத தூரத்

தில் உள்ள ஏராளமான மீன்களைப் பிடித்திட மீன் பிடிக்கும் சாதனங்களை நவீன மயமாக்க வேண்டியது அவசியம் என்பதை ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.


'பாசின்' வலையை முதல்வர் கலைஞர் பார்வையிடுதல்

இதன் காரணமாகவே, வாடகைக்கொள்முதல் திட்டத்தின் அடிப்படையில் சிறுசிறு விசைப் படகுகளை வழங்கிடும் திட்டத்தைப் புகுத்தினோம். இத்திட்டம் பெரும் வெற்றி அளித்துள்ளது. இதனால் மீனவர்கள் தொழில் நுட்ப மாற்றங்களைப் பயன்படுத்திக்கடலில் நெடுந்தூரம் சென்று மீன் பிடிக்க இயலுகிறது. சென்னை, செங்கற்பட்டு, மாவட்ட மீனவர் கழகமும், திருநெல்வேலி மாவட்ட மீனவர் கழகமும் வேளாண்மை மறுநிதிக் கழக நிதி உதவியுடன்—அரசின் வாடகைக் கொள்முதல் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தின் கீழ்—சிறு சிறு விசைப்படகுகளை வழங்கி வருகின்றன. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சிறுசிறு விசைப்படகுகளை வழங்குவதற்கு உரிய திட்டங்களும் தயாரிக்கப்பட்டுவருகின்றன. வேளாண்மை மறுநிதிக் கழகத்திலிருந்து கிடைக்கும் நிதி உதவியையும் இத்திட்டங்களுக்குப் பயன்படுத்திட எண்ணியுள்ளோம்.

ஆண்டாண்டுக் காலமாக அலைகடலில்மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்டு வந்த கட்டுமரங்களை எல்லாம் குறுகிய காலத்தில் அகற்றிவிட்டு, அவைகளுக்குப் பதிலாகச் சிறு சிறு விசைப் படகுகளைக் கொண்டு வருவதென்பது மிகவும் சிரமமான செயலாகும்.

ஏனெனில் இதற்குப் பெருமளவில் பண முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே, கட்டு மரங்களின் மேலும், உள்ளும் இயந்திரங்களைப் பொருத்தி அதன் மூலம் அதிக சக்தி, வேகம், இயக்கம் ஏற்படுத்திக் கொள்ளும் திட்டத்திலும அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. இது பற்றிய பரிசோதனைத் திட்டம் ஒன்று இந்திய—பெல்ஜியம் மீனளத் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அப் பரிசோதனைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் இத் திட்டத்தை மற்ற மாவட்டங்களிலும்—குறிப்பாக தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களிலும்— விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்.

சிறு சிறு விசைப்படகு மூலம் 20 'பாத்தம்' அளவுக்கு மேல் கடலில் சென்று மீன்பிடிக்க முடியாது. அதற்கும் மேல் அதிக தூரம் சென்று மீன்பிடிக்க, குதிரை ஓட்டச் சக்தி அதிகம் உடைய பெரிய இயந்திரப் படகுகள் தேவைப்படுகின்றன. நமது நாட்டில் உள்ள மிகப் பெரிய இயந்திரப் படகு 57 அடி நீளம் உடையதாகும். ஆனால் அது மன நிறைவு தருகின்ற வகையில் இயங்கவில்லை. குறிப்பிட்ட அளவு பெரிய இயந்திரப் படகுகளை இறக்குமதி செய்ய இந்திய அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளது. நம் நாட்டிலுள்ள எந்தப் படகு கட்டும் நிலையமும், மிகப் பெரிய இழுவையை (Trawlers) உற்பத்தி செய்யவில்லை. ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்கு உதவும் பெரிய விசைப் படகுகளும், சாதனங்களும் கிடைக்காததனாலும், அவைகளை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதனாலும், தமிழ் நாட்டிலுள்ள மீனவர்கள் ஆழ் கடலில் மீன் பிடிக்க முடியாமல் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். ஆழ்கடலை நாம் பயன்படுத்த முடியாதிருக்கும் பொழுது, நமது ஆழ்கடல் மீன் பிடி தளங்களில், அயல் நாட்டினுடைய பெரிய இயந்திரப் படகுகள் தொடர்ந்து மீன் பிடித்து வருவதாகக் கேள்விப் படுகின்றோம். எனவே, நமது மக்களுக்குரிய விலை மதிப்புள்ள மீன் உணவு, ஏற்றுமதி மூலம் கிடைக்கும் கிட்டற்கரிய அந்நியச் செலாவணி ஆகிய இரண்டையும் நாம் இழந்து விடுகின்றோம். இது போன்ற நிலைமையை நீண்ட காலத்திற்கு நீடிக்க விடக் கூடாது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். எனவே, 'இந்தச் சந்தர்ப்பத்தில் ஆழ் கடல் பகுதிகளில் இருந்து கடல் வள உற்பத்தியைப் பெருக்குவதற்காக — தகுந்த பெரிய இயந்திரப் படகுகளைக் கட்டுப்பாடின்றித் தாராளமாக இறக்குமதி செய்து கொள்ள இந்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ' கடல் பயன்பாடு மற்றும் இயந்திரம் மூலம் மீன் பிடித்தல்' பற்றிய அனைத்து இந்திய கருத்தரங்கைத் துவக்கி வைத்தபோது, மண்டபத்தில் இழுவைப் படகு தயாரிக்க ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பெனியை அமைக்க விருப்பது பற்றி குறிப்பிட்ட அறிவிப்பையும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் நினைவுக்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன். இதன் தொடர்பாக நாங்கள் குறிப்பிடத்

தகுந்த முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மண்டபத்தில் மீன்பிடிக்க உதவும் இழுவைப் படகுகள் தயாரிக்கத் தனியார்களும் அரசும் கூட்டு சேர்ந்த ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பெனியை அமைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்திய அரசின் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரிய அலுவலர்களும், இந்திய அரசின் மேல் நிலை அலுவலர்களும் மண்டபத்தில் உள்ள வசதிகளைப் பார்வையிட்டுள்ளனர். அவர்கள் மண்டபத்தில் இழுவைப் படகு தயாரிப்பதற்குள்ள நல்ல வாய்ப்புக் கண்டு திருப்தியும் அடைந்துள்ளனர். கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியத்திலிருந்து இறுதி அறிக்கை கிடைத்த பிறகு, தமிழ்நாடு அரசு இதுபற்றிய மேல் நடவடிக்கை எடுக்க விருக்கின்றது.

கடலில் பிடிக்கப்பட்ட மீன்களைப் பதப்படுத்துவதற்கும், குளிர் பதனப் படுத்துவதற்கும் போதிய வசதி தமிழ்நாட்டில் இல்லாததனால், தமிழ்நாட்டில் கடல்களில் பிடிக்கப்பட்ட எறால்களும், செங்கெறால்களும் பதப்படுத்துவதற்காகவும், ஏற்றுமதி செய்வதற்காகவும் கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. மீன்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான இட வசதி கொண்ட சரக்குக் கப்பல்கள் சென்னைத் துறைமுகத்திற்கு வருவதில்லை. பதப்படுத்துவதற்கும், குளிர் பதனப் படுத்துவதற்கும் உள்ள வசதிகளைப் பெருக்கியும், சரக்குக் கப்பல்கள் சென்னைத் துறைமுகத்திற்கு வருவதற்கு ஏற்பாடு செய்தும், ஏற்றுமதி செய்வதற்குள்ள இரு இடர்பாடுகளையும் தவிர்த்திட வேண்டியுள்ளது. இவ்விரு வகையிலும் ஆவன செய்யத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இம் முயற்சிகளில் தமிழ்நாடு அரசு வெற்றிபெறும் என்று நம்புகின்றோம்.

தமிழ்நாட்டில் மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதற்காக, சிறந்த முறையில் ஏற்றுமதி செய்பவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை நிறுவியுள்ளோம். மீன் ஏற்றுமதி செய்பவர்கள் தமிழ்நாடு அரசு அளிக்கும் வசதிகளையும், சலுகைகளையும் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டிற்கு வந்து, பெருமளவில் தமிழ்நாட்டிலிருந்து மீன் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை அமைப்பார்கள் என்று நம்புகின்றேன்.

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்வதே, அண்மைக் காலம் வரை நம்முடைய முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்து வந்துள்ளது. பல்வேறு காரணங்களில் இந்த ஏற்றுமதி விரைவாகக் குறைந்து வருகிறது. இது தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்துள்ளது. நம் நாட்டிலிருந்து இலங்கைக்குப் பெருமளவு ஏற்றுமதி செய்வது பற்றிய பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒரு குழு அண்மையில் இலங்கைக்குச் சென்றது. இலங்கைக்குப் பெருமளவில் உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்வதற்கும், நம்முடைய பொருளாதார நிலைமை பாதிக்கப்படாமல் **இருக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.**

**(சென்னை இராசாசி அரங்கில் 1—8—1973 அன்று நடைபெற்ற கடல் வளப் பெருக்கக் கருத்தரங்கின் துவக்க விழாவில் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்).**

## பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டாமா ?

சென்னை நகரில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 31 இலட்சமாகும். 1971—ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கில், இந்தத் தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி, இந்திய மக்கள் தொகை 54 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரத்து 809 ஆகும். இவர்களில் 80 சதவிகிதம் பேர் (100-க்கு 80 பேர்) கிராமங்களிலும், 20 சதவிகிதம் பேர் நகரங்களிலும் வசிக்கிறார்கள்.

சென்னை முதலான 9 பெரிய நகரங்களின் மக்கள் தொகை வருமாறு :

கல்கத்தா 70,31,000. பம்பாய் 59,71,000.
டெல்லி 36,47,000. சென்னை 31,70,000.
ஐதராபாத் 17,96,000. ஆமதாபாத் 17,42,000.
பெங்களூர் 16,54,000. கான்பூர் 12,75,000.
புனா 11,35,000.

உலகத்திலேயே அதிக மக்கள் வசிக்கும் பெரிய நகரம் நியூயார்க் (அமெரிக்கா) ஆகும். நியூயார்க் நகர மக்கள் தொகை 1 கோடியே 15 இலட்சம். 7-வது பெரிய நகரம் கல்கத்தா. 12-வது பெரிய நகரம் பம்பாய்.

இந்தியாவில் பெண்களைவிட ஆண்களே அதிகம். ஆண்களின் எண்ணிக்கை 28 கோடியே 39 இலட்சத்து 36 ஆயிரத்து 614. பெண்களின் எண்ணிக்கை 26 கோடியே 40 இலட்சத்து 13 ஆயிரத்து 195.

10 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 24 சதவிகிதமாகும். இப்போது அது 29½ சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

# நீலப் புரட்சிக்கு ஒரு தொலைநோக்குத் திட்டம்

ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரைப் பகுதியையும், ஆறுகள், நீர்த் தேக்கங்கள், ஏரிகள், குளங்கள், பெரிய கிணறுகள் போன்ற ஏராளமான உள்நாட்டு நீர் வளங்களையும் பெற்றுள்ளதால் தமிழ்நாடு கடல் மீனள வளமும், உள்நாட்டு மீனள வளமும் நிறைந்ததாக உள்ளது. பருவ மாறுபாடு இல்லாத ஆண்டுகளில் சராசரியாக 400 மில்லி மீட்டர் மழையைத் தமிழ்நாடு பெறுகிறது. நீண்டு கிடக்கும் நமது கடலோரப் பகுதிகளில் மட்டுமே கட்டு மரங்களையும், படகுகளையும், சிறுசிறு விசைப் படகுகளையும் பயன்படுத்தி மீன்பிடித்து வருகிறோம். தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இருந்தும், ஆழ்கடல் பகுதிகளில் இருந்தும் 9 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் மேற்பட்ட அளவு மீன்களைப் பிடித்திட முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் தற்பொழுது 2 இலட்சம் மெட்ரிக்டன்னுக்கும் குறைவான அளவு மீன்களே— பெரும்பாலும் கடலோரப் பகுதிகளில் இருந்தே பிடிக்கப் பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் மீன் உற்பத்தி 1950-ஆம் ஆண்டில் 1,19,900 மெட்ரிக் டன்னாக இருந்தது. இது 1960-ஆம் ஆண்டில், 1,50,900மெட்ரிக் டன்களாக உயர்ந்து, 1970-ஆம் ஆண்டில் 2,78,500 மெட்ரிக் டன்களாக மேலும் உயர்ந்தது. மீன் உற்பத்தி 1950 முதல் 1960 வரையான காலத்தில் ஆண்டிற்கு 2.6 சதமாகவும், 1960 முதல் 1970 வரையான காலத்தில் ஆண்டிற்கு 8.5 சதமாகவும் பெருகியுள்ளது. இவ்வுற்பத்தியில் கடல் மீன்களும், உள்நாட்டு மீன்களும் அடங்கும். 1950-ஆம் ஆண்டில் 85,900 மெட்ரிக் டன்களாக இருந்த கடல் மீன்பிடிப்பு, 1960-ஆம் ஆண்டில் 1,07,800 மெட்ரிக் டன்களாகவும், 1970-ஆம் ஆண்டில் 1,58,500 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்தது. கடல்மீன் உற்பத்தி 1950முதல் 1960 வரையான காலத்தில் ஆண்டிற்கு 2.5 சதமாகவும் 1960 முதல் 1970 வரையான காலத்தில் 4.7 சதமாகவும் உயர்ந்துள்ளது. உள்நாட்டு மீன்பிடிப்பு 1950-ஆம் ஆண்டில் 34,000 மெட்ரிக் டன்களாகவும், 1960-ஆம் ஆண்டில் 43,100 மெட்ரிக் டன்களாகவும், 1970-ஆம் ஆண்டில் 1,20,000 மெட்ரிக் டன்களாகவும்உயர்ந்துள்ளது. இவ்வுயர்வு முதல் பத்து ஆண்டுக்காலத்தில்ஆண்டிற்குச் சராசரியாக 2.7 சத அளவிலும் மறு பத்து ஆண்டுக் காலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 17.8 சதமாகவும் அமைந்துள்ளது.

### கடல் மீன் உற்பத்தி

முதல் பத்தாண்டுக் காலத்தில்கடல்மீன் உற்பத்தி ஆண்டிற்குச் சராசரியாக 2.5 சதமாகவும். மறு பத்தாண்டுக் காலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 4.7 சதமாகவுமே இருந்துள்ளதால், கடல் மீன் உற்பத்தி உயர்வு ஏறத்தாழ சீரான முன்னேற்ற நிலையிலே அமைந்துள்ளது எனக் கருதலாம். இச்சீரான முன்னேற்றத்திற்கு இயந்திரப் படகுகள், நைலான் வலைகள் ஆகியவைகளைப் புகுத்தியதும், கடலோர மீன்வள ஆய்வு நிலையம் மேற்கொண்ட ஆய்வின் பயனாக எறால்களும், செங்கெறால்களும் ஏராளமாக வாழும் இடங்களைக் கண்டு பிடித்தமையுமே காரணமாகும். இதன் காரணமாகவே, மீன்பிடிப்பு அளவு அதிகமாகியுள்ளது. கடலோர மீன்வள ஆய்வு நிலையம் மேற்கொண்ட செயல் விளக்கங்களாலும், மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியினாலும் இழுவை வலைகளும், கடல் அடியில் அமைக்கப்படக் கூடிய வலைகளும் மீனவர்களிடையே பரவி வருகின்றன. உள்நாட்டு விற்பனைக்காக, பிடிக்கப்பட்ட மீன்களை எடுத்துப் பாதுகாத்தல், வேறிடங்களுக்கு அனுப்புதல் ஆகியவைகளிலும் ஏற்றுமதி செய்வதற்காகப் பதப்படுத்துவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1960 முதல் 1970 வரையான பத்தாண்டுக் காலத்தின் பின் பாதியில்தான் தமிழ்நாடு குளிர்பதனப் படுத்தப்பட்ட எறால், செங்கெறால், தவளைக் கால்கள் ஆகியவைகளை ஏற்றுமதி செய்யத் துவங்கியது. இக்காலத்திலேயே இலங்கைக்கு உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்வதை மீண்டும் தொடரவும் மனப்பூர்வமான முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### உள்நாட்டு மீன் உற்பத்தி

உள்நாட்டு மீன் உற்பத்தியில் 1960 முதல் 1970 வரையான பத்தாண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிவிகிதம் மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். 'பிட்யூட்ரி' சுரப்பியை ஊக்குவிக்கும் ஊசி மருந்துமூலம் (Hypophysation) மீன்களைத் தூண்டுதல் முறையில் முட்டையிடச் செய்து மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ததும், உள்நாட்டு நீர் நிலைகளில் பரவலாகவும், தீவிரமாகவும் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்ததுமே உள்நாட்டு மீன் உற்பத்திப் பெருக்கத்திற்கு மூலகாரணங்களாகும். நீர்த் தேக்கங்களில் மீன் வளம் மேம்பட்டதற்கு நல்ல நிருவாகமே துணை நின்றுள்ளது. எப்பொழுதும் வற்றாது தண்ணீர் நிற்கக் கூடிய நீர்த் தேக்கங்களில் செய்த மேம்பாட்டுப் பணிகளால், தொடர்புடைய ஆற்றுத் திட்டங்களும் பயனடைந்துள்ளன.

### மீனளம் தரும் வருவாய்

மீனளத் துறைப் பொருள்களின் மூலம் 1960–61-ஆம் ஆண்டில் நிலவிய விலைப்படி, தமிழ்நாட்டிற்கு 1970-71-ஆம் ஆண்டில் ரூபாய் 20·35 கோடிவருவாய் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொலைநோக்குத் திட்டக்காலத்தில் மீன் உற்பத்தி பெருக வேண்டிய சராசரி விகிதம் பின்கண்டவாறு உள்ளது.

| ஆண்டு | | சதவிகிதம் |
|---|---|---|
| 1971–74 | .. | 26.5 |
| 1974–79 | .. | 9·2 |
| 1979–84 | .. | 14.0 |

அட்டை சொல்லும் கட்டுரை

மீனளத் துறை மூலம் 1974-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிற்கு 36.54 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி விகிதம் 1971-ஆம் ஆண்டினைக் காட்டிலும் 5.4 சதவிகிதம் அதிகமாக இருக்கும்-அதுபோலவே 1979-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மீனளத் துறை மூலம் 53.54 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்என்றும், 1984-ஆம் ஆண்டில் 90.75 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வருவாய் . உயர்வின் விகிதம் முறையே 1974 -ஆம் ஆண்டினைக் காட்டிலும் 3.4 சதவிகிதம் அதிகமாகவும், 1979-ஆம் ஆண்டினைக் காட்டிலும் 7.5 சதவிகிதம் அதிகமாகவும் இருக்கும்.


### தொலை நோக்குத் திட்டம்

இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாமல் பரம்பரை முறையிலேயே மீன் பிடித்து வரும் மீனவப் பெருமக்களுக்கு எல்லாவகையிலும் உதவிட திட்டத்தில் போதிய அளவு நிதி ஒதுக்கப்படும். மீனவப் பெருமக்களின் சமுதாய—பொருளாதார மேம்பாட்டுப் பணிகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும்.

மீன்பிடி துறைமுகங்களில் உள்ள வசதிகளின் அடிப்படையில், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் சிறு விசைப் படகுகளும், பெரிய இழுவைகளும் பயன்படுத்தப்படும். இத்தகைய படகுகள் அரசுத் துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவைகளிடையே ஒதுக்கப்படும். 13.8 மீட்டர் நீளத்திற்கு மேற்பட்ட விசைப் படகுகள் கடற்கரையிலிருந்து நெடுந்தூரம் சென்று ஆழ்கடல் மீன்களைப் பிடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இத்தகைய பெரிய விசைப் படகுகளைக் கட்டுவதற்கு மானியம் கொடுக்க வேண்டியது மைய அரசின் பொறுப்பு ஆகும். சிறிய, பெரிய விசைப் படகுகளைக் கட்டுவதற்கு ஆகும் மொத்தச் செலவில் உச்ச அளவாக 20 சத அளவைத் தனியார் துறையினரும், கூட்டுறவுத் துறையினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மீதமுள்ள மூலதனம் வணிக வங்கிகளிலிருந்தும், நிதி நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கவேண்டும். 9.8 மீட்டர் நீளத்திற்குக் குறைந்த சிறிய படகுகளைக் கட்டுவதும், பயன்படுத்துவதும் நாளடைவில் குறைக்கப்படும். இயந்திரமயமாக்கும் திட்டம் விரிவு படுத்தப்படுவதாலும், பெரிய விசைப் படகுகள் பயன்படுத்தப்படுவதாலும், அவைகளைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் தேவையான வசதிகளை ஏற்படுத்திட வேண்டியுள்ளது. சிறுவிசைப் படகுகளும் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற மீன்களையும். எறுல்களையும் பிடிப்பதுடன், அந்நியச் செலாவணியையும் ஈட்டித்தருகின்றன. எனவே, சிறு விசைப் படகுகளுக்கும் மானியம் தர வேண்டியது நியாயமாகும். இவ்வாறு மானியம் தருவதன் மூலம் கடலில் நெடுந் தொலைவு சென்று ஆழ்கடல் மீன்களைப் பிடித்து வரக்கூடிய—சிறு விசைப்படகுகளைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்தலாம்!

விசைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்க ஆகும் செலவில் பெரும்பகுதி 'டீசல்' எண்ணெய்ச் செலவேயாகும். இந்தியாவில் ' டீசல் ' எண்ணெய் விலை மிகவும் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் அதிக சத அளவில் வரி விதிக்கப்படுவதேயாகும். மீன்பிடித்தல் தொடர்ந்து நடைபெற 'டீசல்' எண்ணெய்க்கு விதிக்கப்படும் வரியின் அளவுக்கு மானியம் வழங்கி விற்கவேண்டும்.

மீன் பிடிக்க உதவும் வலைகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்க ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள மீன் பிடி துறைமுகங்களைக் கட்டும் பணியை முக்கியத்துவ அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். புதிய மீன் பிடி துறைமுகங்களை அமைக்கும் ஆய்வுப் பணிகள் விரைவாக நடைபெற வேண்டும். அவைகளை அமைப்



பதற்குரிய அனுமதி வழங்கும் முன்னேற்பாடுகளும், அவைகளைக் கட்டும் வேலைகளும் குறிப்பிட்ட கால வரையறையின் அடிப்படையில் நடைபெற வேண்டும். மீன் பிடி துறை முகங்களில் பதப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திட வேண்டும்.

மீன் விற்பனையைப் பெருக்குவதற்குரிய குளிர்பதன வசதி பொருந்திய 'வேன்'களும், ரயில் பெட்டிகளும் அதிக அளவில் கிடைத்திடச் செய்ய வேண்டும்.

விசைப் படகுகளை இயக்குவதற்கும், பதப்படுத்தும் நிலையத்தில் பணியாற்றுவதற்கும், நிருவாகம், ஆராய்ச்சி ஆகியவைகளில் ஈடுபடுவதற்கும் தேவையான மனித சக்தியைப் பெற வேண்டுமானால், பயிற்சித் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

கடலில் நெடுந்தூரம் சென்று மீன் பிடிப்பதிலும், ஆழ்கடல் மீன்களைப் பிடிப்பதிலும், நாம் பெற்றுள்ள அறிவும் அனுபவமும் மிகவும் குறைவு! ஆழ்கடல் மீன் பிடிப்பதில் மிகுந்த ஆர்வமுடைய தொழில் முனைபவர்கள் ஈடுபட வேண்டும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. தொழில் முனைபவர்களுக்கு ஆழ்கடல்மீன்கள் பிடிப்பதற்கு ஏற்ற இடங்கள் பற்றிய போதிய தகவல்களைக் கொடுத்தால்தான், ஆழ்கடல் மீன்பிடிப்பு கவர்ச்சியானதாகவும், வெற்றியளிப்பதாகவும் இருக்கும். எனவே, ஆழ்கடல் மீன் பிடிக்கும் இடங்களை அறிய ஓர் ஆய்வு இன்றியமையாததாகும். இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வது மைய அரசின் கடமையாகும். மைய அரசு, மாநில அரசின் மீனளத் துறையுடன் இணைந்து ஆய்வுப் பணிகளில் ஈடுபட வேண்டும். ஏனெனில் மைய அரசின் ஆய்வுப் படகினால் வரையறுக்கப்பட்ட இடங்களில், பரிசோதனை மீன்பிடிப்புத் திட்டத்தின் கீழ் மாநில அரசு மீன்பிடித்துப் பார்த்து ஆய்வினை முறைப்படுத்திக் கொள்ளமுடியும். கடலில் நெடுந்தொலைவு சென்று மீன் பிடிக்கவும், ஆழ்கடல் மீன் பிடிக்கவும் ஐந்தாவது திட்டக் காலத்தில் 9 நடுத்தர, பெரிய இழுவைகளையும், ஆறுவது திட்டக் காலத்தில் 15 பெரிய விசைப் படகுகளையும் பயன்படுத்தப்படும். இதன் முக்கிய நோக்கம் ஐந்தாவது, ஆறுவது திட்டக் காலத்தில் சோதனை ஆய்வினை முடித்துவிட வேண்டும் என்பதேயாகும்.

தொலை நோக்குத் திட்டக் காலத்தில் மீன் பிடிப்பதற்காக 7 கப்பல்களை வாங்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**மீன் ஏற்றுமதி**

கடல் மீன்களுக்கு உள்நாட்டில் தேவை பெருகி வந்தபோதிலும், ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கத்தின் அடிப்படையிலேயே, கடல் மீன் பிடிப்பை அதிகப்படுத்தப்படும். உயர்ந்த தரமுடைய குளிர்பதனப் படுத்தப்பட்ட எறால் (Shrimps) செங்கெறுல் (Lobsters) போன்றவைகளை ஏற்றுமதி செய்வதிலேயே உலகமெங்கும் கவனம் செலுத்தப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட எறால், 'சார்டின்', 'டுனு' போன்றவைகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பு நிறைய உள்ளது. 1968-ஆம் ஆண்டில் கடல் பொருள்களை ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு துவங்கியது. அதன் மூலம் அந்த ஆண்டில் 1·7 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்துள்ளது. தமிழ்நாட்டின் ஏற்றுமதி ஆண்டிற்கு ஆண்டு அதிமாகி வருகிறது. தற்பொழுது 6,000 மெட்ரிக் டன் கடல் உற்பத்திப் பொருள்களே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஏற்றுமதியை 1974-ஆம் ஆண்டில் 15,000 மெட்ரிக் டன் அளவுக்கும், 1979-ஆம் ஆண்டில் 39,000 மெட்ரிக் டன் அளவுக்கும், 1984—ஆம் ஆண்டில் 77,900 மெட்ரிக் டன் அளவுக்கும் அதிகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.



இவ்வாறு ஏற்றுமதியை உயர்த்துவதனல் 1979-ஆம் ஆண்டில் 32 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியையும், 1984-ஆம் ஆண்டில் 77 கோடி ரூபாய் அந்நியச்செலாவணியையும் ஈட்ட இயலும். ஏககாலத்தில் நமது உள்நாட்டு விற்பனையையும் மேம்படுத்த வேண்டும். குளிர்பதனப் படுத்தப்பட்ட மீன்களை உண்ணும் பழக்கத்தை மக்களிடையே பரப்புவதுடன், தமிழ்நாட்டின் உள் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் குளிர் பதனப் படுத்தப்பட்ட மீன்கள் கிடைத்திடச் செய்ய வேண்டும்.


உள்நாட்டு மீனளத்தைப் பெருக்க, எல்லா நீர்நிலைகளிலும் வளர்ப்பதற்குத் தேவையான அளவில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டியது மிகவும் முக்கியமாகும். 'புல் கெண்டை;' 'வெள்ளிக் கெண்டை' ஆகியவைகளைப் பெருமளவில் வளர்க்க வேண்டியுள்ளது. பருவகாலத்தில் மட்டும் நீர் பிடிக்கக்கூடிய குளங்களிலும், பாசனக் கிணறுகளிலும் 'டிலாபியா' கெண்டைகளை வளர்த்திட வேண்டும்.

மீனளத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவை விரிவுபடுத்தி வலிவூட்டுவதுடன், அப்பிரிவுக்கு ஓர் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற தகுதியையும் ஏற்படுத்திட வேண்டும். ஆராய்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக உதவியுடன் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டும். மீனளம் பற்றிய ஆராய்ச்சி நிலையம் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், இயன்ற இடங்களில் முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.


தமிழ்நாட்டின் கடலோரத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் கடல் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. உள்நாட்டு மீன் பிடிப்பின் நிலைமை நன்கு அமையவில்லை. ஏனெனில், ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், இதர நீர் நிலைகளின் கரைகளிலும் இருந்தே உள்நாட்டு மீன்பிடிப்பு செய்ய வேண்டியுள்ளது. சில இடங்களில் பிடிக்கப்படும் கடல் மீன்களின் அளவு பற்றிய புள்ளி விவரங்களை மீனளத் துறை சேகரித்து வருகிறது.

## திட்ட முதலீடு

நான்காவது திட்டக் கால இலக்குகள் முழு அளவில் எய்தப்படும் என்ற எண்ணத்தில், ஐந்தாவது, ஆறுவது திட்டங்களுக்குப் பின்கண்டவாறு முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



| | (ரூபாய் இலட்சத்தில்) | சதவிகிதம் |
|---|---|---|
| **ஐந்தாவது திட்டம்** | | |
| 1. அரசுத் துறை .. | 3,668·04 | 42·65 |
| 2 மைய அரசு உதவி .. | 675·00 | 7·84 |
| 3 மைய அரசுத் துறை | 1,227·58 | 14·27 |
| 4 தனியார் துறை .. | 666·04 | 7·74 |
| 5 கூட்டுறவுத் துறை .. | 100·00 | 1·16 |
| 6 நிறுவன நிதி .. .. | 2,268·54 | 26·34 |
| மொத்தம் .. | 8,605·20 | 100·00 |
| **ஆறுவது திட்டம்** | | |
| 1 அரசுத் துறை .. | 7,121·60 | 46·50 |
| 2 மைய அரசு உதவி .. | 317·50 | 2·08 |
| 3 மைய அரசுத் துறை .. | 1,165·38 | 7·60 |
| 4 தனியார் துறை .. | 1,985·60 | 12·96 |
| 5 கூட்டுறவுத் துறை .. | 330·75 | 2·16 |
| 6 நிறுவன நிதி .. .. | 4,394·67 | 71·31 |
| மொத்தம் .. | 15,315.50 | 142·61 |





மேற் குறிப்பிட்டவாறு மீனளத் துறையில் ஐந்தாவது திட்டக்காலத்தில் 86·50கோடி ரூபாயும், ஆறாவது திட்டக் காலத்தில் 153·15 கோடி ரூபாயும் முதலீடு செய்ய தொலை நோக்குத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### மனித சக்தியின் தேவை

கடல் மீனளம், உள்நாட்டு மீனளம் ஆகிய இரு பிரிவிற்கும் தொலை நோக்குத் திட்டக் காலத்தில் தேவைப்படும் மனித சக்தியின் அளவும் மதிப்பிடப்பட்டுள்ளது. நான்காவது திட்ட இறுதிக்குள் விசைப்படகுகளையும், இழுவைகளையும் இயக்குதல், மீன்களைப் பதப்படுத்தல், விற்பனை செய்தல், மீன் அடிப்படையான தொழில்கள் ஆகிய பணிகளில் மேலும் புதிதாக 12,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும். ஐந்தாவது திட்ட இறுதிக்குள் மேலும் 57,500 பேர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். ஆறாவது திட்ட இறுதிக்குள் மேலும் 55,000 பேர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். உள்நாட்டு மீனளத்தைப் பொறுத்தவரையில் நான்காவது திட்ட இறுதிக்குள் 22,000 பேர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்புக் கிடைக்கும். அதுபோலவே, ஐந்தாவது திட்டக் கால இறுதிக்குள் 12,000 பேர்களும், ஆறாவது திட்டக் கால இறுதிக்குள் 28,000 பேர்களும் புதிதாக வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

### மீன்வள மேம்பாட்டுக் கழகம்

தொலை நோக்குத் திட்டக் காலத்தில் மீனள மேம்பாட்டிற்குரிய பெரும் திட்டங்களைச் செயல்படுத்தவும், மீனளத் துறையின் பணிகளை வணிக அடிப்படையில் நடத்திடவும் மீன் வள மேம்பாட்டுக் கழகத்தை (Fishery Development Corporation) உடனடியாக அமைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அக்கழகத்தில் வங்கிப் பணிப் பிரிவு, மேம்பாடு மற்றும் செயற் பிரிவு என இரு பிரிவுகள் இருக்கும். வங்கிப்பணிப்பிரிவு நிதி ஆதாரங்களைப் பெருக்குவதிலும் முதலீடு செய்வதிலும் கவனம் செலுத்தும். மேம்பாடு மற்றும் செயற் பிரிவு, படகுகள், பதப்படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றை இயக்குதல் போன்ற வணிக மற்றும் மேம்பாட்டுப் பணிகளைக் கவனிக்கும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படவிருக்கும் பல்வேறு திட்டங்களின் பயனாய், தொலை நோக்குத் திட்டத்தின் இறுதியில் தமிழ்நாட்டில் நீலப்புரட்சி நிலவிடும் என்பது நிச்சயம்!

—ஆர்.எம்

1972-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3,42,950 ஆகும். இது, முந்திய ஆண்டை விட 14 சதவிகிதம் அதிகம். 1978-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 8,00,000 சுற்றுலாப் பயணிகள் வெளிநாட்டிலிருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# கரும்பில் ஊடுபயிர் செய்திடுவீர்!
# அதிக வருவாய் பெற்றிடுவீர்!

கரும்பில் ஊடுபயிர் சாகுபடி செய்வது பற்றிய சோதனைகள் கடலூர் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையில் நடைபெற்றன. உளுந்து, வெண்டை, பச்சைப்பயறு, மணிலா, எள், சூரிய காந்தி, கேழ்வரகு போன்ற பல்வேறு பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்ததில் ஏக்கருக்குக் கிடைத்த அதிக வருவாய் பின்வருமாறு உள்ளது:

| | |
|---|---|
| *எள் (டி. எம். வி. 3)* | *465 ரூபாய்* |
| *கேழ்வரகு (கோ. 7)* | *365 ,,* |
| *சூரிய காந்தி (கே. 1)* | *263 ,,* |
| *உளுந்து* | *146 ,,* |
| *மணிலா (டி. எம். வி. 2, 9)* | *131 ,,* |
| *வெண்டை* | *110 ,,* |

ஊடு பயிரிட்டதால், கரும்பு மகசூல் பாதிக்கப்படவில்லை. மாறாக உளுந்து, மணிலா ஊடு பயிர் செய்ததில், கரும்பு மகசூல் கூடியுள்ளது; களைத் தொல்லையும் குறைந்துள்ளது!

**ஊடு சாகுபடியில் கவனிக்க வேண்டியவை!**

* மூன்று மாதத்திற்குட்பட்ட குறுகிய காலப் பயிராகத் தேர்ந்தெடுங்கள்.
* தண்ணீர் தட்டுப்பாடற்ற இடங்களிலும், பருவங்களிலுந்தான் ஊடுபயிர் செய்திட வேண்டும்.
* பருவத்திற்கேற்ற ஊடு பயிரைத் தேர்ந்தெடுங்கள்.
* உயரமாய் வளரும் சூரியகாந்தி, எள் போன்றவற்றைக் கரும்பு வரிசைகளுக்கு இடையில் ஒற்றை வரிசையிலும், குட்டையாக வளரும் உளுந்து, மணிலா, கேழ்வரகு போன்றவற்றை இரட்டை வரிசைகளிலும் பயிரிடலாம்.
* கரும்பு நட்ட 2 அல்லது 3–வது நாளில் இடைவெளிப்பாரை சமன் செய்து ஈரப் பதமுள்ளபோதே ஊடுபயிரை விதைக்கவும்.
* தகுந்த இடைவெளி விட்டுப் போதிய அளவு பயிர்களின் எண்ணிக்கை இருக்கச் செய்வதுடன், தேவையான பயிர்ப்பாதுகாப்பும் செய்திட வேண்டும்.

கரும்பு சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் தக்க ஊடுபயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய கவனிப்புடன் சாகுபடி செய்தால், மூன்றே மாதங்களில் அதிக வருவாய் பெறுவது திண்ணம்.

(தகவல்: ஏ. வெங்கட்டராமன், கூடுதல் வேளாண்மை இயக்குநர், ஆராய்ச்சி, திருச்சிராப்பள்ளி-18.)



மயிலை சீனி வேங்கடசாமி

பாரசீகத்திலிருந்து நாதிர்ஷா டில்லிமேல் படையெடுத்து வருகிறார் என்னும் வதந்தி நாடெங்கும் பரவிற்று. வட இந்தியாவில் இந்த வதந்தி பொது மக்களிடையே பீதியையும் அச்சத்தையும் உண்டாக்கிற்று. அக்காலத்தில் மொகலாயச் சக்கரவர்த்தியாக இருந்த முகம்மது ஷா திறமையற்றவர். அரசியல் வேலைகளை விட்டுச் சிற்றின்பத்தோடு பழகிக் காலங் கழித்தார். அனுபவமுள்ள அமைச்சர்கள் கூறும் யோசனைகளைக் கேளாமல் அரசியல் கடமைகளைத் தட்டிக் கழித்தார். நாட்டில் அரசாங்கம் முறையாக நடைபெறாமல் சீர்கெட்டிருந்தது. இந்த நிலையில்தான் நாதிர்ஷா படையெடுத்து வருகிற செய்தி நாடெங்கும் பரவி மக்களிடையே பரபரப்பையும் பீதியையும் உண்டாக்கிற்று. காபூல் தேசத்துக் கவர்னரான நாஸிர்கான் மொகலாயச் சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதி பாரசீகத்திலிருந்து வருகிற பகைவரை விரட்டியடிப்பதற்குச் சேனையைப் பலப்படுத்தப் பணம் கேட்டார். சக்கரவர்த்தி முகம்மதுஷா பணம் அனுப்பாமல் வாளா இருந்துவிட்டார். காபூல் தேசத்துப் பட்டாளத்து வீரர்களுக்கு ஐந்து ஆண்டு சம்பளம் கொடுக்காமல் பாக்கியிருந்தது. 1738-ல் நாதிர்ஷா காபூலுக்கு வந்தார். அவரை எதிர்த்துப் போர் செய்ய வழியில்லாமல், மொகலாய கவர்னர் நாஸிர்கான் பெஷாவருக்கு ஓடிவிட்டார். நாதிர்ஷா எளிதாகக் காபூலைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்த மொகலாயச் சேனையைத் தன்னுடைய சேனையோடு சேர்த்துக் கொண்டார். எல்லைப்புற நாடுகளைக் கைப்பற்றிக் கொண்ட நாதிர்ஷா பஞ்சாபுக்கு வந்தார். பஞ்சாபைக் கைப்பற்றிக்கொண்டு டில்லியை நோக்கி வந்தார். வந்து பானிப்பட்டு என்னும் ஊரில் பாளையம் அடித்துத் தங்கினார்.

மொகலாயச் சக்கரவர்த்தி முகம்மது ஷா, நாதிர்ஷா பானிபட்டில் பாளையம் அடித்திருப்பதையறிந்து, தம்முடைய அமைச்சரான நைஜாமுல் முல்கை யோசனை கேட்டார். அமைச்சர், சக்கரவர்த்தி பானிபட்டுக்குச் சென்று பாளையம் இறங்கிப் போர் செய்யவேண்டுமென்று யோசனை கூறினார். அந்த யோசனைப்படி மொகலாயச் சக்கரவர்த்தி, புர்ரானுல் முல்க் ஸதாக்கான், ஸம்ஸாமுத் தௌலா, இதிமாதுத் தௌலா என்னும் மூன்று உயர்தர உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் சேனைகளோடு பானிப்பட்டுக்குப் போய்ப் பாளையம் அடித்துத் தங்க வேண்டும் என்றும் தீர்மானித்து அவர்களைப் பானிப்பட்டுக்கு அனுப்பினார். சக்கரவர்த்தியாகிய முகம்மது ஷாவும் தம்முடைய பரிவாரங்களோடு பானிப்பட்டுப் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார். மேற்சொன்ன மூன்று சேனாபதிகளும் சக்கரவர்த்தியும் அமைச்சரான நைஜாமுல் முல்கும் சேர்ந்து போர் செய்வது பற்றி ஆலோசனை நடத்தினார்கள். சிப்பாய் பட்டாளத்தார் 30 நாட்களாக வழிநடந்து களைத்திருப்பதனால், சில நாள் ஓய்வு கொடுத்துப் பிறகு போரைத் தொடங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

நாதிர்ஷாவின் சிப்பாய்கள் மொகலாயச் சக்கரவர்த்தியின் பாளையத்தில் புகுந்து தானியங்களையும், விறகு, புல் முதலிய பொருள்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போனார்கள். இந்தப் பொருள்கள் கிடைப்பது அருமையாக இருந்தது. கிடைத்தாலும் அதிக விலையாக இருந்தது. ஸா ஆதத்கானுடைய பாளையத்தில் நாதிர்ஷாவின் சிப்பாய்கள் புகுந்து பொருள்களைக் கொள்ளையடித்தனர். அவனுடைய சிப்பாய்கள் பாரசீக வீரர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். இந்தக் கைகலப்பில் ஸா ஆதத்கானுடைய வீரர்கள் சிலர் இறந்து போனார்கள். இதையறிந்த ஸா ஆதத்கான் சினங்கொண்டான். சக்கரவர்த்தியின் அனுமதி பெற்றுக் கொண்டு தன்னுடைய பட்டாளத்தை அழைத்துக்கொண்டு நாதிர்ஷாவின் பாளையத்தை நோக்கிப் போர் செய்யச் சென்றான். நாதிர்ஷா தன்னுடைய சேனையோடு இவனை எதிர்த்தான். அந்தச் சேனையோடு ஊடாட முடியாமல் ஸா ஆதத்கான், உதவிக்காகச் சேனையை அனுப்பும்படி சக்கரவர்த்திக்குச் செய்தியனுப்பினான்.

டில்லிச் சக்கரவர்த்தி முகம்மது ஷா, ஸம்ஸா முத்தௌலா தலைமையில் ஒரு சேனையை உதவிக்கு அனுப்பினார். ஆனால், இரண்டு சேனைகளும் ஒன்று சேராதபடி நாதிர்ஷாவின் சேனைகள் தடுத்துவிட்டன. தடுத்துவிட்டு இரண்டு சேனைகளோடு தனித்தனியே போர் செய்தார்கள். ஸா ஆதத் கானுடைய சேனைகள் நாதிர்ஷாவின் பீரங்கிக்கு எதிர் நிற்க முடியாமல் சிதறி ஓடினார்கள். போர்க்களத்தில் குழப்பம் ஏற்பட்டது. ஸா ஆதத் கானுடைய யானையை அவன் போர்க்களத்துக்கு அப்பால் செலுத்தினான். ஆனால், அந்த யானை பாரசிகச் சேனைக்குள் புகுந்தது. பாரசீகர் அவனைப் பிடித்துக் சிறைப்படுத்தி நாதிர்ஷாவிடம் கொண்டு போனார்கள். மொகலாயச் சக்கரவர்த்தியின் சேனாபதி ஸா ஆதாத் கான், நாதிர்ஷாவிடம் சிக்கிக் கொண்டு சிறைச்சாலையில் அடைப்பட்டான். அவனுடைய சேனை தோல்வியடைந்தது.

ஸம்ஸாமுத் தௌலாவின் தலைமையில் உதவிக்குப் போன மொகலாயச் சேனையும் தோல்வியடைந்து சிதறிப் போயிற்று. மொகலாயச் சேனைகள் இரண்டையும் ஒன்று சேராதபடிக்குத் தடுத்துப் பிரித்து பாரசீகர்கள் இரண்டு சேனைகளோடு தனித்தனியே போர் செய்தார்கள். உதவிக்குச் சென்ற சேனை பாரசீகர்களின் பீரங்கி வெடிகளுக்கு முன்னிற்க முடியாமல் சிதறுண்டன. இச்சேனையின் தலைவனான ஸம்ஸாமுத்தௌலா போரில் பலத்த காயமடைந்து விழுந்துவிட்டார். தன்னுணர்வில்லாத நிலையில் அவர் மொகலாயச் சக்கரவர்த்தியின் பாளையத்துக்குத் தூக்கிக் கொண்டு போகப்பட்டார். மொகலாயச் சேனை படுதோல்வி அடைந்தது. இருபதினாயிரம் வீரர்கள் போர்க்களத்தில் கொல்லப்பட்டிறந்தார்கள். போர்க்களத்திலே பல பிரமுகர்களும் இறந்து போனார்கள்.

படுதோல்வியடைந்த மொகலாயச் சக்கரவர்த்தி முகம்மது ஷா, தம்முடைய பாளையத்தில், என்ன செய்வது என்று தோன்றாமல் திகைத்துக் கொண்டிருந்தார். பாளையத்தில் குழப்பமும் பரபரப்புமாக இருந்தது.



போர்க்களத்தில் வெற்றி பெற்ற நாதிர்ஷா தம்முடைய பாளையத்துக்குப் போனார். போய்த் தம்மிடம் சிறை வைக்கப்பட்டிருந்த மொகலாயச் சேனாபதி ஸா ஆதத் கானை அழைத்து மொகலாய அரசாங்கத்தின் நிலைமைகளைப் பற்றி விசாரித்தார். அதற்கு அவர் விடை கூறினார்: "மொகலாய அரசாங்கத்தின் முதல் அமைச்சர் நைஜாமுல் முல்க் அவர் ஒருவர்தான் எதையும் சரியாகச் செய்யும் ஆற்றல் உள்ளவர். மாட்சிமை தங்கிய ஷா அவர்கள் அந்த அமைச்சரை அழைத்து அவர் மூலமாக எதையும் முடிவு செய்யுங்கள்!"

அடுத்த நாள் காலையில் நாதிர்ஷா, மொகலாயர் பாளையத்துக்கு ஒரு தூதன் மூலமாக ஒரு கடிதமும், குர்ரான் புத்தகமும் அனுப்பினார். கடிதத்தில், அமைச்சர் நைஜாமுல் முல்க், நாதிர்ஷாவின்பாளையத்துக்கு வந்து அவருடன் சமாதானப் பேச்சுத்தொடங்க வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது. இனி என்ன நேருமோ என்று அஞ்சின மொகலாயச் சக்கரவர்த்திக்கு அமைச்சர் நைஜாமுல் முல்க் தான் உற்ற துணையாக இருந்தார். சக்கரவர்த்தி அமைச்சரைப் பார்த்து, இதில் ஏதேனும் சூது இருக்குமோ என்று கேட்டார்.

அமைச்சர் நைஜாமுல் முல்க் "கடிதத்தோடு குர்ரான் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏதேனும் சூது நடந்தால் அல்லா கவனித்துக் கொள்வார். மோசமான நிலை ஏற்படுமானால், மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்கள், மண்டு கோட்டை அல்லது வேறு ஏதேனும் கோட்டைக்குச் சென்று தக்காணத்திலுள்ள அடியேனுடைய மகன் நாஸர் ஜங்கைச் சேனையோடு வரும்படி அழையுங்கள். அழைத்து நாதிர்ஷாவுடன் போர் செய்து அவரைத் துரத்துங்கள்."



மொகலாயச் சக்கரவர்த்திக்குப் பலர் பலவித யோசனைகளைக் கூறினார்கள். சக்கரவர்த்தி முகம்மது ஷா, அமைச்சர் நைஜாமுல் முல்கை முழுவதும் நம்பினார். அவருடைய கருத்துப்படி என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து வரும்படி முழு சுதந்தரம் கொடுத்து நாதிர்ஷாவிடம் அனுப்பினார்.

நாதிர்ஷா, நைஜாமுல் முல்கை வரவேற்றுப் பொதுவான விஷயங்களைப் பற்றிச்





சிறிது நேரம் பேசினர். பிறகு நாதிர்ஷா, ''நாம் இரண்டு முறை டில்லிக்குத் தூது அனுப்பினோம். அதற்கு டில்லி அரசாங்கம் பதில் கூறாமலே இருந்துவிட்டது'' என்று டில்லி அரசாங்கத்தின் மேல் குற்றஞ்சாட்டினர். அதற்கு நைஜாமுல் முல்க், ''அப்போது டில்லி அரசாங்க அதிகாரிகள் தங்களுக்குள் சச்சரவுகளும் பிணக்குகளும் செய்து கொண்டிருந்தார்கள். அமைச்சர்கள் அனுப்பும் உத்தரவுகளை அவர்கள் நிறைவேற்றாமல் போனார்கள்'' என்று விடை கூறினர்.

''இரண்டு அரசாங்கமும் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தால் ஆப்கானிஸ்தானத்தில் போர்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. மொகலாய அரசாங்கம் அப்போது உடன்படிக்கை செய்து கொள்ளாத காரணத்தினால் நாம் பல போர்களைச் செய்ய வேண்டியதாயிற்று. போர் செய்ய நாம் பெருந் தொகையை வட்டிக்குக் கடன் வாங்கியுள்ளோம். இந்தத் தொகையை யார் கொடுப்பது? உமது சக்கரவர்த்தியைப் போரில் கொன்று விடுவது என்று முடிவு செய்து கொண்டிருந்தோம். இப்போது அவரை மன்னித்து விடுகிறோம். நீர் போய், உமது சக்கரவர்த்தியை நம்மிடம் வந்து உடன்படிக்கை செய்து கொள்ளும்படி அனுப்புவீர்''.

அமைச்சர் நைஜாமுல் முல்க், நாதிர்ஷாவிடம், கீழ்க் கண்ட சமாதான உடன்படிக்கையைக் கூறினர்:—1. ஐம்பது இலட்ச ரூபாய் நட்ட ஈடாக நாதிர்ஷாவுக்கு டில்லி அரசாங்கம் கொடுக்கச் சம்மதிக்கிறது. பாரசீக சேனை டில்லிக்குள் நுழையக் கூடாது. 2. உடனடியாக இருபதுஇலட்சரூபாய் கொடுக்கப்படும். இலட்சத்தில் பத்து ரூபாய் செலுத்தப்படும். அட்டாக் என்னும் ஊரில் பத்து இலட்ச ரூபாய் செலுத்தப்படும். கடைசி பத்து இலட்ச ரூபாயைக் காபூலில் கொடுக்கப்படும். 3. எல்லைப் பிரிவினை ஒன்றும் கிடையாது.

நாதிர்ஷா இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டார். அடுத்த நாள் சக்கரவர்த்தி முகம்மது ஷா நேரில் வந்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்னும் முடிவோடு பேட்டி கலைந்தது.

பாளையத்தில் மொகலாயச் சக்ரவர்த்தியும் மற்ற பிரபுக்களும் நைஜாமுல் முல்கின் வரவை ஆவலோடும் கவலையோடும் எதிர்பார்த்திருந்தார்கள். நைஜாமுல் முல்க் வந்து இந்த உடன்படிக்கையைத் தெரிவித்த போது எல்லாரும் இதை வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்த நாள் (1739 பிப்ரவரி 15-ஆம் தேதி) முகம்மது ஷா சக்கரவர்த்தி பாரசீகர் பாளையத்துக்குச் சென்று நாதிர் ஷாவைச் சந்தித்தார். நாதிர்ஷா சக்கரவர்த்தியை வரவேற்று உபசரித்தார். பிறகு இருவரும் இரண்டு மணி நேரம் உடன்படிக்கையைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் பேசினர்கள். சக்கரவர்த்தி தம்முடைய பாளையத்துக்குத் திரும்பி வந்த போது, போர்க்களத்தில் காயமடைந்து படுக்கையாகக் கிடந்த சேனபதி ஸம் ஸாமூத் தௌலா இறந்துபோன செய்தியை அறிந்தார்.

அமைச்சர் நைஜாமுல் முல்க், இராச்சியத்துக்குச் செய்துள்ள சேவைக்காக சக்கரவர்த்தி முகம்மது ஷா அவருக்கு அமீருல்-உமரா பக்ஷீ-இ-முமாலிக் (அரசாங்கச் சம்பள இலாகா அதிகாரி) என்னும் பட்டத்தைக் கொடுத்தார். இந்த உத்தியோகத்தை, ஸா ஆதத் கானுக்கு (நாதிர்ஷாவிடம் சிறைப்பட்டிருந்தவர்) கொடுப்பதாக முன்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஸா ஆதத்கான், நாதிர் ஷாவின் சிறைச்சாலையில், இந்தப் பதவி நைஜாமுல் முல்குக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை கேள்விப்பட்டார். உடனே அவருக்குப் பொறாமை தோன்றிற்று. அப்பொறாமை கனல்விட்டது. கனல் விட்டு அவருடைய மனத்தில் தீயாக எரிந்தது. அவருக்குப் பொறாமையுடன் கோபமும் வளர்ந்தது. தனக்குக் கிடைக்கவிருந்த இந்தப் பதவியை நைஜாமுல் முல்க் பெற்றதைஅவர் மனம் பொறுக்கவில்லை. எப்படியாவது நைஜாமுல் முல்கை வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அவர் நாதிர் ஷாவிடம் வந்து, அவர் முகம்மது ஷா சக்கரவர்த்தியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை நல்லதல்ல என்றும் இன்னும் பெருந்தொகையை அவர் கேட்டிருந்தால்


நைஜாமுல் முல்க் சம்மதித்திருப்பார் என்றும் இந்த உடன்படிக்கையினால் நாதிர்ஷா ஏமாற்றப்பட்டார் என்றும் கூறினார். மொகலாயச் சக்கரவர்த்தி முகம்மது ஷாவையும் அவருடைய அமைச்சரான நைஜாமுல் முல்க்கையும் சிறைப்படுத்தி, நாதிர்ஷா உடனே டில்லிக்குப் போய் அங்குள்ள பெரும் நிதியைக் கைப்பற்றிக் கொள்ளும்படியும் யோசனை சொன்னார். இந்த யோசனை நாதிர்ஷாவுக்கு உகந்ததாக இருந்தது. இந்த யோசனைப்படியே செய்ய அவர் உறுதி செய்து கொண்டார்.

நாதிர்ஷா, நைஜாமுல் முல்க்குக் கடிதம் எழுதி உடனே வந்து தன்னைக் காணும்படித் தெரிவித்தார். அவர் வந்தவுடனே அவரைக் கைது செய்து சிறையில் வைத்தார். ஐம்பது இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு போதாதென்றும் இருபது கோடி ரூபாய் தரவேண்டும் என்றும் கூறினார். இதைக் கேட்ட நைஜாமுல் முல்க் திடுக்கிட்டு ஆச்சரியமடைந்தார். ''மொகலாய ஆட்சி ஏற்பட்டது முதல் அரசாங்கக் கஜானாவில் 20 கோடி ரூபாய் இதுவரையில் சேர்ந்ததே இல்லை. ஷாஜகான் சக்கரவர்த்தி காலத்தில் அவருடைய பெரு முயற்சியால் 16 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது. ஆனால், அந்தத் தொகை முழுவதும் அவ்ரங்கசீபு ஆட்சிக் காலத்தில் தக்காண தேசத்தில் போர் செய்ததன் காரணமாகச் செலவாகி விட்டது. தற்போது கஜானாவில் ஐம்பது இலட்சம் ரூபாய் கூட இல்லை'' என்று கூறினார்.

நாதிர்ஷா, நைஜாமுல் முல்கைச் சிறையில் அடைத்து, அவர் கையிலேயே சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதி அவரை வரவழைத்தார். உடன்படிக்கையைப் புதிதாகத் தீர்த்துக் கொள்ள வருமாறு சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதும்படி நாதிர்ஷா நைஜாமுல் முல்கைக் கட்டாயப் படுத்தினார். அவர் எழுதிய கடிதத்தின் படியே சக்கரவர்த்தி முகம்மதுஷா, நாதிர்ஷாவின் பாளையத்துக்குப் போனார். போனபோது அவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சக்கரவர்த்தியும் நைஜாமுல் முல்க்கும் சிறைசெய்யப்பட்ட செய்தி பரவிற்று. மொகலாயப் பாளையத்தில் ஒரே குழப்பமும் சந்தடியும் பரபரப்புமாக இருந்தது. தலைவர்கள் இல்லாத மொகலாயச் சேனை பாளையத்தை விட்டுப் போய் விட்டது.

ஸா ஆதத் கான் சக்கரவர்த்தியையும் நைஜாமுல் முல்க்கையும் நாதிர்ஷா மூலமாக வஞ்சம் தீர்த்துக் கொண்டார். அவருடைய பொறாமைத் தீ இன்னும் தணியவில்லை. ஸா ஆதத் கானையும், தஃமாஸ்ப் கானையும் உடனடியாக டில்லிக்குப் போய் அரசாங்கப் பொக்கிஷத்தையும், மற்றும் பொருள்களையும் கைப்பற்றிக் கொள்ளும்படி நாதிர்ஷா அவர்களை டில்லிக்கு அனுப்பினார். அவர்களுக்கு உதவியாக 4,000 பேர் அடங்கிய குதிரைப் படையையும் அனுப்பினார். அவர்கள் டில்லிக்குச் சென்றபிறகு நாதிர்ஷா, தன்னுடைய சேனைகளோடும் சிறைப்படுத்தப்பட்ட சக்கரவர்த்தி முகம்மது ஷாவோடும் ஏனைய பிரபுக்கள் முதலியவர்களோடும் டில்லிக்குப் போனார். டில்லியில் ஷாலாமார் பூங்காவின் அருகில் பொறாமை காரணமாகச் சக்கரவர்த்தியைக் காட்டிக் கொடுத்த துரோகியாகிய ஸா ஆதத் கான், நாதிர் ஷாவை வரவேற்றான். தேசத்துரோகியும் இராஜத்துரோகியுமான அவனை நாதிர்ஷா உயர் பதவியில் அமர்த்தினார்.

டில்லி நகரம் அலங்கோலமாகக் காணப்பட்டது. கூச்சலும் குழப்பமும் அச்சமும் பீதியும் நகரத்தில் காணப்பட்டது. நாதிர்ஷா, டில்லி அரண்மனையில் தங்கினார். அவருடைய சேனைகள் நகரத்தில் பல இடங்களிலும் யமுனா ஆற்றங்கரைகளிலும் தங்கினார்கள். ஸா ஆதத் கானை நஷ்ட ஈட்டுப் பணம் 20 கோடி ரூபாயை வசூல் செய்து கொடுக்கும் படி நாதிர்ஷா நியமித்தார். பொறாமைத் தீயினால் உந்தப்பட்டு வஞ்சம் தீர்த்துக் கொண்ட துரோகிக்கு 20 கோடி ரூபாய் எங்கிருந்து கிடைக்கும்? அவ்வளவு பெருந்தொகையைச் சேர்க்க முடியாமல் அவர் தவித்தார். தொகை வராததைக்கண்டு ஏமாற்றமடைந்த நாதிர்ஷா சினங்கொண்டு ஸா ஆதத் கானை அழைத்துக் கண்டித்தார்.



சொன்ன தொகை வராமற்போனால் நகரத்தின் மத்தியில் மரத்தில் கட்டி வைத்துக் கசையடி கொடுக்கப் போவதாகக் கண்டிப்பாகக் கூறினார். நோயும் பலவீனமும் உள்ள ஸா ஆதத் கான், தொகையைச் சேர்க்க முடியாமல் தண்டனையும் அவமானமும் அடைய விரும்பாமல் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். பொறாமைத் தீயினால் தன்னுடைய அரசனையும் அமைச்சனையும் வஞ்சம் தீர்த்துக் கொண்ட அவர் நிம்மதியாக வாழ முடியவில்லை. அவமானத்துக்கும் தண்டனைக்கும் அஞ்சி அவர், நஞ்சு குடித்துப் படுக்கைக்குச் சென்றார். உயிர் உடம்பை விட்டுச் சென்றபடியால் அவர் அடுத்த நாள் எழுந்திருக்கவில்லை. பொறாமைத் தீ அவனையே சுட்டுப் பொசுக்கி விட்டது.

நாதிர் ஷா தம்முடைய கருத்தை வெளிப்படையாக விளம்பரம் செய்தார். தமக்கு டில்லி இராச்சியத்தை அரசாள விருப்பமில்லை என்றும் தனக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுத்தால் முகம்மது ஷாவையே சக்கர வர்த்தியாக்க விரும்புவதாகக் கூறினர். ஆகவே, சக்கர வர்த்தி முகம்மது ஷா தம் முடைய அமைச்சர்களான நைஜாமுல் முல்கையும் இதி மாதூத் தௌலாவையும் நிதி யைத் திரட்டும்படி நியமித் தார். டில்லியிலுள்ள செல்வர் வாணிகர் முதலியவர்களிட மிருந்து நிதித் தொகை வசூல் செய்யப்பட்டது. நாதிர்ஷா தம்முடைய சிப்பாய்களுக்கும் ஆட்களுக்கும் ஒழுங்காக நடந்து கொள்ளும்படி கண் டிப்பாக உத்தரவிட்டிருந்தும், அவர்கள் அப்படி நடந்து கொள்ளவில்லை. மக்களைப் பலாத்காரப்படுத்தவும் அவ மானப்படுத்தவும் செய்தார் கள். கொள்ளை அடிக்கவும் குழப்பம் உண்டாக்கவும் செய்தனர். அரசாங்கப் போர் வீரர் சிலரைக் கொன்றனர்.



இதற்கிடையில் வதந்தி யொன்று நகரமெங்கும் பர விற்று. நாதிர்ஷா அரண் மனையில் அந்தப்புரத்தில் பெண் காவலர்களால் கொல் லப்பட்டார் என்று வதந்தி பரவிற்று. இந்த வதந்தி காரணமாக நாதிர்ஷாவின் சிப்பாய்களில் சிலர் கொல்லப் பட்டனர். இந்தச் செய்தியைக் கேட்ட நாதிர்ஷா கோபங் கொண்டு தன்னுடைய உடை வாளை உரையிலிருந்து எடுத்து நகர மக்களை வெட்டிக் கொல் லும்படிக் கட்டளையிட்டார். அவருடைய சிப்பாய்கள் நகரத்தைக் கொள்ளையடித்து வீடுகளை இடித்துத் தள்ளி கடைகளுக்கும் கட்டடங் களுக்கும் தீ வைத்துக் கொளுத்தி மக்களை வெட்டிக் கொன்றனர். 30,000 பேர், ஆண்களும் பெண்களும் கொல்லப்பட்டனர். நகர மெங்கும் இரத்தக்கறை படிந்திருந்தது. தெருக்களி லும் வீதிகளிலும் பிணங்கள் சிதறிக் கிடந்தன. டில்லி நகரம் தீயினல் எரிந்து போய் வெறும் மைதானமாகக் காணப்பட்டது. ஒருவரும் நாதிர்ஷா விடம் செல்ல முடிய வில்லை. அவரிடம் போக எல்லாரும் அஞ்சினர். கடைசியாக நைஜாமுல் முல்க், நாதிர்ஷாவிடம் சென்று மக்க ளிடம் தயவு காட்டும்படி வேண்டிக் கொண்டார்.

நாதிர் ஷா உம்மைய நரைத்த தாடியின் பொருட்டு மன்னிக்கிறேன் என்று மன் னித்துவிட்டார். இவ்வாறு டில்லி படுகொலை முடிவடைந் தது.

டில்லியில் முறையாகவும் ஒழுங்காகவும் நிதி வசூல் செய் யப்பட்டது. இந்திந்தப் பகுதி யில் இந்திந்த தெருவில் இன் னின்னர் இவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று முறைப்படுத்தி நிதி வசூல் செய்யப்பட்டது. பிறகு குறிப்பிட்ட நிதி கிடைத்த வுடன் அதை நாதிர்ஷாவுக்குக் கொடுத்தார்கள். நிதியைப் பெற்றுக் கொண்ட நாதிர்ஷா சிந்து நதிக்கு மேற்கிலுள்ள மொகலாய ஆட்சிக்குட்பட்டி ருந்த நாடுகளைத் தன் இராச் சியத்துடன் சேர்த்துக் கொண்டு டில்லியை விட்டுப் போய்விட்டார். போவதற்கு முன்பு தன்னுடைய தலைப் பாகையை எடுத்து டில்லி பாதுஷாவின் தலையில் வைத்து அவரை அரசனாக்கினர்.

முகம்மது ஷா டில்லியில் முன்போலவே அரசரானர். இரண்டு மாதம் வரையில் நாதிர் ஷாவின் பெயரினல் காசு அடித்தார். நாதிர்ஷா வின் பெயரினல் மசூதிகளில் குத்பா செய்தார். நல்லவித மாக, சுமுகமாக நடக்க விருந்த உடன்படிக்கை, ஒரு பொருமைக் காரனுடைய துரோகச் செயலினல், டில்லி நகரம், எரிந்தது, வீடு வாசல் கள் தகர்க்கப்பட்டன. மக்கள் கொள்ளையிடப் பட்டனர், ஆயிரக் கணக்கானவர் கொலை செய்யப்பட்டு உயிர் இழந்தனர். நகரம் செல் வத்தை இழந்து வறுமை யடைந்தது. பழைய நல்ல நிலையை அடையப் பல ஆண்டுகள் சென்றன.





1-9-4

# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை - 600007.

தொலைபேசி எண் : 30800 — தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : **திரு பழனிவேல் ராஜன்,** பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.

உபதலைவர் : **திரு பி. கஸ்தூரி பிள்ளை.**

பொருளாளர் : **திரு என். பழனிசாமி** எம். ஏ.

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... | ரூ. | 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. | 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. | 10,12,30,217 |

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதியவீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

**பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.**
*இணைப்பதிவாளர்—செயலாளர்.*

ஸ்தாபிதம்: 1913 — தொலைபேசி எண்: 23839

# கோயமுத்தூர் கூட்டுறவு வீடு அடமான சங்கம் லிமிடெட், நெ. 1081

கோபாலபுரம். — கோயமுத்தூர்-641018.

| | |
|---|---|
| திரு. M. S. பழனியப்ப முதலியார், B.A. ... ... | தலைவர் |
| திரு. K. V. நாராயணஸ்வாமி அய்யர், B.A., B.L. ... | உப-தலைவர் |
| திரு. S. R. P. பொன்னுசாமி செட்டியார் ... ... | டைரக்டர் |
| திரு. T. S. இராமலிங்கம், B.Sc. ... ... ... | ,, |
| திரு. S. R. நஞ்சுண்டையா ... ... ... | ,, |
| திரு. A. சின்னசாமி நாயுடு, B.A., B.L. ... ... ... | ,, |
| திரு. C. P. நாகரத்தினம், B.A. ... ... ... | ,, |
| டாக்டர் C. V. ராமராஜ், M.B.,B.S. ... ... ... | ,, |
| திரு. G. சுந்தரவேல், B.Com. ... ... ... | ,, |

| | | |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... ... | ரூ. | 10,00,000 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... ... | ரூ. | 8,50,597 |
| காப்பு நிதி ... ... ... ... ... | ரூ. | 2,39,499 |
| நடைமுதல் மூலதனம் ... ... ... ... | ரூ. | 73,50,509 |
| டிபாசிட்டுகள் ... ... ... ... ... | ரூ. | 54,48,513 |
| அங்கத்தினர்களின்பேரில் கடன் நிலுவை ... ... | ரூ. | 70,64,247 |
| மத்திய சங்கத்தில் எடுத்துள்ள பங்கு ... ... | ரூ. | 1,00,000 |
| 1972-'73-ம் ஆண்டு நிகர இலாபம் ... ... | ரூ. | 1,21,039 |

| | | |
|---|---|---|
| **பிக்சட் டிபாசிட்டுகள் :** | 36 மாதங்கள் ... ... | $8\frac{1}{4}$% P. A. |
| | 60 மாதங்கள் ... ... | $8\frac{1}{2}$% P. A. |
| | 84 மாதங்கள் ... ... | $8\frac{3}{4}$% P. A. |

நமது சங்கத்தில் வைத்திருக்கும் சொத்துக்களின் மதிப்பு ரூ. 2 கோடிக்கு மேல்.

C. V. **ராஜகோபாலன்,** B.Com.,
உதவிக்காரியதரிசி.

K. **மணி,** B.A.,
காரியதரிசி.

# கேளுங்கள் கொடுக்கப்படும்!



**வினா:**—'தமிழரசு' ஜூலை 1, 1973 இதழில் நாற்று மூலம் வளர்க்கப்பட்ட சாதா எலுமிச்சைக் கன்றுகளும், பதியங்கள் மூலம் வளர்க்கப்பட்ட கன்றுகளும் பற்றிய மிகப் பயனுள்ள செய்திகளைப் படித்து மகிழ்ந்தேன். இந்த இருவகைக் கன்றுகளும், வாங்கும் இடம் பற்றிய விவரமான பதிலைத் 'தமிழரசு' மூலம் கொடுக்க வேண்டுகின்றேன். மேலும் கலப்பின புதுவகைத் தென்னங் கன்றுகளும், ''டி×டி'' ரகக் கன்றுகளும் கிடைக்கும் விலாசம் கொடுக்க வேண்டுகின்றேன்.

—டி. நடராசன்,
தலைவர், திருப்புடை
மருதூர் ஊராட்சி மன்றம்,
அம்பா சமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை:**—நாற்று மூலம் வளர்க்கப்பட்ட சாதாரண எலுமிச்சைக் கன்றுகளையும், பதியம் மூலம் வளர்க்கப்பட்ட கொடி எலுமிச்சைக் கன்றுகளையும் அரசினர் பழத்தோட்டம்—நாற்றுப் பண்ணைகளிலிருந்து (Government Orchard -cum-Nurseries) பெற்றுக் கொள்ளலாம். கீழ்க்கண்ட 9 இடங்களில் தற்பொழுது பழத் தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன.

| | |
|---|---|
| ஆத்தூர் .. | செங்கற்பட்டு மாவட்டம். |
| குடபட்டு .. | வட ஆர்க்காடு மாவட்டம். |
| மருங்குளம் .. | தஞ்சாவூர் மாவட்டம். |
| கோடைக் கானல். .. | மதுரை மாவட்டம். |
| பெரியகுளம் .. | மதுரை மாவட்டம். |
| பூவாணி .. | இராமநாதபுர மாவட்டம். |
| குற்றாலம் .. | திருநெல்வேலி மாவட்டம். |
| திம்மாபுரம் .. | தருமபுரி மாவட்டம். |
| குன்னூர் .. | நீலகிரி மாவட்டம். |

மேற்கூறிய இடங்களிலிருந்து தேவையான நாற்றுகளையும், பதியங்களையும் உரிய தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தாங்கள் குற்றாலத்தில் உள்ள பழத்தோட்ட நாற்றுப் பண்ணையிலிருந்து தேவையான எலுமிச்சைக் கன்றுகளையும், கொடி எலுமிச்சைப் பதியங்களையும் பெற்றுக் கொள்வது சிறந்தது.

குட்டையான, நடுத்தர உயர கலப்பின (Tall×Dwarf Hybrid) வகைத் தென்னங் கன்றுகள், தஞ்சாவூர் மாவட்டம், வேப்பங்குளம் என்ற ஊரில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் இவ்வாராய்ச்சி நிலையத்தில் 5,000 கலப்பினத் தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து, உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படும். இத்தகைய கலப்பினத் தென்னங் கன்றுகள் பெறவேண்டுமானால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலமாக உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு மனு அனுப்புங்கள். உங்களுக்குத் தேவையான கலப்பினத் தென்னங் கன்றுகள் கிடைக்க உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்கள் ஆவன செய்வார்.

* * *

**வினா:**—கோ. 1 உளுந்து விதைக்க ஏற்ற பருவம் எது? விதையளவு, உர அளவு ஆகியவைகள் யாவை? ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் தரும்?

—எஸ். தங்கராசு,
சின்ன சேலம்,
தென்னார்க்காடு
மாவட்டம்.

**விடை:**—மானாவாரியாக கோ. 1 உளுந்து விதைக்க செப்டம்பர்—அக்டோபர் மாதங்கள் மிகவும் ஏற்றவை. ஏக்கருக்கு 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும் இருக்குமாறு விதைப்பது சிறந்தது. அடியுரமாக ஏக்கருக்கு 4 வண்டி (2 டன்) தொழு எரு, 25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 11 கிலோ யூரியா, 57 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகிய உரங்களை இடவேண்டும்.

கோ. 1 உளுந்து மானாவாரியில் ஏக்கருக்கு 300 கிலோ மகசூல் கொடுக்கவல்லது.

* * *

**வினா:**—ஆகஸ்ட் 1-ஆம் தேதிய 'தமிழரசு' இதழில் எச். பி. 3 கம்பில் சர்க்கரை நோய் தோன்றினால் நனையும் கந்தகத்தைக் கரைத்துத் தெளிக்கச் சொல்லியுள்ளீர்கள். பொதுவாக நனையும் கந்தகத்திற்குப் பதிலாக வேறு என்ன மருந்து தெளிக்கலாம்? அடி உரம் இடாமல் ஏக்ருக்கு எவ்வளவு யூரியா போட வேண்டும்? விதைக்கும் பொழுது யூரியாவைப் போட்ட பிறகு விதைக்க வேண்டுமா? அல்லது விதைத்து விட்டு யூரியாவைப் போட்டலாமா? பயிரடித்த பிறகு யூரியா எவ்வளவு போட வேண்டும்? எச். பி. 3 கம்புடன் மானாவாரி கேழ்வரகு பயிரிடலாமா?

—எஸ். சண்முகம்,
உழவர் விவாதக் குழு
அமைப்பாளர், செட்டி
மலன்பட்டி, புதுப்பட்டி
அஞ்சல், திருநெல்வேலி
மாவட்டம்.

**விடை:**—எச். பி. 3 கம்பில் தோன்றும் சர்க்கரை நோயைத் தடுக்க ஆகஸ்ட் 1-ஆம் தேதிய 'தமிழரசு' இதழில் பக்கம் 55, 56-ல் 'சிராம்' அல்லது

‘சினெப்’ அல்லது தண்ணீரில் கரையும் கந்தகத்தைப் பயன் படுத்துமாறு குறிப்பிடப் பட்டுள்ளது. தாங்கள் அப்பகுதியைச் சரியாகப் படிக்க வில்லை என்று எண்ணுகின்றோம். அதனால்தான் தாங்கள் ‘சிராம்’ அல்லது ‘சினெப்’ என்ற மருந்துகளைப்பற்றித் தெரிந்து கொள்ள இயலவில்லை. தங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் ‘சிராம்’ அல்லது ‘சினெப்’ என்னும் மருந்து கிடைக்கக்கூடும். அம்மருந்துகள் அங்குக் கிடைக்கவில்லை எனில், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் சொல்லி, அம்மருந்துகளை வரவழைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். ‘சிராம்’ அல்லது ‘சினெப்’ மருந்தை, 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்துக் கலவை வீதம் தெளிக்கலாம். ஆனால் இந்த நோய் தோன்றிய இடங்களில் மட்டும் உடன் மருந்து தெளித்தால் போதும். வயலெங்கும் தெளிக்க வேண்டியது அவசியமில்லை. வயலெங்கும் சர்க்கரை நோய் காணப்படின், வயலெங்கும் தெளிப்பது அவசியமாகும். மானாவாரி எச். பி. 3 கம்புக்கு ஏக்கருக்கு 40 கிலோ யூரியாவையே அடியுரமாக இட வேண்டும். மானாவாரி கம்புக்கு மேலுரமாக யூரியாவைப் போடக்கூடாது. அவ்வாறு போட்டால், தகுந்த மழை இல்லாதபோது, யூரியா பயிர்களைச் சுட்டுவிடும். எனவே, பயிருழவு செய்த பிறகு யூரியாவை மேலுரமாகப் போட வேண்டும்.

யூரியாவை அடி உரமாக இட்ட பிறகே விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த பிறகு யூரியாவைப் போடக் கூடாது.

மானாவாரி எச். பி. 3 கம்புடன் மானாவாரி கேழ்வரகு பயிரிடுதல் பொதுவாகப் பயன்தராது. எனவே இம்முயற்சியில் ஈடுபட வேண்டாம்!

* * *

**வினா:**—நன்றாகக் காய்த்துக் கொண்டிருந்த 25 வயது சென்ற தென்னை மரங்கள் நல்ல தண்ணீர் வசதியிருந்தும் நாலைந்து வருடங்களாகச் சரியாகக் காய்க்கவில்லை. இனி நல்ல முறையில் காய்க்கும் படிச் செய்ய என்ன செய்ய வேண்டும்? காய்க்காத காரணமென்ன? உரமிட வேண்டுமானால் எந்த அளவு உரமிட வேண்டும்? தயவு செய்து விளக்கம் தரும்படிக் கேட்டுக் கொள்கின்றேன்.

—பி. கணேசன்,
கடையாலுருட்டி, குலைய நேரி (அஞ்சல்), நெல்லை மாவட்டம்.

**விடை:**—நன்றாகக் காய்த்துக் கொண்டிருந்த 25 வயதுடைய தென்னை மரங்கள் நீர்ப்பாசன வசதியிருந்தும் தற்பொழுது



சரியாகக் காய்க்காததற்கு நிலத்திலிருந்து போதிய சத்துக்கள் தென்னை மரங்களுக்குக் கிடைக்காமையே காரணமாகும். மீண்டும் அத்தென்னை மரங்கள் நன்கு காய்க்க இரசாயன உரமிடுதல் அவசியமாகும்.

ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் ஆண்டுதோறும் 3 கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர்பாஸ்பேட், 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை இட வேண்டும். அல்லது 3-ஆம் எண் கலப்பு உரத்தில் (6 : 6 : 12) ஒவ்வொரு மரத்திற்கும் 5 கிலோ இடவேண்டும். தென்னை மரத்திலிருந்து 1·2 மீட்டர் சுற்றளவில் 30 சென்டி மீட்டர் ஆழமும், 30 சென்டி மீட்டர் அகலமும் உள்ள சுற்று வட்டப் பள்ளம் தோண்டி அதில் இரசாயன உரங்களையும், 50 கிலோ தொழு எரு அல்லது தழை எருவையும் இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும். உரமிடுவதற்குச் சிறப்பாக ஐப்பசி-கார்த்திகை மாதங்கள் ஏற்றவையாகும். கோடைக் காலத்தில் நீர் பாய்ச்சினால் உரமிட்டதன் பலன் அதிகமாகும்.

தென் மேற்குப் பருவ மழை ஆரம்பித்தவுடன் தென்னந் தோப்புகளை உழுது, சணப்பை போன்ற தழை உரப் பயிர்களை விதைத்து, அவைகளை 40 நாளில் உழுது மடக்கி விட்டால், அவை தென்னந் தோப்பின் நிலவளத்தைப் பெருக்குவதுடன் நிறையக் காய்க்கவும் வழிசெய்யும்.

மேற்கூறியவாறு ஆண்டு தோறும் இரசாயன உரமிட்டு, தழை உரப்பயிர் சாகுபடி செய்தும், கோடைக் காலத்தில் தண்ணீர் பாய்ச்சியும் வந்தால் தென்னை மரங்கள் நிறையக் காய்க்கும்.

* * *

**வினா:**—புதிய கண்டுபிடிப்புகளுக்குப் பரிசுதரும் ‘தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கார்ப்பரேஷன்’ என்ற அரசு நிறுவனத்தின் முகவரி தந்து உதவுக.

—கவிஞர் டி. கே. தங்கவேலு, பெரிய கோட்டை, வெ. ஆலை அஞ்சல், உடுமலை வட்டம், கோவை மாவட்டம்.


**விடை:**—புதிய கண்டுபிடிப்புகளுக்கும், இறக்குமதி மாற்றுப் பொருள் கண்டுபிடிப்புகளுக்கும் ‘புதிய கண்டுபிடிப்பு ஊக்குவிக்கும் வாரியமே’ (Inventions Promotion Board) பரிசு கொடுத்து வருகிறது. அவ்வாரியம் புதுடெல்லியில் உள்ளது. அவ்வாரியத்துடன் தொடர்பு கொள்ளப் பின் கண்ட முகவரிக்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

The Director,
Inventions Promotion Board,
39, Ring Road,
New Delhi-24.

**—ஆர். எம்.**

# பணத்தை அள்ளித் தரும்

# பருத்தி பயிரிடுவீர்!




**த**மிழ்நாட்டில் உழவர் பெரு மக்களுக்குப் பணத்தை அள்ளித் தருவதில் பருத்திக்கு நிகரில்லை என்று கூறலாம். **பணத்தை அள்ளித் தரும் பணப் பயிர்களில் (Cash crops)** பருத்தியே முக்கியமானதாக **விளங்குகிறது. அதுமட்டுமன்றி** பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கும் முக்கிய வாணிபப் பயிராகவும் **(Commercial Crop)** பருத்தி **விளங்குகிறது.**

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்கர்களில் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 4 இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தியாகிறது. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளின் தேவையை நிறைவு செய்ய, குறைந்தது 7 இலட்சம் பேல்பஞ்சு தேவைபடுகிறது ; உயர்ந்த அளவாக 13 இலட்சம் பேல் பஞ்சு தேவைப்படும். இந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் பஞ்சு உற்பத்திசெய்யப்படாததால், தற்பொழுது பஞ்சுப் பற்றுக்குறை நிலவுகிறது. இப்பற்றுக்குறையும் கடுமையான அளவில் உள்ளதாலேயே, தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர்க்க பிற மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தற்பொழுது பெருஞ் செலவில் பஞ்சு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. வெளிநாடுகளிலிருந்து மட்டும் தமிழ்நாட்டிற்காக ஆண்டுதோறும் ஏறத்தாழ 3 இலட்சம் பேல் சிறப்பு ரகப் பஞ்சு இந்திய அரசினால் வரவழைக்கப்படுகிறது. இதனால் நாம் ஆண்டுதோறும் 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இழந்து வருகிறோம்.

தற்பொழுதுள்ள பஞ்சுப் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கும், அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. கோவை மாவட்டத்திலுள்ள பருத்திப் பயிரிடும் பரப்பு முழுவதையும், திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் உள்ள மானாவாரி பருத்தி பரப்பு முழுவதையும், மும்முர வேளாண்மை மேம்பாட்டுத் திட்ட நோக்குடன் பருத்திச் சாகுபடியின் கீழ்க் கொண்டு வந்து, பஞ்சு உற்பத்தியை 4 இலட்சம் பேலில் இருந்து 8 இலட்சம் பேலாக உயர்த்துவதற்கான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவருகிறது. இவ்விலக்கினை எய்துவதற்காக, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 'செயல்படுத்தப்பட்டு வரும் பருத்தி முனைப்புத் திட்டப் பகுதிகளில் **(Cotton package areas)** ஏறத்தாழ 2.05 இலட்சம் ஏக்கரில் (82,000 எக்டேர்) பருத்தி சாகுபடிக்கான பல்வேறு அறிவியல் நுட்ப முறைகளை மேற்கொள்ளவும் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை முயன்று வருகிறது. இந்த ஆண்டில் (1973–74), ஒவ்வொன்றும் 180 கிலோ பஞ்சு கொண்ட 5.35இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை முனைந்து வருகிறது.

தமிழ்நாடு அரசு பருத்தி உற்பத்தியைப் பெருக்க மேற்கொண்டு வரும் முயற்சிகளால் குறிப்பாகப் பருத்தி சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைக்கும்! அதன்மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும்! எனவே, தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் அடுத்து வரவிருக்கும் புரட்டாசி, ஐப்பசி பட்டத்தில், அதிநீள இழைப்பருத்தி வகைகளைச் சாகுபடி செய்து, வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளை விளக்குவதைத் தன் கடமையாகக் கருதும் 'தமிழரசு' இதழ் அவைகளைக் கீழே விவரித்துள்ளது.

### குளிர்காலத்திற்கு ஏற்ற பருத்தி ரகங்கள்

தமிழ்நாட்டில் குளிர் காலத்தில் இறைவையாகவும், மானாவாரியாகவும் பருத்தி பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்தி ஏறத்தாழ 2.05 இலட்சம் ஏக்கர்களில் பயிரிடப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில் பயிரிட 'எம் சி. யு. 5' என்ற பருத்தி ரகம் மிகவும் சிறந்தது.

உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

**'ப்ளேனோ:பிக்ஸ்'**

தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோ:பிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோ:பிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன் படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறாதீர்கள்.

உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர்
லக்னோ. சென்னை. புதுடெல்லி. பாட்னா.

"ப்ளேனோ:பிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு. டிரேட் மார்க்


# இத்தியோப்பியா நாட்டில் இன்பத் தமிழ்

## டாக்டர் ந. சஞ்சீவி தரும் செய்தி

இத்தியோப்பியா நாட்டில் எத்தனையோ மொழிகள் வாழ்கின்றனவாம். இங்ஞர் என்றால் மொழி என்று பொருளாம். அத்தகைய இங்ஞாக்களுள் சிறப்பு வாய்ந்த ஒன்று கல்லாஸ்(Gallas) பழங்குடி மக்கள் பேசுவதாம். மன்னர் மன்னரின் மொழி அமரிங்ஞா என்பதாம். அவர்களுடைய மனைவி 'கல்லாஸ்' என்ற குடியினைச் சார்ந்த பெண் மணியாம். இந்தக் கல்லாஸ் வகுப்பு மாணவர் பலர் என் நண்பர் திரு. கிருஷ்ணசாமியிடம் மாணவர்களாக இருக்கிறார்களாம். அவர்கள் தங்கள் முன்னோர்கள் தென்னிந்தியாவிலிருந்து இத்தியோப்பியாவிற்குக் குடியேறியவர்கள் என்றுதிரும்பத் திரும்பச் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்களாம். அவர்களுடைய அன்றாடப் பேச்சில் உள்ள இரு தமிழ்ச் சொற்கள் 'முறமும் முற்றமும்' என்று மகிழ்ச்சியுடனும் வியப்புடனும் என் நண்பர் கூறியபொழுது "ஆறு ஆண்டுகள் இருந்து இரண்டே சொற்களைத் தானே கண்டு பிடித்திருக்கிறீர்கள். திரும்பப் போய் இன்னும் எவ்வளவு தமிழ்ச் சொற்கள் அவர்கள் மொழியில் உள்ளன என்று அறிந்து அறிவியுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். அவர்களிடம் இருக்கக் கூடிய பழந்தமிழ்ப் பழக்கவழக்கங்களையும் பார்த்து அறிவிக்குமாறு வேண்டிக் கொண்டுள்ளேன்.

## எம். சி. யு. 9

'எம்.சி.யு. 5' என்ற ரகம் அதி நீள இழைப்பருத்தி (Extra-long stable cotton) வகையாகும். இப்பருத்தியின் இழைகள் நுண்ணியதாகவும், வலிவுள்ளதாகவும் விளங்குவதால், இந்த ரகப் பஞ்சைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடியும். இதுவரை இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள கம்போடியா பருத்தி ரகங்களில், எம். சி. யு. 5 ரகமே சிறந்ததாக விளங்குகிறது.

இந்த ரகத்தின் தரம், தற்பொழுது இறக்குமதி செய்யப்பட்டு வரும் சூடான் பருத்திக்குச் சமமானதாக விளங்குவதால், இந்த ரகத்தைத் தமிழ்நாட்டில் குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்திப் பரப்பான 2.05 இலட்சம் ஏக்கர்களிலும் பயிரிட்டால், ஏறத்தாழ 3 இலட்சம் பேல் $1\frac{6}{32}$ அங்குல இழை நீளமுள்ள, அதி நீள இழைப் பஞ்சு உற்பத்தி செய்ய முடியும். இதன்மூலம். தற்பொழுது தமிழ்நாட்டிற்காக 3 இலட்சம் பேல் அதி நீள இழைப் பஞ்சு இறக்குமதி செய்வதை நிறுத்தி விட முடியும்! அதன் பயனால் 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப்படுத்தி விட இயலும்! மேலும் தமிழ்நாட்டில் எம். சி. யு. 5 பருத்தி சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு 8 கோடி ரூபாய் கூடுதல் இலாபமும், தனிப்பட்ட ஒரு உழவர் பெருமகனுக்குக் குறைந்தது ஏக்கருக்கு ரூபாய் 400 கூடுதல் இலாபமும் கிடைக்கும்! ஆகவே குளிர் கால இறைவைப் பருத்திச் சாகுபடி செய்ய விரும்பும் உழவர் பெருமக்கள் அனைவரையும் எம். சி. யு. 5 பருத்தி பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

அதுபோலவே, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் செம்மண் நிலங்களில் குளிர்கால மானாவாரி கம்போடியா பருத்திச் சாகுபடி செய்ய விரும்பும் உழவர் பெருமக்கள் அனைவரையும் எம். சி. யு. 5 பருத்தியை மானாவாரியாகப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

## பாரதி

அடுத்து, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் கரிசல் மண்ணில் 'லட்சுமி' பருத்தி பயிரிட்டு வரும் உழவர் பெருமக்கள் அனைவரையும் 'எம். சி. யு. 6 என்னும் 'பாரதி' பருத்தி பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

'பாரதி' பருத்தி 'லட்சுமி' பருத்தியைவிட 50 சதம் அதிகப் பஞ்சு மகசூல் அளிப்பதுடன், 26 மில்லி மீட்டர் இழை நீளமும், 40-ஆம் எண்ணுக்கும் மேற்பட்ட நூற்புத் திறனும் கொண்டது. தற்பொழுது லட்சுமி பருத்தி பரவியுள்ள 1.8 இலட்சம் ஏக்கர்களிலும், 'பாரதி' பருத்தி பரவிவிடுமானால், தமிழ்நாட்டிற்குக் கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும். 'பாரதி' பருத்திப் பயிரிடும் தனிப்பட்ட உழவர் பெருமகனுக்கு ஏக்கருக்கு ரூபாய் 200 அதிக வருவாய் கிடைக்கும். எனவே, 'லட்சுமி' பருத்திக்குப் பதிலாகப் 'பாரதி' பருத்தியைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

## 'சுஜாதா'

அடுத்து, கோவை மாவட்டத்தில் 'சுஜாதா' என்னும் 'பார்படென்ஸ்' ரகப் பருத்தியைப் பயிரிடுவதற்கு பெரும் வாய்ப்புள்ளதால், கோவை மாவட்ட முற்போக்கு உழவர் பெருமக்கள் அனைவரையும் 'சுஜாதா' பயிரிடும் முயற்சியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'சுஜாதா' பருத்தியின் இழை நீளம் $1\frac{1}{4}$ அங்குலம் உள்ளதாலும், இழைகள் அதிக வலுவுள்ளதாக இருப்பதாலும் 'சுஜாதா' பருத்தியைக் கொண்டு 80 முதல் 100 ஆம், எண் நூல்வரை நூற்கமுடியும். இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள முதல் எகிப்திய வகைப் பருத்தி இதுவேயாகும். தற்பொழுது எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் 'கிசா-68' 'மெனுபி' என்ற அதி நீளஇழைப் பருத்திகளைவிட, 'சுஜாதா' தரத்தில் சிறந்தது. இந்தஉயரியரகத்தை கோவையிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக மண்டல ஆராய்ச்சி நிலையம் 1969-ஆம் ஆண்டில் வெளியிட்டது என்பது பெருமைக்குரிய செய்தியாகும். மற்றெல்லாப் பருத்தி வகைகளைக் காட்டிலும் சுஜாதா பருத்திக்கும், பஞ்சுக்கும் அதிக விலை கிடைப்பதாலும், அதி நீள இழை பஞ்சு இறக்குமதி செய்வதால் ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்பைத் தவிர்ப்பதற்கு 'சுஜாதா' பேருதவியாக இருப்பதாலும் கோவை மாவட்டத்தின் முற்போக்கு உழவர் பெருமக்கள் அனைவரையும் 'கொங்கு நாட்டின் வெள்ளைத் தங்கம்' என்று கூறப்படும் 'சுஜாதா' பருத்தியைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

கோவை மாவட்டத்திலுள்ளசில முற்போக்கு உழவர் பெருமக்கள் 'கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள்' என்று கூறப்படும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of Practices) மேற்கொண்டு 'எம். சி. யு. 5', 'சுஜாதா' ஆகிய பருத்தி ரகங்களை இறைவையில் பயிரிட்டு ஏக்கருக்கு 10 முதல் 12 குவின்டால் பருத்தி மகசூல் எடுத்துள்ளதுடன், ஏக்கருக்கு ரூபாய் 1,200 முதல் ரூபாய் 1,600 வரை நிகர இலாபம் பெற்றுள்ளனர். எனவே, பணத்தை அள்ளித்தரும் பருத்தியைப் பயிரிடவிருக்கும் எல்லா உழவர் பெருமக்களும் பெரும் இலாபம் பெற்றிட வேண்டி, கீழ்க்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை ஈண்டு படைத்துள்ளோம்.

## ஒருமித்த செய் நேர்த்தி முறைகள்

### 1. குளிர்கால இறைவைக் கம்போடியாப் பருத்தி

ஏற்ற ரகம்:—குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்திப் பயிரிட விரும்பும் உழவர் பெரு மக்கள் 'எம். சி. யு. 5' என்னும் பருத்தி ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது.

மண்வகை:—குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்தி பயிரிட மணல் கலந்த வடிகால் வசதியுள்ள செம்மண் நிலங்கள் ஏற்றது.

வயது :—165 நாட்கள்.
விதைக்கும் பருவம் :—

கோயம்புத்தூரைச் சுற்றி யுள்ள பகுதிகளில் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாளிலிருந்து செப்டம்பர் மாதம் 10-ஆம் நாளுக்குள் விதைப்பது சிறந்தது. மற்ற இடங்களில் செப்டம்பர் மாதத்தில் அல்லது அக்டோபர் மாதத்தில் வட கிழக்குப் பருவ மழை துவங்கிய உடன் விதைப்பது சிறந்தது.

விதையளவு :—ஏக்கருக்கு 8 கிலோ.

விதைப் பராமரிப்பு :— ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு, செம்மண்ணும், மாட்டுச் சாணமும் 3 : 1 என்ற விகிதத்தில் சேர்த்துத் தண்ணீர் கலந்து பசைபோல் செய்து கொண்டு, அதில், விதைகளைக் கலந்து தரையில் தேய்த்து, நிழலில் உலர்த்தவும்.

நிலம் தயாரித்தல் :—இரும்புக் கலப்பை அல்லது டிராக்டரால் நிலத்தை நன்கு-புழுதியாகும் வரை—உழுதுவிடவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டி (5முதல் 10 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட வேண்டும். பிறகு பார் கலப்பையைப் பயன்படுத்தி 75 சென்டி மீட்டர் (2½ அடி) இடைவெளியில் பார்கள் அமைக்கவும்.

அடியுரமிடுதல்:—ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து அளிக்கவல்ல இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 60 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 27 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவேண்டும். மேற்கூறிய அளவு இரசாயன உரங்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் விதை ஊன்றும் இடத்திற்குக் கீழே, 2 முதல் 3 அங்குல தூரம் தள்ளி சீராக இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும்.

விதைத்தல் :—பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் வரிசையாக குழிக்குக் குழி 30 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளி விட்டு, குழிக்கு மூன்று விதைகள் வீதமும் ஊன்ற வேண்டும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

பின்செய் நேர்த்தி :— விதைத்த 20-வது நாளில் களைக் கொட்டினால் கொத்திக் களை எடுப்பதுடன், குழிக்கு 2 நன்றாக வளர்ந்த செடிகள் வீதம் விட்டு, மற்றவைகளைக் களைத்துவிட வேண்டும். விதைத்த 35 முதல் 40 நாளில் இரண்டாம் முறை களையெடுத்து, ஊடு உழவு செய்து, மேலுரமிட்டு மண் அணைக்க வேண்டும். விதைத்த 60-வது நாளில் மூன்றும் முறை களையெடுத்தல் வேண்டும்.




மேலுரமிடுதல்:—விதைத்த 35 முதல் 40 நாளில் 'ஜூனியர் ஹோ' எனப்படும் கொத்துக் கலப்பையால் அல்லது நாட்டுக் கலப்பையால் இடையுழவு செய்து, ஏக்கருக்கு 12 கிலோ தழைச் சத்து அளிக்கும் 60 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 27 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டு பார் கலப்பையால் அல்லது மண் வெட்டியால் செடிகளுக்கு மண் அணைத்துப் பார்களைச் சரி செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனம் :— விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 3 அல்லது 4 நாளில் இரண்டாம் முறை நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 20 நாட்

களுக்குத் தண்ணீர் தேவைப் படாது. விதைத்த 25-ஆம் நாளில் மூன்றாம் முறை தண்ணீர் பாய்ச்சவும். பிறகு மண்ணில் உள்ள ஈரத்தைப் பொருத்து 10 முதல் 12 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர்ப் பாய்ச்சி வர வேண்டும். சாதாரணமாக விதை ஊன்றிய 130 நாட்களுக்குப் பிறகு தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

**பயிர்ப்பாதுகாப்பு :—**

1. குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்தி விதை ஊன்றிய 2-வது வாரத்தில் பருத்திச் செடிகளில் உள்ள சாற்றினை அசுவணி தத்துப் பூச்சி, பேன் ஆகியவை உறிஞ்சி, செடிகளுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்க மெட்டாசிஸ்டாக்ஸ் 0·025 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

2. பருத்திக் காய்களைச் சேதப்படுத்தும் காய்ப்புழுக்களைத் தடுக்க கார்பரில் 0·1 சதத்தையும் (1 கிலோ), அரை கிலோ நனையும் கந்தகத்தையும் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்குத் தெளிக்க வேண்டும். இவ்வாறு விதை ஊன்றிய 4-வது வாரத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒரு தடவை வீதம் 8 தடவை மருந்து தெளிக்க வேண்டும்.

அல்லது,


பாரத்தியன் 0·025 சதம் (50 மில்லி லிட்டரை 100 லிட்டர் தண்ணீர் கலந்து) மருந்தை 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 8 தடவை தெளிக்க வேண்டும்.

அல்லது,

மெட்டாசிட் கோம்பி 450 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 8 தடவை தெளிக்க வேண்டும்.

அல்லது,

குளிர்கால இறைவைக் கம்போடியாப் பருத்திக்கு, கீழே பட்டியலில் குறிப்பிட்டுள்ளது போல 10 தடவை மருந்து தெளிப்பது சிறந்தது.



பருத்திப் பயிரில் சூனியர் கலப்பையால் ஊடு உழவு செய்தல்



கம்போடியாப் பருத்திக்கு மேலுரம் இடுதல்



பருத்திப் பயிருக்குப் பூச்சி மருந்தைத் தெளித்தல்



வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு,
தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்)
வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5 ரூ. 355
ரூ. 10 ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5 ரூ. 337.50
ரூ. 10 ரூ. 675.00
தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும்
புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப்
பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத
விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய
தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத்
திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

| இறவை எம். சி. யு. 5 பருத்திக்கான பயிர்ப்பாதுகாப்பு முறைப் பட்டியல். | | | | |
|---|---|---|---|---|
| தடவை எண். | பருத்திச் செடியின் வயது (நாட்கள்). | பயன்படுத்த வேண்டிய மருந்தின் பெயர். | ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் மருந்தின் அளவு. | ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் நீரின் அளவு (லிட்டர்) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 15 | என்ட்ரின் 20 இ.சி. + ஊடுருவிப் பரவும் மருந்து. | 200 மி.லி. + 150 மி.லி. | 200 |
| 2 | 30 | ஷை | ஷை | 200 |
| 3 | 45 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 700 கிராம் + 350 கிராம். | 280 |
| 4 | 55 | என்ட்ரின் 20 இ.சி. + நோய் தடுக்கும் மருந்து. | 350 மி.லி. + 1,260 கிராம். | 280 |
| 5 | 65 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 900 கிராம் + 450 கிராம். | 360 |
| 6 | 75 | கரையும் செவின் 50 சதம் + மிதைல் பாரத்தியான் 50 இ.சி. | 900 கிராம் + 180 மி.லி. | 360 |
| 7 | 85 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 1,200 கிராம் + 600 கிராம். | 480 |
| 8 | 95 | கரையும் செவின் 50 சதம் + மிதைல் பாரத்தியான் 50 இ.சி. | 1,200 கிராம் + 240 மி.லி. | 480 |
| 9 | 110 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 1,400 கிராம் + 700 கிராம். | 560 |
| 10 | 125 | கரையும் செவின் 50 சதம் + மிதைல் பாரதியான் 50 இ.சி. | 1,400 கிராம் + 280 மி.லி. | 560 |

குறிப்பு:---(1) மிதைல் டெமடான் 25 இ.சி. (மெட்டாசிஸ்டாக்ஸ்), திமெடேன் 25 இ.சி. (எக்கட்டின்) டைமெதோவேட் 30 இ.சி. (ரோகார்), மார்ரூதியான் 25 இ.சி. (அன்தியோ) ஆகியவை ஊடுருவி பரவும் மருந்துகளாகும். இவைகளில் ஏதேனும் ஒன்றை 1 லிட்டர் தண்ணீரில் 0·75 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது பாஸ்பாமிடான் 100 (டைமெக்ரான்) மருந்தைப் பத்து லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

(2) பைட்டலான், குப்ராமர், நீல காப்பர் ஆகியவை நோய் தடுக்கும் தாமிரக் கலவை மருந்துகளாகும். இவைகளில் ஏதேனும் ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4·5 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1·5 கிராம் 'சினெப்' அல்லது 'சிர்ரம்' வீதம் கலந்து தெளித்தும் நோய்களைத் தடுக்கலாம்.

(3) மருந்து தெளிக்க விசைத் தெளிப்பான் பயன்படுத்தினுல், மேற்குறிப்பிட்டுள்ள அளவு தண்ணீரில் 3-ல் ஒரு பகுதியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆனுல் மருந்தின் அளவைக் குறைக்கக் கூடாது.

**அறுவடை:—** நன்ருக வெடித்த பருத்தியை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். பருத்தி பறிப்பதற்கு காலை வேளையே சிறந்தது. பருத்திகளைப் பறிக்கும் பொழுது சருகுகள் ஒட்டாமல் பறிக்க வேண்டும். பூச்சிகளால் தாக்கப்பட்டு நிறம் மாறிய பருத்திகளை நீக்கி விட வேண்டும். பறிக்கப்பட்ட பருத்தியை நிழலில் உலர்த்தி சேமிக்க வேண்டும். எடுக்கப்பட்ட பருத்திகளை வகைக்குத் தக்கவாறு தரம் பிரித்து விற்பனை செய்தால் நல்ல விலைக்கு விற்கலாம்.

எம். சி.யு. 5 பருத்தி பயிரிட்டால் ஏக்கருக்குச் சராசரியாக 8 குவின்டால் பருத்தி மகசூல் எடுக்கலாம். மேலே பரிந்துரைக்கப்பட்ட முறையில் ஒரு ஏக்கர் எம். சி. யு. 5 பருத்தி சாகுபடி செய்ய ரூபாய் 1,000 முதல் 1,200 வரை செலவாகக் கூடும். ஒரு ஏக்கர் பருத்தி மூலம் மொத்தம் ரூபாய் 2,400 வருவாய் கிடைக்கக் கூடும். ஆகவே, செலவு போக ஏக்கருக்கு நிகர இலாபம் ரூபாய் 1,200 முதல் ரூபாய் 1,400 வரை கிடைக்கும்.

## 2. குளிர் கால மானுவாரி கம்போடியாப் பருத்தி

ஏற்ற ரகம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, ஆகிய மாவட்டங்களில் உள்ள செம்மண் நிலங்களில் குளிர் கால மானுவாரி கம்போடியா பருத்தி பயிரிட எம். சி. யு. 5 ரகமே சிறந்தது.

**மண்வகை:—** எம். சி. யு. 5 ரகத்தை மானுவாரியாகப் பயிரிட பெரியகுளம், தேனி, கம்பம், பழனி ஆகிய பகுதிகளில் உள்ளது போன்ற மணல் கலந்த செம்மண் நிலம் மிகவும் ஏற்றது.

**விதையளவு :—** ஏக்கருக்கு 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். விதைப் பராமரிப்பு செய்திட இறைவைப் பருத்திக்குக் கூறியது போலவே செய்யவும்.

**நிலம் தயாரித்தல் :—** நிலத்தை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது கட்டிகளை உடைத்துவிட்டுப் புழுதியாக்கிச் சமப்படுத்தவும். பிறகு ஏக்கருக்கு 10 வண்டி (5டன்) தொழு எரு அல்லது கலவை எரு இட்டுக் கடைசி உழவு செய்யவும். கடைசியாக நிலத்தைக் குண்டகாவினுல் சமப்படுத்தல் நல்லது.

**அடி உரமிடுதல் :—** விதைப்பதற்கு முன் ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்தும், 8 கிலோ மணிச்சத்தும் அடி உரமாக இட வேண்டும். இந்த அளவுச் சத்துக்கள் கிடைக்க ஏக்கருக்கு 80கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 36 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை இட வேண்டும்.

**விதைத்தல் :—** 'கொரு' கலப்பையால் வரிசையில் விதைப்பது சிறந்தது. வரிசைக்கு வரிசை 75 சென்டி மீட்டர் (2½ அடி) இடைவெளியும் செடிக்குச் செடி 30 சென்டி மீட்டர் (1 அடி) வீதம் இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

**பின்செய் நேர்த்தி :—** விதைத்த 20-ஆம் நாளில் முதல் களை எடுப்பதுடன் குழிக்கு ஒரு நல்ல செடி வீதம் விட்டு மற்றவைகளை அகற்றி விட வேண்டும். விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் களை எடுத்தல் வேண்டும்.

களை எடுப்பதுடன் 'தந்துலு' என்னும் கலப்பையால் செடி வரிசைகளுக்கு இடையில் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம்—பூக்கும் காலம் வரை—இடையுழவு செய்து வருதல் நல்லது.

**பயிர்ப் பாதுகாப்பு:—** விதை ஊன்றிய ஒரு மாதத்தில் 10 சத செவின் தூளையும், கந்தகத் தூளையும் சம அளவில் கலந்து ஏக்கருக்கு 4 முதல் 5 கிலோ வீதம் தூவ வேண்டும். பிறகு மாதம் ஒரு முறை வீதம் மேற்கூறியவாறே தூவி விட வேண்டும். பருத்தி வெடிக்கும் வரை இவ்வாறு தூவுதல் வேண்டும்.

**அறுவடை:—** குளிர் கால இறைவைப் பருத்திக்குக் கூறியுள்ள படியே செய்யவும்.

**செலவும் வரவும் :—** ஒரு ஏக்கரில் மானுவாரியாக எம். சி. யு. 5 பருத்தி பயிரிட சராசரியாக ரூபாய் 500 செலவாகும். மேற் கூறிய முறையில் சாகுபடி செய்தால் சராசரியாக 3 குவின்டால் பருத்தி கிடைக்கும். அதன் மூலம் ரூபாய் 900 வருவாய் பெறலாம். எனவே, செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 400 நிகர இலாபம் கிடைக்கும்.

## 3. கரிசல் நில மானுவாரிக் கம்போடியாப் பருத்தி

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தற்பொழுது 'லட்சுமி' பருத்திச் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலங்களில் பயிரிட, 'பாரதி' (எம்.சி.யு. 6) பருத்தியே சிறந்தது. இதன் வயது 180 நாட்கள்.



பாரதி - மானுவாரிக்கேற்ற சிறந்த கம்போடியாப் பருத்தி

'பாரதி' பருத்திக்கு வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும், செடிக்குச் செடி 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளியும் விட்டு, 'கொரு' கலப்பையால் விதைக்க வேண்டும். மற்ற சாகுபடி முறைகள் அனைத்தும், மானாவாரி எம். சி. யு. 5 பருத்திக்குக் குறிப்பிட்டுள்ளது போலவே செய்ய வேண்டும்.

'பாரதி' பருத்தி சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூபாய் 450 செலவாகும். ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாகக் கிடைக்கும் 3 குவின்டால் பருத்தி மூலம் ரூபாய் 750 வருவாய் பெறலாம். எனவே, பாரதி பருத்தி மூலம் ஏக்கருக்குச் சராசரியாக ரூபாய் 300 நிகர இலாபம் பெறமுடியும்.

**4. குளிர்காலப் 'பார்படென்ஸ்' பருத்திச் சாகுபடி முறைகள்**

*ஏற்ற ரகம்:*—அதி நீள இழைகளைக் கொடுக்க வல்லதும், 100-ஆம் எண் நூல் நூற்க வல்லதுமான 'சுஜாதா' பருத்தியைச் சிறப்பாகக் கோவை மாவட்டத்தில் பயிரிடலாம்.

*வயது:*—180 நாட்கள்.


*விதைக்கும் பருவம்:*—ஆகஸ்ட்—செப்டம்பர்.

*விதையளவு:*— ஏக்கருக்கு 4 கிலோ விதைகளை விதைக்க வேண்டும்.

*விதைச் செய் நேர்த்தி:*—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலக்க வேண்டும். தேசிய விதைக் கார்ப்பரேஷன் மூலம் வாங்கும் விதைகளில், முன்பே மருந்து கலக்கப்பட்டு இருப்பதால், மீண்டும் மருந்து கலக்க வேண்டிய அவசியமில்லை.

*நிலம் தயாரித்தல்:*—நிலத்தை 4 முறை இரும்புக் கலப்பையால் அல்லது டிராக்டரால் நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு இட்டுக் கடைசி உழவு செய்ய வேண்டும். பார் கலப்பையால் 75 முதல் 90 சென்டி மீட்டர் (2½ முதல் 3 அடி) இடைவெளியில் கிழக்கு மேற்காக அல்லது நிலத்தின் சரிவிற்கு ஏற்பப் பார்கள் அமைக்க வேண்டும்.

*அடியுரம் இடுதல்:*—சுஜாதா பருத்தி பயிரிட ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவுச் சத்து அளிக்க, 31 கிலோ



சுஜாதா - 100-ம் நெம்பர் நூற்புத்திறன் கொண்ட பார்படன்ஸ் பருத்தி

யூரியா அல்லது 70 கிலோ அமோனியம் சல்பேட், 87 கிலோ சூப்பர் பாஸ்பேட், 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ் ஆகிய உரங்களை இட வேண்டும். அல்லது 14 : 14 : 14 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 100 கிலோவை அடியுரமாக இட வேண்டும். மேற்கூறிய இரசாயன உரங்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும், விதை ஊன்றும் இடத்திற்குக் கீழே 2 முதல் 3 அங்குலம் தள்ளிச் சீராக இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும்.

> இந்தியாவில் தற்போது ஆண்டுதோறும் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தீ விபத்துக்களில் அழிந்து போகின்றன.

*விதைத்தல்:*— பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் குழிக்குக் குழி 35 முதல் 45 சென்டி மீட்டர் (14 முதல் 18 அங்குலம்) இடைவெளிவிட்டு, குழிக்கு 3 விதைகள் வீதம் ஊன்றவும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

*பின்செய் நேர்த்தி:*—நிலத்தில் களை தோன்றாமல் இருக்க 20-வது நாளும் 40-வது நாளுமாக 2 தடவை களைக் கொட்டினால் கொத்திக் களை எடுக்க வேண்டும். விதைத்த 6 வாரங்களில் அதாவது செடிகள் 1½ அடி உயரம் வளர்ந்திருக்கும் பொழுது 'ஜூனியர்ஹோ' எனப்படும் கொத்துக் கலப்பையால் அல்லது நாட்டுக் கலப்பையால் ஊடு உழவு செய்து செடிகளைப் பார் நடுவில் இருக்கச் செய்து இரு பக்கமும் மண் அணைக்க வேண்டும்.

*மேலுரமிடுதல்:*— விதை ஊன்றிய 50 முதல் 60 நாட்களில் ஊடு உழவு செய்து, மேலுரமாக 14 கிலோ தழைச்சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை இட்டு மண் அணைத்துக் கொடுக்க வேண்டும்.

*நீர்ப்பாசனம்.*—விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நான்காவது நாள் இரண்டாம் முறையாக தண்ணீர் விடவேண்டும். பிறகு தேவைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் விட்டு வரவேண்டும். மேலுரமிட்டவுடன் கண்டிப்பாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

*பயிர்ப் பாதுகாப்பு:*—'சுஜாதா' பருத்தியில் நல்ல மகசூல் பெற கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது போல் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டும், என்று பரிந்துரைக்கப்படுகிறது.

| வரிசை எண். | விதைத்தபின் பயிரின் வயது (மருந்து தெளிக்கும் வயது) நாட்களில். | பூச்சி கொல்லி அல்லது நோய் தடுக்கும் மருந்தின் பெயர். | ஒரு ஏக்கருக்கு வேண்டிய மருந்தின் அளவு. | ஒரு ஏக்கருக்கு வேண்டிய மருந்துடன் கூடிய நீர்க்கலவை. | |
|---|---|---|---|---|---|
| | | | | கையினால் இயங்கும் தெளிப்பான். | விசைத்தெளிப் பான். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 40 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 540 மி.லி. | 270 லிட்டர் | 60 லிட்டர் |
| 2 | 55 | கார்பரில்–50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெட்டாஸிட்–50). | 750 கிராம் + 150 மி.லி. | 270 ,, | 90 ,, |
| 3 | 60 | என்டோஸல்ஃபான் (தையோடான் 35). | 750 மி.லி. | 360 ,, | 120 ,, |
| 4 | 75 | கார்பரில்–50 (நனையும் செவின்)+ மிதைல் பாரத்தியான் (மெடாஸிட் 50). | 1 கிலோ + 200 மி.லி. | 360 ,, | 120 ,, |
| 5 | 85 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 900 மி.லி. | 450 ,, | 150 ,, |
| 6 | 95 | கார்பரில்–50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்–50). | 1 கிலோ + 200 மி.லி. | 450 ,, | 150 ,, |
| 7 | 105 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 1,100 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 8 | 120 | கார்பரில்–50 (நனையும் செவின் ) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்–50). | 1·25 கிலோ + 250 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 9 | 135 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 1,100 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 10 | 150 | கார்பரில்–50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்–50). | 1·25 கிலோ + 250 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 11 | 165 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 1,100 மி.லி. | 540 ,, | 180 ,, |

குறிப்பு:—*(1) விதைக்கும் சால்களில் குருணை வகை மருந்துகளாகிய டைசல்ஃபோடான் (டைஸிஸ்டான் 5 ஜி அல்லது சால்விரக்ஸ் 5 ஜி-8 கிலோ) அல்லது ஃபோரேட் (தைமட் 10 ஜி-4 கிலோ) போடலாம்.

*(2) விதை போடும் சாலில் குருணை மருந்து போடுவதற்குப் பதில், 'மெட்டாஸிஸ்டாக்ஸ்', 'எக்கட்டீன்', 'ரோகார்' 'ஆன்தியோ' ஆகிய மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 175 மி. லி. அல்லது 'டைமெக்ரான்' மருந்து ஏக்கருக்கு 30 மி. லி. வீதம் 1·80 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 10, 25-ஆவது நாட்களில் தெளிக்கவும்.

3. 'ஃபைடலான்,' 'குப்ராமர்', 'ப்ளூகாப்பர்' போன்ற தாமிர பூசணக் கொல்லி மருந்துகளில், ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 1¼ கிலோ வீதம் அல்லது 'சிரம்', 'சினெப்' போன்ற மருந்துகளில் ஒன்றை ஏக்கருக்கு 420 கிராம் வீதம் 55-வது நாள் மருந்து அடிப்பதுடன் சேர்த்துத் தெளிக்கவும்.

பிந்திய பயிர் பருவத்தில், காய்ப் புழு தொந்திரவு மிகுந்து காணப்பட்டால் 7-வது மருந்து தெளிப்பதிலிருந்து மருந்து அடிப்பதை 10 நாட்களுக்கு ஒரு முறையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

மழை நாட்களில், மருந்துடன் கூடிய நீர்க் கலவை 4½ லிட்டருக்கு 1 மில்லி லிட்டர் வீதம் 'சான்டோவிட்' மருந்தையும் கலந்து கொள்ளவும். இதனால் மருந்து பருத்திச் செடிகளில் நன்கு ஒட்டிக் கொள்ளும். மழையால் மருந்து பாதிக்கப்படாது.


அறுவடை:—விதை ஊன்றிய 4 மாதத்தில் சுஜாதா பருத்திச் செடிகளில் காய்கள் வெடிக்க ஆரம்பிக்கும். பிறகு பருத்தி வெடிப்பு மேலும் 2½ மாத காலத்திற்கு நீடிக்கும். காலை வேளையில் பருத்தி எடுப்பதே சிறந்தது. காய்ந்த இலைச் சருகுகள் ஒட்டாமல் பருத்தி எடுக்க வேண்டும். மிகவும் தூய்மையாக உள்ள நீண்ட இழைப் பருத்தி ரகங்களுக்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைப்பதால், காய்களைப் பிடுங்காமல், நன்றாக மலர்ந்து வெடித்த பருத்திகளை மட்டுமே பறிக்க வேண்டும்.

வரவும் செலவும்:— மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு 'சுஜாதா' பருத்தி பயிரிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 8 முதல் 12 குவிண்டால் பருத்தி எடுக்க முடியும். ஒரு ஏக்கர் 'சுஜாதா' பருத்தி பயிரிட ரூபாய் 1,400 செலவாகும். ஒரு ஏக்கர் 'சுஜாதா' பருத்தியிலிருந்து ரூபாய் 2,800 முதல் ரூபாய் 3,000 வரை வருவாய் பெறலாம். எனவே, செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 1,400 முதல் ரூபாய் 1,600 வரை நிகர இலாபம் கிடைக்கும்.

**வேண்டுகோள்!**

பருத்தி, பணத்தை அள்ளித் தரும் பயிராக இருப்பதால், அடுத்துவரும் புரட்டாசி மாதத்தில் 'எம்.சி.யு. 5' சுஜாதா' ஆகிய பருத்தி ரகங்களை இறைவையாகவும், ஐப்பசி மாதத்தில் 'எம்.சி.யு. 5', 'பாரதி' ஆகிய பருத்தி ரகங்களை மானாவாரியாகவும் பயிரிட்டு பயன்மிகு பெற்று வளமோடு வாழுமாறும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறும் தமிழ் நாட்டு உழவர் பெரு மக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

—ஆர்.எம்.



# கொய்தவை



■இந்தியாவில் மொத்தம் 17 இராணுவப்பள்ளிகள் உள்ளன. இவற்றில் ஆண்டுதோறும் மொத்தம் 1,000 முதல் 1,200 மாணவர்கள் வரை சேர்த்துக்கொள்ளப்படுகி ருர் கள். இராணுவப் பள்ளி களில் படித்த பின்தங்கிய வகுப்பு, பழங்குடிப் பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை

1972-73ல் 41,

1971-72ல் 76,

1970-71ல் 118,

1969-70ல் 59 ஆகும்.


■ இப்போது இந்தியாவிலுள்ள வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை நாடு விடுதலை பெற்றபோது இருந்ததைப் போல 50 மடங்கு ஆகும். 1972 டிசம்பர் முடிவில் நாட் டிலிருந்த உரிமம் பெற்ற வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை 129 இலட்ச மாகும். வானொலிப் பெட்டி களின் எண்ணிக்கையில் முத லிடம் பெறும் மராட்டிய மாநிலத்தில் மொத்தம் 19 இலட்சமும், பஞ்சாபில் 14 இலட்சமும், தமிழ் நாட்டில் 13 இலட்சமும் உள்ளன.

வானொலி உரிமக் கட்டணம், உபரிக் கட்டணம் ஆகியவை மூலம் 1972-ஆம் ஆண்டு 16 கோடியே 64 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது.

■ 1972 டிசம்பர் நிலவரப் படி, நாட்டில் 68 இலட்சத்து 96 ஆயிரம் வேலையில்லாத வர்கள் வேலைகோரிப் பதிவு செய்திருந்தார்கள். வேலை கோரியவர்களில் 32 இலட் சத்து 74 ஆயிரம் பேர் படித் தவர்கள். பள்ளி இறுதி வகுப் புக்குக் குறைவாகப் படித்த வர்களின் எண்ணிக்கை, எழுதப்படிக்கத் தெரியாதவர் கள் உட்பட 36 இலட்சத்து 22 ஆயிரம் ஆகும்.

■ இந்தியாவிலிருந்து ஏற்று மதியாகும் பிளாஸ்டிக், லினே லியம் ஆகியவற்றின் மதிப்பு 1972-73ல் 8 கோடியே 43 இலட்சம் ரூபாய் அளவை எட்டியது. இதில் பிளாஸ்டிக் பொருட்களின் பங்கு 4 கோடியே 86 இலட்சம் ரூபாய் அளவிலிருந்து 7 கோடியாக உயர்ந்தது. உருக்கி வார்த்த பிளாஸ்டிக் பொருட்களின் ஏற்றுமதி 1972-73ல் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் அந் நியச் செலாவணியை ஈட்டித் தந்தது. மூக்குக் கண்ணாடி ஃபிரேம்கள் ஏற்றுமதியும் 1971-72ல் 42 இலட்சம் ரூபாய் அளவில் இருந்தது. 1972-73ல் ஒரு கோடியே 53 இலட்சம் ரூபாய் அள வுக்கு உயர்ந்தது.

■ பெரும்பாலும் ஆஸ்திரே லியா, ஆஸ்திரியா, பெல் ஜியம், கனடா, ஆலந்து, இத்தாலி, கென்யா, குவைத், பிரான்சு, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சாம் பியா, மலாவி, சுவீடன், ஸ்பெய்ன், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகள் இந்திய விளையாட்டுச் சாத னங்களை வாங்குகின்றன.



■ தமிழ்நாடு ஆந்திரம், குச ராத், ஜம்மு காச்மீர், கேரளம், மைசூர், நாகாலாந்து, அந்த மான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், அருணாசலப் பிரதேசம், தாத்ரா மற்றும் நாகர்அவேலி, புதுவை ஆகிய வற்றில் பள்ளி இறுதி வகுப்பு வரை "சிறுவர், சிறுமியர் களுக்கு" இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மணிப்பூர், ஒரிசா, ராஜஸ் தான், திரிபுரா ஆகியவற்றில் "சிறுமிகளுக்கு மட்டுமே" பள்ளி இறுதி வகுப்பு வரை, இலவசமாகக் கல்வி கற்பிச் கப்படுகிறதாம் !

# மாவட்டங்களிலிருந்து



## தஞ்சை மாவட்டம்

பூம்புகார்க் கலைக்கூடம் :— காவிரிக் கரையில் பூ விரித்து நின்ற பொன்னகராம் பூம்புகாரில் எழுநிலை மாடத்தின் எழில் காண மக்கள் பெரும் திரளாக வந்த வண்ணமிருக்கின்றனர். காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் வரை ஒரு இலட்சத்துப் பன்னிரெண்டாயிரம் பேர் இக்கலைக் கூடத்தைப் பார்வையிட்டுள்ளனர். சூலை 29-ஆம் நாள் சனிக்கிழமை மட்டும் பதினோராயிரம் பேர் கண்டு களித்தனர்.

கலைக்கூடம் காண வரும் மக்களை மகிழ்ந்து வரவேற்றிட, கலைக்கூடத்தின் மாண்பினை விளக்கிட, அவர்களை மகிழ்வித்து அனுப்பிட வரவேற்பு அலுவலர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இரவு 8 மணிக்கு மேல் மாயூரம், சீர்காழி ஆகிய இடங்களுக்குச் சென்றிடப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. விடுமுறை நாட்களில் கலைக் கூடம் காணச் சோழன் போக்குவரத்துக் கழகத்தினர், தனிப் பயணிகள் பேருந்துகளை அனுப்புகின்றனர்.

## இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகர் அரசு மருத்துவமனையில் 1-7-73 முதல், தாய்மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பதினொரு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பொருட்டு விருதுநகர் முகாமிற்குத் திரள் திரளாக வருகை தந்தனர். சூலை 31-ஆம் நாள் முடிய 416 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சிவகெங்கை அரசு மருத்துவமனையிலும் சூலை 17 முதல் தாய்மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை இரண்டாவது முகாம் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது. 27-ஆம் நாள் முடிய இதுவரை 180 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. சிவகெங்கையைச் சுற்றியுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தாய்மார்கள் அழைத்து வரப்பட்டனர். அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு வழக்கமான உதவித் தொகை ரூ. 30 தரப்பட்டதோடு, கவர்ச்சியான ஸ்டீல் கைப்பிடியுடன் கூடிய பெரிய டபேட்டா சில்க் குடையும் தரப்பட்டது. குலுக்கல் மூலம் ரொக்கப் பரிசுகளும் வழங்குதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அறுவைச் சிகிச்சைக்குப்பின் தாய்மார்கள் ஆறு நாட்கள் வரை மருத்துவ மனையில் தங்கி ஓய்வு பெற வசதி செய்யப்பட்டது. அவர்களை மருத்துவ மனைக்கு அழைத்து வரவும், திரும்பக் கொண்டு போய் விடவும் இலவச வாகன வசதிகள் எபோதும் தயாராக இருந்தன. அவர்களுக்கும், அவர்களது கைக் குழந்தைகட்கும், உதவிக்கு உடன் வரும் உறவினருக்கும் ஆறு நாட்கள் வரை அறுசுவை உணவும் வழங்கப்பட்டது.

## மதுரை மாவட்டம்

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சூலைத் திங்களில் நடைபெற்றுள்ள சில வளர்ச்சிப் பணிகள் :


கிராம அளவுத் திட்டத்தின் கீழ் 4732 மண் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. நவீன விதைகள் விவசாயிகளுக்கு அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளன. இவ்வலுவலகத்திலிருந்து முதல் போகத்திற்குக் கருணை, காஞ்சி முதலிய நெற்பயிரைப் பயிரிடும்படி விவசாயிகளுக்கு விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வூராட்சி ஒன்றியப் பகுதிகளில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 56,645 இத்திங்களில் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை முன்னிட்டு 19 இளைஞர் அணியினர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருமோகூர், புதுத் தாமரைப்பட்டி, சிட்டம்பட்டி ஆகிய கிராமங்களில் முதியோர் கல்வி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குன்னத்தூர், ஒத்தக்கடை ஆகிய ஊராட்சி மன்றங்களில் திறந்தவெளி அரங்கம் அமைப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வூராட்சி ஒன்றியப் பகுதியில் இத்திங்களில் 14 மகளிர்க்கு காந்தி கிராமத்திலும், 7 மகளிர்க்கு மதுரை அரசினர் மருந்தகத்திலும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

## செங்கற்பட்டு மாவட்டம்

சூலை 31-ஆம் நாள் கும்மிடிப் பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குருவாட்டுச்சேரியில்' உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்களால் புதிய பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. குருவாட்டுச்சேரி குடியிருப்பில் ரூ. 10,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மின் அழுத்தர் குடிநீர்க்குழாயினை அமைச்சர் இயக்கி வைத்தார். பின்னர் நடைபெற்ற விழாவிற்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். கிராமங்கள் அனைத்தும் சுயதேவை நிறைவேற்றுவதன் அவசியத்தை வற்புறுத்தியும், தமிழக அரசின் அருஞ் சாதனைகளை விளக்கியும் அமைச்சர் பேசும் போது குறிப்பிட்டார்.



# உலகில் இரண்டு ஜாதிகள்




டி.என்.சுகி சுப்பிரமணியன்

கொத்தித் திரியும் கோழியும், கூவித் திரியும் குருவியும், கத்தும் பசுவினமும் தத்தம் குஞ்சுகளையும், கன்றுகளையும், காக்கத்தான் முயற்சி செய்கின்றன. அறிவுடைய ஒருவனும், அன்புடைய ஒருத்தியும் இதே மிருக இனத்து அறிவையோ பறவை இனத்து அறிவையோ தான் பெற்றிருக்கிறார்கள்.

குழந்தைப் பாசத்தைத் துறவிகள் கூட அடக்க முடியாது என்பது ஞானிகளும் நல்லவர்களும் கண்ட முடிவு.

மணிவாசகன் கற்ற கலை ஞானங்களையும், பெற்ற பட்டங்களையும் செய்யும் முயற்சிகளையும் வித்தாக வடித்தால்? அவை:

தன்னைத் தான் நம்பவேண்டும்.

தன்னைத் தான் அறிதல் வேண்டும்.

தன்னைத் தான் காக்க வேண்டும்.

தன்னையே உயர்த்தல் வேண்டும்.

தன்னை மையப் புள்ளியாக வைத்துப் பாண்டித் துரையின் பணத்தால் படித்த காலம் முதல் செண்பகா மில்லில் சட்ட ஆலோசகன் பதவி யடைந்தது வரை அவன் செய்யும் காரியங்கள் யாவும் தன்னை உயர்த்தும் காரியங்களாகவே இருந்து வந்தன.

டாக்டர் நர்மதாவுக்கு ஆண் குழந்தை! செவிக்கினிய தேன் சொட்டும் சேதி!

மனத்தை மலர்விக்கும் மகிழ் வூட்டும் சேதி. உடனே, தன் குழந்தையின் வருங்கால வாழ்வுக்குத் திட்டம் போடும் முயற்சியில் மணிவாசகன் மனம் இறங்கிவிட்டது!

மருந்தகத்தின் டெலிபோனை அவன் சுழற்றினான்!

''ஹலோ. . நான்தான் மணிவாசகன் வழக்குரைஞர் பேசுகிறேன்''

''நான் தான் கோவை வடிவேலு! என்ன உன் குரலில் மகிழ்ச்சி....!''

''உங்கள் தயவு வேண்டும்''

''என் தயவு உனக்கா? தயவுக்குத் தலை தாழ்த்திப் பழக்கமே கிடையாதே!'' அவர் அட்டகாசமாகச் சிரிக்கிறார்.

''இல்லை, சற்று முன் பிறந்த என் மகனுக்கு உங்கள் தயவு வேண்டும்!''

''மிக்க மகிழ்ச்சி. பேரனுக்கு அவன் தாத்தா பாண்டித்துரை இருந்தால் எத்தகைய ஆசியும் அன்பும் தருவாரோ அதனை நான் தருகிறேன்!''


''நீங்கள் தருவீர்கள் என்று எனக்குத் தெரியும். நானும் நர்மதாவும் உதகையில் முதன் முதலாகச் சந்தித்தோமே!''

''நான் தான் கண் குளிரக் கண்டேன்; முதற்கண் கண்டேன்''

''அதனால் தான் காது குளிரும் சேதியை உங்களுக்கு முதற்கண் சொல்லுகிறேன்!''

''மிக்க மகிழ்ச்சி!''

கோவை வடிவேலு போனை வைத்துவிட்டார். தமக்குள்ளாக வளர்ந்து வெடிக்க விருக்கும் வெறுப்பை வெளிக் காட்டாமல் போனை வைத்து விட்டார்! தமது மகனுக்குப்



பெண் கேட்டு ராதையை மருமகளாக அடைய நினைத்தவருக்கு ராதையும் மறுத்துவிட்டாள். ராதைக்குப் புத்தி சொல்லும் ஆர்வமும் ஆற்றலும் இல்லாத மணிவாசகனுக்குப் பிறந்த குழவி ஆணாகப் பிறந்தால் என்ன, அம்மிக் குழவியாக இருந்தால் அவருக்கு என்ன?

அவருக்குள்ளாக, கோபம் குளவியின் கொடுக்குப் போலக் கூர்மையாக இருந்தது. உதட்டளவில் பேசிவிட்டு உள்ளத்துக்குள் பொருமையைப் பொங்கவிட்டுக் கொண்டிருந்தார்.

மீண்டும் போன் மணி ஒலிக்கிறது. நிதானமாக இருந்து நினைத்ததைச் சாதிக்க அவர் நினைத்தார்.

''ஹலோ'' என்றான் மணிவாசகன்.

''ஆமாம் இடையில் நின்றுவிட்டது. தாயும் சேயும் நலந்தானே!''

''இருவரும் நலம். குழந்தை பிறந்த சேதியைச் சொல்வதற்கு முக்கிய காரணம் இருக்கிறது.''

''என்ன?''

''உதகையில் நானும் நர்மதாவும் குதிரைச் சவாரி போகும்போது எங்களைப் பார்த்தீர்கள்''

''பார்த்தேன்''

''என் மகன் பாபுவுக்கு உதகையில் நடக்கும் பள்ளியிலே நீங்கள் இடம் பிடித்துத் தரவேண்டும்''

கோவை வடிவேலுவின் அலைச் சிரிப்பு டெலிபோன் வழியாக மணிவாசகன் காதை வந்து நிரப்புகிறது.

''என்ன சிரிக்கிறீர்கள்?''

''பிள்ளை பிறந்து ஒரு மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் நீ உதகைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கு சிபாரிசு செய்ய என்னைத் தேடுகிறாய்! இடம் பிடிக்கிறாய்''

### மாவைக் குறிக்கும் பல சொற்கள்

தமிழ் இலக்கியங்களில் இடி, நுவணை, பிண்டி, அருப்பம், பிட்டம் என்னும் பல்வேறு சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தனை சொற்களுக்கும் மாவு என்பதுதான் பொருள்.

நீங்கள் மறுக்கக்கூடாது! நான் யாரிடமும் கெஞ்சமாட்டேன்; வணங்கமாட்டேன். உதகையில் - நர்மதாவைச் சந்தித்தபோது என் உள்ளத்தில் எழுந்த ஓர் ஆசை! எனக்குப் பிறந்தவன் பையனாக இருந்தால் அவன் உதகைப் பள்ளியில் படிக்க வேண்டும். அதற்கான உதவியை உங்களிடம் கேட்க வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?''

''உன்னை அவசரக்காரன் என்பதா? இல்லை பேரறிவாளன் என்பதா? உங்கள் வீட்டு ராதையை எங்கள் வீட்டுக்கு அனுப்பவில்லை என்பதற்காக, உதகைப் பள்ளியில் இன்னும் மூன்றாண்டு நாலாண்டுக்கு அப்பால் உனக்கு இடம் வாங்கித் தருகிறேன்!''

''இது உறுதிதானே?''

''உறுதி!''

''மிக்க நன்றி!''

மணிவாசகன், மா பெரும் வெற்றிச் செயலைச் செய்து விட்டவன் போன்று ஆனந்தம் கொப்புளிக்க உட்கார்ந்திருக்கிறான். அவன் அருகாக வந்து நின்ற ராதை அவன் பேசிய டெலிபோன் பேச்சைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''அத்தான்''

''குழந்தை எப்படி இருக்கிறது?''

''அம்மாவைப் போலச் சிகப்பு. அப்பாவைப் போல் காரியவாதி! அழகும் அறிவும் சங்கமமாகிய சிங்கக் குட்டி போல் இருக்கிறான்.''

''ராதை!''

''என் பிள்ளை இருக்கிறானே! அவன் நான் படிக்கக் கஷ்டப்பட்டது போல - பிறர் தயவிலே பிறர் கையை எதிர்பார்த்துப் படிக்கக் கூடாது! என் உழைப்பையும் உதிரத்தையும் கொட்டிக் குவித்து ஓர் இளவரசனைப் போன்று படிக்க வைப்பேன்!''

''அவ்வாறு செய்ய உங்களுக்கு அந்தஸ்து இருக்கிறது. அவன் அம்மாவுக்குத் தகுதி இருக்கிறது.''

''பாபு எப்படி இருக்கிறான்?''

''ஆண்கள் அவசரப்படக் கூடாத இடங்களில் பிரசவ ஆஸ்பத்திரியும் ஒன்று!''

''இன்னும் அரை மணியில் உங்கள் மனைவியைக் கட்டிலிலும் உங்கள் மகனைத் தொட்டிலிலும் பார்க்கலாம்!''

பிஞ்சுக் கரத்தையும், மிரள விழிக்கும் குழந்தைக் கண்களையும் அதன் பட்டுடலையும் தொட்டுப் பார்க்க மணிவாசகன் கனவு கண்டு நிற்கிறான். மற்றைய உலகம் யாவும் அவனுக்கு மறந்துவிட்டன.

''அத்தான், அடையாற்றுப் பங்களாவிற்கு - செண்பகத்திற்கும் உங்கள் நண்பர் ரோமியோவிற்கும் சேதி சொன்னீர்களா?''

''இல்லை. அவசியமும் இல்லை''

''நீங்கள் சொன்னால் உங்கள் நண்பரும் அவர் மனைவியும் மகிழ்ச்சியடைவார்கள்!''

அவன் மனம் வானத்திற்கு மேலே எங்கோ வட்டமடித்து மகிழ்ச்சிப் புறாவைப் போலச் சுழன்று கொண்டிருக்கிறது.

நண்பனை நினைக்கிற நேரமா!

நீ, சேதியைச் சொன்னால் மகிழ்ச்சியடைய மாட்டார்களா?''

''உங்களுக்காக— தனக்குக் கிடைக்கவிருந்த சட்ட ஆலோசகர் பதவியை வாங்கித் தந்த நண்பருக்கு நீங்கள் சொன்னால் தான் மரியாதை! சொல்ல வேண்டுவது கடமையும் கூட''

''எனக்கு எது மரியாதை, எது அவமரியாதை என்பது தெரியும். நான் சற்றே மனசு வைத்து வாதத்தைத் திருப்பி இருந்தால், ரோமியோவின் மாமனார்....''

''ஆமாம். உங்கள் முதலாளி!''

''செண்பகத்தின் தந்தை''

''ஆமாம். உங்கள் முதலாளி''

''திருவாளர் முத்தையா கம்பி எண்ணும் நிலைமையை உண்டாக்கி இருப்பேன். அவ்வாறு அவரைக் காப்பாற்றியதற்கு ஒரு நன்றி கூடச் சொல்லத் தெரியாமல், எனக்கு முட்டாள் பட்டம் கட்டியவன் ரோமியோ! அவனுக்குத் துணை நின்றவள் செண்பகம். இவர்களுக்குச் சேதி சொல்லும் தகுதியும் தன்மையும் என்னிடம் எதிர்பாராதே!''

சுய காரியப் புலிகள் தங்கள் நலனுக்காகப் பிறரைத் தாழ்த்திப் பேசுவார்கள். மணிவாசகன் இவ்வாறு பேசியது வியப்பில்லை!

''மிக்க நன்றி''

பரபரப்பாக உள்ளே ஓடிப் போனாள் ராதை. டாக்டர் நர்மதா, தாய் நர்மதாவாகத் துவண்டு கிடக்கும் அனிச்சப் பூவைப் போல இருப்பதைக் கண்டாள். குழந்தைக்குத் தாயான வெட்கம்; அதே சமயம் ஒருவகைப் பெருமிதம், குழந்தை பெற்ற பெண்கள் முகத்தில் ஜொலிக்குமே, அதனை ரசித்துக் கொண்டிருந்தாள் ராதை.

பட்டுத் துகிலோ, பவள மல்லிச் செண்டோ என விளங்கிய சின்னஞ்சிறு மதலை, தன் விரல்களை வாயில் போட முயற்சி செய்து கொண்டிருந்தது. பிறந்து அரைமணி நேரத்திற்குள் அதற்குப் பசி போலும்!

முயற்சியே செய்யாமல் எந்த உயிருக்குள்ளும் இயங்கிக் கொண்டிருப்பது பசி ஒன்று தானே!

மருந்தகத்து நர்சு தங்கம் ஓடியாடித் தூய ஆடைகளை எடுத்துக் கால் முதல் கழுத்து வரை போர்த்தினாள்.

சாறு பிழியப்பட்டுத் துவண்டு போன வாழைத் தண்டு போன்று படுத்திருக்கும் நர்மதாவைக் காண, மணிவாசகன் உள்ளே வந்தான். மனைவி முகத்தின்மீது மனக்கண் லயித்தது.

தாய் நர்மதாவின் கன்னங்களில் குழைவு. கண் நிறையக் கள்ளச் சிரிப்பு. மணிவாசகன் கண்கள் அவள் கண்களுடன் சந்தித்தன. குழந்தையைப் பார்த்தான். அதைத் தொட்டுத் தூக்குவதற்குப் பயம்....

ராதை ''தூக்கி உங்கள் கையில் தரட்டுமா?'' எனக் கேட்கிறாள்.

வாங்க வேண்டுமென்று ஆசை உந்துகிறது. நழுவி விழுந்துவிடுமோ என்ற பயம் எச்சரிக்கை செய்கிறது.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆயிரம் கனவுக் கதைகளைக் கண்களுக்குள் தேக்கிக் கொண்டார்கள். அது காமக் கனவு இல்லை. சேமக் கனவு! குழந்தை நலம் பற்றிய குறும்புக் கனவு.

''நர்மதா! இவனுக்கு உத்தைப் பள்ளியில் இடம் பிடிக்கும்படியாக வடிவேலு மாமாவுக்கு 'டிரங்கால்' பேசினேன்.''

சிரிக்க முயன்றாள் பனிமலர் போலப் படுத்திருந்த நர்மதா; முடியவில்லை.

''பிறந்த பிள்ளைக்குப் படிக்க அக்கறை காட்டுகிறீர்கள். அது தந்தையின் கடமை''

''அதுவும் உயர்தரமான பள்ளியில் என் மகன் படிக்க வேண்டும். நான் படித்த தரித்திரப் படிப்போ, நான் கற்ற மட்டக் கல்வியோ கற்கக் கூடாது. பிறர் கையேந்தி நான் படித்தது போல இவன் படிக்கக் கூடாது. அவன் பணக்கஷ்டம் தெரியாதபடி, கலையும், கல்வியும் இணைந்த பள்ளியில் கர்வத்துடன் படிக்க வேண்டும்,,

''படிக்கட்டும். ராதை சட்டக் கல்லூரிக்குப் போனாளா? படித்தாளா? அதை நீங்கள் கவனிக்கவும் இல்லை! அக்கறை காட்டவும் இல்லை! விசாரிக்கவும் இல்லையாம்!''

''நல்ல சமயத்தில் கசப்பான நினைவுகளைப் பேசுவதே உனக்குப் பழக்கம். அவள் படித்தாலும் சரி, பாழாகப் போனாலும் சரி, எனக்குக் கவலை இல்லை!''

பாழாகப் போவதாமே!

நெஞ்சில் பொறுமைத் தீப் பிடித்தால், நாக்கில் பொறி தெறிக்கும்!

தியாகங்களைச் செய்தவள் பாழாகப் போவதுதான் மரபா?

நன்மையை, நல்லதைக் கணத்துக்குக் கணம் துடிப்பாகச் செய்தவர்கள் பாழாகப் போக வேண்டியதுதான் நியாயமா?

நல்லவர் அழிவதும் அல்லவர் வாழ்வதும் நியாயமா?

பிள்ளை பெற்ற சோர்வில் சோர்ந்து கிடந்த நர்மதா உள்ளத்துள்ளே, மகிழ்ச்சி மலர்வதற்குப் பதிலாகத் துக்கம் சுட்டுக் கொண்டிருந்தது. ரத்தம் வற்றி வெளிறிய முகத்தில் கோபம் துடிக்க ஆரம்பித்தது.

''உன் கவலை எப்போதும் தனி. என் கவலை எப்போதும் தனி.''

''நமது கவலையாக ராதையின் படிப்பை நீங்கள் இன்று முதல் எண்ண மாட்டீர்களா?''

''என் குடும்பக் கவலை எனக்குத் தலைக்கு மேலாக இருக்கிறது!''

''வக்கீல் சார் உங்களை போனில் கூப்பிடுகிறார்கள்'' என்று நர்சு தங்கம் வந்து சொன்னாள். டெலிபோன் பக்கம் போவதற்குள் தொட்டில் அருகாகப் போய்க் கொண்டிருந்தான் மணிவாசகன்.

குனிந்து 'குழந்தையின் பொற்கரங்களை முத்தமிட்டு' அறையைவிட்டு வெளியே போனான். சுயநலத்தின் நெடிய உருவம் வெளியே போவதாக டாக்டர் நர்மதாவின் கண்ணில்பட்டது.

ஒவ்வொரு விநாடியும் தன்னைப் பேணும் ராதையின் செய்கையில் தாய்மை அன்பையும், பெண்மையின் பேரெழிலையும் கண்ட நர்மதாவின் உள்ளம்—

ஒவ்வொரு விநாடியும் தன்னையோ, தன் செய்கையையோ மதிக்காத ஆண்மைத் திமிரையும், அடங்காத தன்னல உருவத்தையும் கணவன் செயலில் கண்ட நர்மதாவின் உள்ளம்—

கலங்கித் தவித்தது.

ராதை எதிர்பார்க்காத ஒரு சொல் நர்மதாவின் சோர்வுள்ள உடம்பிலிருந்து ஒலித்தது.

''ராதை! உன்னை அலட்சியப்படுத்தினர். என்னை அவர் லட்சியமாக்கினர். என்னை இனி அலட்சியப்படுத்தி என் குழந்தையை லட்சியப்படுத்தினாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை!''

''நிறுத்தக்கா! யாரோ பெற்றெடுத்த அனாதைக் குழந்தை உங்களைப் பாலமாக இணைத்து வைத்தது. நீங்கள் இருவரும் பெற்ற இக்குழந்தை உங்கள் இருவரையும் கோபுரமாய் வளர்த்து உயர்த்திக் காட்டும்!''

''கேள்விக் குறியாக வளர்த்துக் காட்டுமா? இல்....லை'' என்று நர்மதாவிற்குக் கேட்கத் தோன்றுகிறது. கேட்கவில்லை.

நர்சு தங்கம் அங்கே வந்தவள், ''டாக்டரம்மா! முன்பு இங்கே மோட்டார் விபத்துக்கு ஆளாகிய கேசாக அட்மிட் ஆகி இருந்தாளே அஞ்சலை'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமாம் கூலிக்கு மில்லில் வேலை வாங்கிக் கொடுத்தாளே ராதை....'' என்றாள் நர்மதா.

''அவள் புருஷன் சண்முகத்திற்கு நாலு வருஷம் சிறைவாசம் கிடைத்திருக்கிறதாம். இன்றுதான் தீர்ப்பு ஆச்சுதாம். இப்போதுதான் டெலிபோனில் சேதி சொன்னார்கள்! வக்கீல் கேட்டுக் கொண்டிருந்தார்''

டாக்டர் நர்மதாவின் கண்கள் குளமாயின. அது கணவன் திறமையை நினைத்த பெருமையா? சட்டத்தின் இரும்புப் பிடியை எண்ணிய ஏக்கமா?

குழந்தை 'வீல்' என்று கத்தியது!

தண்டனை பெற்ற காரோட்டியை மறந்தாள். கணவனின் கடின உள்ளத்தையும் மறந்தாள். கதறியழும் குழந்தையின் பவளவாய், அவள் நெஞ்சுக்கும் நினைவுக்கும் குளிர்ச்சியைத் தந்தது!

**1971-72-ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்குப் பழ ஏற்றுமதியின் மூலமாக 634 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட அந்நியச் செலாவணியை இந்தியா தேடிக் கொண்டிருக்கிறது.**

## 8. புயலன்ன பூசல்

பத்தாம் நாள் தாயும் குழந்தையுமாக ராஜா அண்ணாமலைபுரம் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். குழந்தை பெற்றவர்களுக்குக்கிடைக்கும் பேறுகால லீவு, டாக்டர் நர்மதாவுக்கு இருந்தது.

வக்கீல் மணிவாசகன் முன்னைவிடச் சுறுசுறுப்பாகத்

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வழக்குகளில் பங்கு பெற்றுத் திறமையைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தான். காலத்தின் விநாடிகளைக் 'கரன்சி'யாக்கிக் கொண்டிருந்தான்.

அன்றைக்குச் சிங்கப்பூரிலிருந்து பதிவுக் கடிதம் ஒன்று வந்திருந்தது. தமது பேரனுக்கு ஓர் இலட்ச ரூபாய் அன்பளிப்பு அனுப்பியிருந்தார். மகள் பெயருக்கு டிராப்டு இருந்தது.

டாக்டர் நர்மதாவின் உள்ளம் ஒரு வார காலமாக அலைமோதிக் கொண்டிருந்தது. இதற்குரிய காரணங்களில் செண்பகா மில்லின் உரிமையாளர் முத்தையா கொடுத்த பரிசுத் தொகை ஒரு காரணம். அதனைத் தன் கணவன் ஏற்றுக் கொண்டது மற்றுமொரு காரணம். அறிவைக் கொண்டு வாழும் கணவனோடு, உணர்ச்சியைக் கொண்டு வாழும் மனைவியால் இணங்கிப் போக முடியாது.

அதிலும் அந்தத் தொகையை மில் முதலாளி இனமாகக் கொடுத்திருக்கலாம், அல்லது வக்கீலுக்குரிய வழக்காடல் தொகையாகக் கொடுத்திருக்கலாம். அவ்வாறு அவர் கொடுக்கவில்லை.

''வக்கீல் மணிவாசகன் உன் வாதத்திறமைக்கு நான் ஏற்கெனவே உனக்குச் சம்பளம் மாதாமாதம் தருகிறேன்''

''ஆமாம் தருகிறீர்கள்''

''எந்தப் பணத்தைக் காரோட்டி சண்முகம் அவமதித்தானோ, எந்தப் பணத்தை ஆசுபத்திரி அறையில் அஞ்சலை அவமதித்தாளோ, அதே பணத்தை உனக்குப் பரிசு தருவதற்காக அப்படியே கொண்டு வந்திருக்கிறேன்.''

''நீங்கள் கொடுக்கப் பிறந்தவர்கள். கொடையை மறுப்பது மதியீனம்''

இந்த வார்த்தை நர்மதாவின் பச்சை உடம்பில் துப்பாக்கி ரவையாகப் பாய்ந்து கொண்டிருந்ததை அறியவில்லை!

''உன் குழந்தைக்குப் பேரிடும் நாளில் நான் இருக்க மாட்டேன். டில்லிக்குப் போகும் முக்கிய வேலை இருக்கிறது''

''குழந்தையின் ஓராண்டு வைபவத்தைக் கூட நான் கொண்டாடுவதாக இல்லை!''

''ஆனாலும் செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்பது வான்புகழ் வள்ளுவர் வாக்கல்லவா?''

''என் கடமையைச் செய்தேன்''

''உன் கடமையைச் செய்தாய். என் கண்ணியத்தைச் செய்கிறேன். இந்த வீட்டை விலைக்கு வாங்கி விடு! மேலும் பணம் தேவைப்பட்டால் என்னிடம் தெரிவித்தால் போதும்''

''ஆகட்டும் முதலாளி!''

மணிவாசகன் தன் வாய் திறந்து 'முதலாளி' என்று கூறுகிறான். முதலாளியின் பணம் அத்தனை சக்தி வாய்ந்தது. ரூபாய் ஐம்பதினாயிரம் குழந்தைக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது. மணிவாசகன் மரியாதையுடன் எழுந்து ''உள்ளே வாருங்கள் குழந்தையைப் பார்க்கலாம்'' என்று கனியும் குரலில் அழைத்தான்.

''ராதை! காப்பி டிபன் கொண்டா!'' என்று அதே சமயம் கர்ச்சனை செய்தான்.

உள்ளே முதலாளி முத்தையா வருகிறார். குழந்தையைப் பார்த்து ''இவன் கோடீஸ்வரன் ஆவான்! உன்னைவிட எமகாதகனாக இருப்பான்'' என்று வாழ்த்துகிறார்.

உள்ளே முதலாளி முத்தையா வரப்போவதை அறிந்த நர்மதா அவர் முகத்தில் விழிக்க எரிச்சல்பட்டு விரைவாகப் பக்கத்து அறைக்குள் நுழைந்து கொண்டாள்.

''நர்மதா! நம்ம முதலாளி வந்துள்ளார். நம்ம குழந்தைக்கு ஐம்பதினாயிரம் பரிசு தந்துள்ளார்''

அதாவது வெளியே வந்து முதலாளியை வரவேற்பாயாக! வணங்குவாயாக! அவர்தம் ஆசி பெறுவாயாக! என்னும் பொருள் தொனிக்கும் குறிப்பில் பேசுகிறான்.

அவளோ மூச்சை உள்ளே அடக்கிச் சும்மா இருந்துவிட்டாள்.

''வக்கீல் மணிவாசகன்! பிள்ளை பெற்ற பெண்களுக்கு எத்தனை உடல் அசௌகரியங்



## பூம்புகாரில் அகழ்வாராய்ச்சி

சோழர் காலத்துத் தலைநகராக விளங்கி அழிந்துபட்டுத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரும் பெரும் முயற்சியால் இன்று புதுப்பொலிவு பெற்றுவரும் பூம்புகார் எனப்படும் காவிரிப் பூம்பட்டினத்தில் மத்திய தொல்பொருள் அகழ்வாய்வுத் துறையினர் இப்போது ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

புகழ்பெற்ற இந்தப் பழம் பெரும் நகரத்தின் பெரும் பகுதி கடலில் மூழ்கிவிட்ட வரலாற்றையொட்டிப் பூம்புகார்க் கடலின் அடியிலும் அகழ்வாராய்ச்சி நடத்துவது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்யும்; இந்த ஆராய்ச்சியின் மூலம் பயனுள்ள விளைவுகள் கிடைக்கும் என்று தெரிந்தால் 5ஆவது திட்ட காலத்தில் இது மேற்கொள்ளப் படலாம்; கடலில் மூழ்கி ஆராய்ச்சி நடத்துவதற்காகத் தனிப் பயிற்சியும் அளிக்கப் படும்.

கள் இருக்கும். டில்லி போய் வந்த பின்னர் ஒரு நாள் வருகிறேன்'' என்றவர் குழந்தை கையைத் தூக்கி முத்தமிட்டார்.... சிரித்தார்... குழந்தையைக் கண்டால் எத்தனை கொடிய உள்ளங்களும் குழந்தைத் தன்மையடைந்து விடுவதை ஒளிந்து நின்று பார்த்த நர்மதாவுக்கு வியப்பாக இருந்தது.

'' அத்தான்! காப்பி டிபன் ரெடி. உங்கள் முதலாளியும் நீங்களும் சாப்பிட வரலாம்''

முத்தையா இயந்திரமாக மறுகணம் மாறிவிட்டார். காப்பி, டிபன் யாவற்றையும் மூடியைத் திறந்து ஜாடிக்குள் ஊற்றுவது போலக் கடகட வென முடித்தார், அவருக்கு எதிலும் அவசரம்; எதிலும் வேகம்!

'' மணிவாசகன்! ராதை சட்டக் கல்லூரியில் படிக்கிறாளா?''

'' இந்த ஆண்டும் பரீட்சை எழுதுகிறாள்!''

'' ஆண்டும் என்று 'உம்' போட்டால் பரீட்சைக்கும் இந்தப் பெண்ணுக்கும் அதிர்ஷ்டமில்லை! ஒருவேளை மாஸ்டர் மணிவாசகன் பிறந்த அதிர்ஷ்டம் இவள் பரீட்சையில் வெற்றி பெறுவாள்.''

'' நான் படிப்பிலே மக்கு, மாமா!''

'' நீ பண்பிலே மாமேதை! உனக்கும் நல்ல காலம் வரும். டாக்டர் நர்மதாவிடம் நான் போவதைச் சொல்லிவிடு. மணிவாசகன் இந்த வீட்டை விலை பேசி முடித்துவிடுங்கள். நான் டில்லியிலிருந்து வரும் போது இது உங்கள் சொந்த வீடாக இருக்க வேண்டும்''

'' சொந்த வீடாக இருக்கும்!''

செண்பகா மில்லின் முதலாளி விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார். பணத்தையெடுத்து இரும்பு அலமாரியில் பூட்டிக் கொண்டிருந்தான்.

'' அத்தான்!''

'' உம்''

'' நான் அன்றைக்கு டிரங்க் கால் பேசி, குழந்தை பிறந்ததை உங்கள் முதலாளிக்குச் சொன்னேன். உங்களுக்கு இன்று அதிர்ஷ்டம்!''

'' எல்லா அதிர்ஷ்டங்களும் உன்னால்தான் என் வீட்டிற்குள் வருகின்றன. ஒப்புக்கொள்ளுகிறேன்.''

பணம் கையில் இருக்கும் போது மூர்க்கனும் முரடனும் கூடக் குளுமையாகப் பேசுவான்! மணிவாசகன் குரலில் குளுமை இருந்தது. டாக்டர் நர்மதா மனத்தில் கொதிப்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது! ஆனாலும் அவள் பெண் தற்சமயம் பச்சை உடம்புடன் கூடிய பூங்கொடி. சின்னஞ்சிறு பூவை; பூத்த பூங்கொடி.

வக்கீல் மணிவாசகன் அறைக்குள் வந்தான்.

'' உனக்கு முத்தையா மீது என்ன கோபம்? அவரை 'வாருங்கள்' என்று கூடக் கேட்க அன்பு இல்லையா? உனக்கு மாதாமாதம் சம்பளம் தந்த முதலாளி!''

'' அந்த வகையில் நான் கடமைப் பட்டவள். உங்கள் முதலாளியாக இருப்பதால் என் மனசு ஒப்புக் கொள்ளவில்லை!''

'' அப்படியானால்?......''

'' நான் மில் ஆஸ்பத்திரியிலிருந்து விலகிவிடத் திட்டம் போட்டிருக்கிறேன்!''

# கைத்தறித் துணி



இந்தியாவில் தயாராகும் கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல 'கிராக்கி' இருந்து வருகிறது.

1971 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து ரூ. 26 கோடியே 84 இலட்சம் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கடந்த ஆண்டு இதைவிட அதிகமான அளவில் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் (1972) ரூ. 43 கோடியே 95 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி ஆயின.





கைத்தறித் துணிகளில் குறிப்பாக, பருத்தியில் இருந்து தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு இருக்கிறது. 1971-ஆம் ஆண்டில் ரூ. 19 கோடியே 57 இலட்சம் மதிப்புள்ள பருத்திக் கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1972 ஆம் ஆண்டில் ரூ. 35 கோடியே 8[illegible] இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது.

அதுபோல் ரெடிமேட் ஆடைகளையும் அங்கு விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே ரெடிமேட் ஆடைகளும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன.

"எனக்கு அவர் ஐம்பதினாயிரம் ரூபாய் வழக்காடல் தொகை தந்தது உன் நேர்மை நெஞ்சை உறுத்துகிறது!.."

"எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்! நான் தனிப்பட நர்சிங் ஹோம் நடத்துவதாக இருக்கிறேன்"

"அதற்கு, என் பணம் உனக்குத் தேவை!"

"உங்கள் பணம் பணமாக இருக்கட்டும். உங்கள் அனுமதியின் பேரில் நான் மில் ஆஸ்பத்திரியிலிருந்து விலகப் போகிறேன். தனி நர்சிங் ஹோம் வைக்கப் போகிறேன்"

"பணம்? நீ வைத்திருக்கிறாயா?"

"பணம் எனக்கு இருக்கிறது!"

"எவ்வளவு பணம்?"

"பேரனுக்கு அவன் தாத்தா சிங்கப்பூரிலிருந்து பணம் அனுப்பியிருக்கிறார்!"

"மில்கார தாத்தா ஐம்பதினாயிரம் பரிசு கொடுத்தார்!"

"அது பரிசு அல்ல. உங்கள் சட்ட ஞானத்திற்கு லஞ்சம்! சண்முகம் குடும்பத்தார் தொட மறுத்த நஞ்சுப் பணம். என் அப்பா சிங்கப்பூரிலிருந்து ஓர் இலட்சம் பணம் எனக்காகவும் என் பிள்ளைக்காகவும் அனுப்பியிருக்கிறார்!"

"அனுப்பட்டும்! எனக்கு ஒரு தம்பிடி தேவையில்லை. நீ டாக்டராக நர்சிங் ஹோம் நடத்தினாலும் சரி, அல்லது மில்லில் வேலை பார்த்தாலும் சரி....எனக்குக் கவலை இல்லை. உன் தொழிலில் நான் உரிமையோ, ஆதிக்கமோ செய்ய மாட்டேன்"

"மிக்க நன்றி"

டாக்டர் நர்மதா தன் பதவியை ராஜிநாமா செய்யும் கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தாள்.

விளை நிலத்தை அவமதித்து அதன்மீது நின்று கதிரைப் பெருமையுடன் அறுக்கிறவன் போன்று குழந்தையைப் பெரிதாக எண்ணி, மனைவியை அலட்சியம் செய்யும் இறுமாப்பை ராதை உணர்ந்தாள்.

அதை மணிவாசகனுக்கு உணர்த்தவோ, இவ்வாறு மனக்கிலேசம் கொள்ளாதே என்று எச்சரிக்கை செய்யவோ, தெம்பும் திறனுமற்ற பொம்மையாக நிற்கிறாள் ராதை.

இருதலைக் கொள்ளிக்கு ஊடாக அகப்பட்டுக் கொண்ட சிற்றெறும்பு போலத் தவித்து நின்றாள் ராதை!

இரு எரிமலைக்கு ஊடாக நிற்கும் துரும்பு வாழ்க்கைதான் அவள் தலையெழுத்தா?

(வளரும்)



# ஓர் ஆய்வு

# தமிழகத்தில் மின் வளர்ச்சி

**வே**ளாண்மை வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் இன்றியமையாத ஒன்றானபடியால், ஐந்தாண்டுத் திட்டங்களில் மின் உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பல நீர் மின்சார நிலையங்களும், அனல் மின் நிலையங்களும் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால், மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போகிறது. 1973-74-ல் தமிழகத்தின் மின்சாரத்தின் தேவையானது 1,675 மெகாவாட்டாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டக் காலமுடிவில் இந்தப் பற்றாக் குறை இன்னும் அதிகமாகிவிடும். ஆகவே நான்காவது திட்ட இறுதியில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகப்படியான பற்றாக்குறையைச் சரிக்கட்ட, நான்காவது திட்டத்திலேயே தமிழ்நாட்டில் மேலும் கூடுதலான மின்சக்தித் திட்டங்களை உருவாக்குதல் இன்றியமையாததாகும். மாநிலத்தில் நீர் மின்சாரத்தைத் தோற்றுவிக்கின்ற கூறுகள் குறைவாக உள்ளதால், எதிர்பார்க்கப்படுகின்ற பற்றாக்குறையைச் சமாளிக்க அனல் மின் நிலையங்களையோ அணு மின் நிலையங்களையோ உருவாக்குவது அவசியமாகும். அப்படியே செய்தாலும், உற்பத்தி செய்கின்ற முழுமையான செலவினத்தைக் குறைப்பதற்காகவும், அன்றாட உச்ச மின் சுமையைச் சமாளிப்பதற்கும் நீர் மின்சார நிலையங்களைப் பெருக்குவது விரும்பத்தக்கதாகும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, வருகின்ற திட்டக் காலங்களில் செயல்படுத்துவதற்காக வேண்டி கீழ்க்கண்ட கூடுதல் துவக்க திட்டப் பணிகள் துவக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டங்களின் கீழ், கிடைக்கப்பெறும் மொத்தம் நிறுவனத்திறன் 1,500 மெகாவாட்டுகளாகும். இந்தத் திட்டங்களில் சிலவற்றிற்கு அனுமதி முன்பே கிடைத்து விட்டது. சிலவற்றில் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிலவற்றிற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எல்லாத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இவ்வாண்டு (1972-73) வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நடந்தேறிவரும் பணிகள்

1972-73, 1973-74, ஆண்டுகளில் நடந்தேறி வந்துள்ள நடந்தேறிவரும் பணிகளின் சுருக்கம் வருமாறு :—

(1) குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் III-வது நிலை.

(2) பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டம்.

(3) கோதையாறு நீர் மின் திட்டம்.

(4) சென்னை மின் நிலைய விரிவுப்பணி IV-வது நிலை.

(5) எண்ணூர் அனல் மின் திட்டம்.

(6) எண்ணூர் அனல் மின் திட்ட நீட்டிப்புப் பணி.

(7) பாண்டியாறு, புன்னம்புழா நீர் மின் திட்டம்.

(8) குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் IV-வது நிலை.

### 1. குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் III-வது நிலை

இத்திட்டத்தின் கீழ் மூன்று புதிய மின் உற்பத்தி நிலையங்களும் இப்பொழுதுள்ள மின் நிலையங்களில் கூடுதலாக 2 யூனிட்டுகளும் அமைக்கப்படும். இவற்றின் மொத்த நிறுவனத் திறன் 245 மெகாவாட்டாக இருக்கும். இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு சுமார் 3,689·44 இலட்சங்களாகும்.

### 2. பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டம்

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஆனைமலையில் நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆகிய ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி திட்டமிட்டுள்ள பாசன நீர் மின்சக்தி திட்டத்தின் ஒரு பகுதியே பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டமாகும். இத்திட்டத்தில் நான்கு மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

(1) சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம்—30 மெகாவாட்டுகள். இம்மின் நிலையம் 1965-66ல் செயல்படத் தொடங்கியது.

(2) ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்—60 மெகாவாட்டுகள். இந்த மின் நிலையம் 1970 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது.

(3) சோலையாறு மின் உற்பத்தி நிலையம் I—70 மெகாவாட்டுகள்—இம்மின் நிலையம் 1971 ஏப்ரலில் செயல்படத் தொடங்கியது.

(4) சோலையாறு மின் உற்பத்தி நிலையம் II—25 மெகாவாட்டுகள். இம் மின் நிலையம் 1971 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது.

இந்த நான்கு மின் உற்பத்தி நிலையங்களில் மொத்த நிறுவனத் திறன் 185 மெகாவாட்டுகளாகும். இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 2,636·75 இலட்சங்களாகும்.

### 3. கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீரைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய இத்திட்டம் வழி வகை செய்கிறது. இந்த மலைப் பகுதி

வடக்கில் மணிமுத்தாறு வடிநிலப் பகுதியையும் தெற்கில் கோதையாறு வடிநிலப் பகுதியையும் பிரிக்கின்றது. கோதையாறு இறுதியில் பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தை வந்தடைகிறது. கோதையாறு அணைக்கட்டு I, கோதையாறு அணைக்கட்டு II ஆகிய இரண்டு அணைக் கட்டுகளை அமைத்து தனித் தனியான நீர் கடத்தி ஏற்பாடுகளின் மூலமாக இரண்டு மின் உற்பத்தி நிலையங்களுக்கும் நீர் அனுப்பி மின் சாரத்தை உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். I-வது மின் உற்பத்தி நிலையத்தில் 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒறறை உற்பத்திப் பிரிவு இருக்கும். II-வது மின் உற்பத்தி நிலையத்தில் 40 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓர் உற்பத்திப் பிரிவு இருக்கும். கோதையாறு மின் உற்பத்தி நிலையம் I-வது, 1971 சனவரியில் தமிழ்நாடு மின் இணைப்புடன் தொடர்புப்படுத்தப்பட்டது. II-வது மின் உற்பத்தி நிலையம் 1971 நவம்பரில் செயல்படத் தொடங்கியது. இந்த இரண்டு மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவனத்திறன் 100 மெகாவாட்டுகளாகும். இத்திட்டத்திற்காக மதிப்பீட்டுச் செலவு 1,817·02 இலட்சங்களாகும்.




### 4. சென்னை மின் நிலைய நீட்டிப்பு IV-வது நிலை

30 மெகாவாட்டு டர்போ ஆல்டர்னேட்டர் செட் ஒன்று, மணிக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் பவுண்டு நீரைக் கொதிக்க வைக்கும் கொதிகலன் 2, ஆகியவற்றை, பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் நிறுவ இத்திட்டம் வகை செய்கிறது. 30 மெகாவாட் டர்போ ஆல்டர்னேட்டர். செட் 1969 சூனில் செயல்படத் தொடங்கியது. முதல் கொதிகலன் 1971 செப்டம்பரிலும் 2-வது கொதிகலன் 1972 ஏப்ரலிலும் செயல்படத் தொடங்கின. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 621·66 இலட்சங்களாகும். இந்தச் செலவு ரூ. 653 இலட்சத்திற்கு உயரலாம்.

### 5. எண்ணூர் அனல் மின் திட்டம்

எண்ணூரில் அனல் மின் நிலையம் இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இந்த மின் நிலையத்தின் நிறுவனத் திறன் முதற்கண் 340 மெகாவாட்டுகளாகும். அதாவது 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும் 110 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும் இதில் அடங்கும். முதல் 60 மெகாவாட் யூனிட் 1970 மார்ச்சிலும் 2-வது 60 மெகாவாட் யூனிட் 1971 பிப்ரவரியிலும் முதல் 100 மெகாவாட் யூனிட் 1972 மே திங்களிலும் செயல்படத் தொடங்கின. 2-வது 110 மெகாவாட் யூனிட் 1973 மே. மாதத்தில் செயல்படத் துவங்கியது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5,814 இலட்சங்களாகும். இந்தச் செலவு மேலும் உயரலாம்.

### 6. எண்ணூர் அனல் மின் திட்ட நீட்டிப்பு

எண்ணூர் அனல் மின் திட்டத்தில் 110 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட

5-வது உற்பத்திப் பிரிவு ஒன்றுக்கு இத்திட்டம் வகை செய்கிறது. இதனுல் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மொத்த நிறுவனத் திறன் 450 மெகாவாட்டுகளாக ஆகிறது. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,685 இலட்சங்களாகும். 1970 – 71-ல் இருந்தே இதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. இப்பிரிவு 1974-75-ல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கொள்கை அளவில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### 7. பாண்டியாறு புன்னம்புழா நீர் மின் திட்டம்

50 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட இரண்டு உற்பத்திப் பிரிவுகளை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கேரள மாநில எல்லைக்கு அருகே யுள்ள புன்னம்புழா, கலக்கப்புழா பள்ளத்தாக்கில் கார்குடபுழா ஆற்றின் வலப்புறத்தில் இம் மின் நிலையம் அமையும். இதற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5,125 இலட்சமாகும். கேரள மாநில அரசுடன் கலந்து உரையாடி பாசனக் காரியங்களுக்காக மோயாறு பள்ளத்தாக்குக்கு நீரைத் திருப்பிவிடும் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் வரையில், பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது மறு ஆய்வு செய்யப்பட்டு, பாண்டியாறு-மோயாறு திட்டம் பற்றிய ஓர் முன்னேடி அறிக்கை கேரள அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காகத் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 8. குந்தா நீர் மின் திட்டம் IV-வது நிலை

குந்தாவிலுள்ள 3-வது மின் உற்பத்தி நிலையத்தில் 60 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட 3-வது பிரிவு ஒன்றையும், குந்தாவிலுள்ள 4-வது மின் உற்பத்தி நிலையத்தில் 50 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 2-வது பிரிவு ஒன்றையும் நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு இந்திய அரசு அனுமதி வழங்கிவிட்டது. கனடா நாட்டிலிருந்து மின் உற்பத்திப் பொறிகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ. 625 இலட்சமாகும்.

## புதிய திட்டங்கள்

### நடுவட்டம் நீர் திருப்புத் திட்டம்

மொய்யாற்றின் கிளை ஆறுகிய நடுவட்டம் ஆற்றுநீரை கிளன் மார்கன் விரிகுடா முன் அமைவினுள் திருப்பிவிட்டுப் பயன்படுத்தி மோயாறு மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி அளவினை 60 மில்லியன் யூனிட்டுகள் அதிகரிப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 72 இலட்சமாகும். மதிப்பீட்டுச் செலவு ரூ. 165 இலட்சமாக அதிகரிக்கலாம்.

### சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம்

தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களின் எல்லைக்குள் குறுக்கே வருகின்ற நீர்த்தேக்கம் விரிகுடா முன் அமைந்துள்ள அணையிலிருந்து நீலகிரியிலுள்ள சோழாட்டிப் புழா ஆற்று நீரைப் பயன்படுத்தி நீலகிரி மலையில் மேற்குப் பகுதியில் 60 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடைய ஒரு மின் நிலையத்தை அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

1970 பிப்ரவரியில் இத்திட்ட அறிக்கையானது மைய நீர்—சக்தி ஆணைக்குழுவிற்குத் தமிழ்நாடு அரசினுல் அனுப்பி வைக்கப்பட்டது. மைய நீர்—சக்தி ஆணைக் குழுவிலிருந்து (நீர்ப்பிரிவு) பெறப்பட்ட இரண்டாவது செட் குறிப்புகளுக்கு 1971 மார்ச்சில் பதில்கள் அனுப்பப்பட்டன. இத்திட்டத்திற்கு உடன் ஒப்புதல் அளிப்பதற்காக வேண்டி தமிழ்நாடு அரசு கேரள அரசுக்கு எழுதியுள்ளது. கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பிறகுதான் இத்திட்ட வேலை துவங்கப்பட வேண்டுமென மைய நீர்—சக்தி ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 739 இலட்சமாகும்.

### காடம்பாறை நீர் மின் திட்டம்

நீரைத் தலைகீழாகத் திருப்பக்கூடிய பம்ப் டர்பைன் உற்பத்திப் பிரிவுகள் 2×100 மெகாவாட் திறனுடன் நிறுவ (ஆரம்பத்தில் ஒன்றும் இறுதியில் இரண்டுமாக)வும், காடம்பாறை விரிகுடா முன் அமைந்த அணையுடன் ஒரு நீர்த்தேக்கத்திற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. மின் நிலையமானது நிலத்திற்குக் கீழே நிலத்தடி நீர் அனுப்பு முறையுடன் அமைக்கப்படும்.

1971 செப்டம்பரில் திட்ட அறிக்கை மைய நீர்—சக்தி ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அக்குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பட்டு விட்டது. பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 3,512 இலட்சமாகும்.

### சேர்வலாறு மின் நிலையம் (30 மெகாவாட்) மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டத்தின்கீழ் முண்டன் துறைப் பிரிவு

தாம்பிரபரணி, சேர்வலாறு, கள்ளாறு, கருணையாறு வடிநிலங்களிலிருந்து கிடைக்கப்பெறக் கூடிய மின் சக்தியை ஆறு மின் நிலையங்களில் பயன்படுத்துவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஆறு மின் நிலையங்களிலிருந்து மூன்று, மேல் வாலாறு, வாலாறு கொடுமுடிப் பிரிவுகள் என அழைக்கப்படும். மின் நிலையங்கள் I, II, III சேர்வலாறு வடி நிலத்திலும் மற்றும் ஒன்று (பானதீர்த்தம் பிரிவு என்ற மின் நிலையம்) தாம்பிரபரணி வடி நிலத்திலும் அமைய உள்ளது. இப்பொழுதுள்ள பாபநாசம் விரிகுடா முன் அமைவில் மேல் நீரோடையில் அமையவிருக்கும் முண்டன் துறைப் பிரிவு, மின் நிலையம் IV ஆகும். சேர்வலாறு, தாம்பிரபரணி ஆறுகளிலிருந்து கிடைக்கப்படும் முழு நீரையும் பயன்படுத்தி இப்பொழுது உள்ள தாம்பிரபரணி அணை, பாபநாசம் விரிகுடா முன் அளவு அணையில் உள்ள 233 அடி மொத்த உயரத்தின் மேல்

தாம்பிரபரணி, சேர்வலாறு ஆறுகளின் 98 சதுர மைல் பரப்பளவு உள்ள ஆற்று நீர் வடிகால் அமைப்புப் பிரதேசத்தில் உள்ள நீரைப் பயன்படுத்த வகை செய்கிறது. மின் நிலையத்தில் 30 மெகா வாட் திறனுடைய மின் நிலையம் ஒன்றினை நிறுவ உத்தேசித்துள்ளது. V-வது மின் நிலையம் கருணையாறு வடிநிலத்தில் அமையும். அதற்குக் கருணையாறு பிரிவு என்று பெயர். மேல் தாம்பிரபரணி, நீர் மின் திட்டத்தின் கீழ் அமையவிருக்கும் ஆறு மின் நிலையங்களில் சேர்வலாறு நீரைப் பயன்படுத்தவும், பாசனத்தை நிலைப்படுத்தவும் முதலாவதாக முண்டன் துறைப் பிரிவைச் செயல்படுத்தப்பட உத்தேசித்துள்ளது. ரூ. 549 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டமானது, விரிவாக ஆய்வு செய்யப்பட்டு இந்தப் பிரிவுக்கான திட்ட அறிக்கை இந்திய அரசுக்கு செப்டம்பர் 1970-ல் அனுப்பப்பட்டுள்ளது.

மைய நீர் சக்தி ஆணைக் குழுவினிடமிருந்து பெறப்பட்ட முதல் வரிசை விமர்சனங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டு விட்டது. ஒப்புதல் கிடைப்பதற்கு முன் பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

**நெல்லித்துறை நீர் மின் திட்டம்**

குந்தா மின் நிலையம் IV-ன் கீழ் உள்ள பவானி ஆற்று நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தி நெல்லித்துறை கிராமத்திற்கு அருகில் 50 மெகாவாட் நிறுவனத் திறனுடன் கூடிய அணைக்கட்டு மின் நிலையத்திலிருந்து மின் உற்பத்தி செய்ய இத்திட்டம் வகை செய்கிறது. குந்தா மின் நிலையம் IV கடைமடை நீருக்கும் கீழ் பவானி பாசன நீர்தேக்கத்திற்குமிடையே 244 அடி அளவுக்கு வீழ்ச்சி உள்ளது. இதில் 135 அடி அளவினை நெல்லித்துறை மின் நிலையத்திற்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. குந்தா மின் நிலையம் IV-லிருந்து ஓடி விழுகிற நீரினையும் பில்லூர் அணையின் கீழ் ஓடுகின்ற நீரினையும் 266 சதுர மைல் பிரதேசத்திலிருந்து கல்லுணைத்துறைப் பள்ளத்திலிருந்து திருப்பிவிடப்படும் நீரினையும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ரூ. 670 இலட்சம் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மைய நீர்—சக்தி ஆணைக் குழுவிற்கு அறிக்கை ஏப்ரல் 1970-ல் மாநில அரசினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மைய நீர்—சக்தி ஆணைக் குழுவினிடமிருந்து பெறப்பட்ட முதல் வரிசை குறிப்புகளுக்குப் பதில் அனுப்பப்பட்டுவிட்டது. ஒப்புதல் கிடைப்பதற்கு முன் பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.




**பரளியாறு நீர் மின் திட்டம்**

கன்யாகுமரி மாவட்டத்தில் கோதையாற்றின் ஒரு கிளை ஆறுன பரளியாற்றிலிருந்து கிடைக்கும் சக்தி ஆதாரங்களிலிருந்து ஒரு 30 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் இதன் கீழ் அமையும். திட்ட அறிக்கை மார்ச்சு 1971-ல் மைய நீர்சக்தி ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

**சுருளியாறு நீர் மின் திட்டம்**

மதுரை மாவட்டத்தில் உள்ள சுருளியாறு நீரைப் பயன்படுத்தி, 35 மெகாவாட் நிறுவனத் திறனுடைய ஒரு மின் நிலையத்திலிருந்து மின் சக்தியைப் பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. சுருளியாறு, எரவங்கலாறுகளில் 15 சதுர மைல்கள் பரப்பளவு உள்ள நீர் வடிகால் பிரதேசத்திலிருந்து ஓடி விழும் நீரை இத்திட்டத்திற்காகப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 659 இலட்சம். திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு (மைய நீர்—சக்தி ஆணைக்குழு) தமிழ்நாடு அரசினால் அனுமதிக்காக 1970 மே திங்களில் அனுப்பப்பட்டு, அதற்கான ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**தூத்துக்குடி அனல் மின் திட்டம்**

தூத்துக்குடியில் ஓர் அனல் மின் நிலையத்தினை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்பப் பணியாக 400 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட மின் நிலையம் நிறுவுவதும், இறுதியில் 600 மெகாவாட்டாக உயர்த்துவதுமே இத்திட்டத்தின்

நோக்கமாகும். 400 மெகாவாட் திட்டம் பற்றி திட்ட அறிக்கையானது மத்திய நீர்—மின்சக்தி ஆணைக் குழுவிற்கு 1971 ஜூலைத் திங்களில் அனுப்பப்பட்டுள்ளது. அக்டோபர் 1972-ல் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அவ்வறிக்கையும் அக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 70 கோடியாகும். முதல் 200 மெகாவாட்பிரிவு 1977-78லும் இரண்டாவது 200 மெகாவாட் பிரிவு 1978–79லும் செயல்படத் தொடங்கலாம். என எதிர்பார்க்கப்படுகிறது.

**மேட்டூர் அணை அனல் மின்திட்டம்**

ஒவ்வொன்றும் 110 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றினை மேட்டூர் அணை அருகே நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பற்றிய செயல்படுத்தக்கூடிய அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் மின்சக்தி ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 6,553 இலட்சமாகும். 5-வது திட்டக் காலத்திலும் 6-வது திட்டக் காலத்திலும் இத்திட்டத்தின் பயன்களைப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து பல நீர் மின் திட்டங்களை ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன:—

(1) தூத்துக்குடி அனல் மின்திட்டம்—400 மெகாவாட் (இறுதியில்—600 மெகாவாட்)

(2) மேட்டூர் அணை அனல் மின் திட்டம்-330 மெகாவாட்

(3) மணிமுத்தாறு நீர் மின் திட்டம்-90 மெகாவாட்

(4) மேல் அமராவதி நீர் மின் திட்டம்—20 மெகாவாட்.

(5) கீழ்மோயாறு நீர் மின் திட்டம்—30 மெகாவாட்.

(6) கீழ்மோயாறு மின் திட்டம்—குக்குலத்துறைபிரிவு 40—மெகாவாட்.

(7) குன்னூர் கல்லாறு நீர் மின் திட்டம்—50 மெகாவாட்.

(8) கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம்—200 மெகாவாட்.

(9) அக்காமலை நீர் மின் திட்டம்—25 மெகாவாட்

(10) சண்முகாநதி நீர் மின்திட்டம்—30 மெகாவாட்.

(11) மேல்தாம்பிரபரணி நீர் மின் திட்டம்—மற்ற 5 பிரிவுகள்—165 மெகாவாட்.

(12) மேல்தாம்பிரபரணி நீர் மின்திட்டம் முண்டன்துறை பிரிவு—20 மெகாவாட்

(13) குந்தா நீர் மின் திட்டம்—இறுதி நிலை—205 மெகாவாட்.

(14) மேல் கொடுமுந்து—லோர்ன் பள்ளத்தாக்கு நீர்த் திருப்புத் திட்டம்-பைக்காரா, மோயாறு மின் நிலையங்களில் கூடுதல் மின் உற்பத்தி செய்தல்.

(15) பைக்காரா இறுதி நிலை—100 மெகாவாட்.


(16) இரண்டாவது சுரங்கம் வெட்டுவதின் மூலம் நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம்—800 மெகாவாட்.

(17) தூத்துக்குடியில் இரண்டாவது அனல் மின் நிலையம்—1000 மெகாவாட்.

(18) சென்னை கல்பாக்கம் அணு மின் நிலையம்—(இந்திய அரசினுடையது)—470 மெகாவாட்.

மின்சார உற்பத்தி, மிகப் பெரிய அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். வளமான வாழ்வுக்கு, சமுதாய மறுமலர்ச்சிக்கு, வேகமான தொழில் புரட்சிக்கு மின்சாரம் அடித்தளமாக இருப்பது மட்டுமில்லாமல், கிராம மக்களின் நல்வாழ்வுக்கும் தமிழகத்தின் பசுமைப் புரட்சிக்கும் அடிகோலுகிறது. மின் உற்பத்தியில் தமிழ்நாடு கண்டுள்ள சாதனைகள் தமிழ்ப் பெருங்குடி மக்களின் வளமான வாழ்க்கைக்கு வலுவானதொரு அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பதுமட்டுமில்லாமல், தமிழக மக்களின் எதிர்கால வாழ்வு வளம்பெற்றுத்திகழ, அவர்களின் வாழ்வு மலர வழி வகுத்துக் கொடுத்துள்ளன என்று சொன்னால் மிகையாகாது.

—வ-ச.



எண்ணூர் ஐந்தாவது திட்டம்

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி : "அர்பாங்க்" தொலைபேசி எண் : 20367, 28068

*எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.*

**வட்டி விகிதங்கள்**

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

**காலாந்திர கணக்கு :**—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும் ;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

**நிரந்தர கணக்கு :**—ரூ. 100/-ம் அதற்கு மேலும் :

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட $\frac{1}{2}\%$ கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

**தொடர் கணக்கு :** தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.



# நாட்குறிப்பும் வரலாறு சொல்லும்

சோவியத் நாட்டிலிருந்து இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வது இந்த நாட்களில் மிகமிகச் சாதாரணமாகியுள்ளது. என்றாலும் அங்கிருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவது 500 ஆண்டுக் காலமாகவே நடைபெற்று வருகிற நிகழ்ச்சி என்பதை ஒருவரது நாட்குறிப்பு தெளிவாக்கியுள்ளது.

சோவியத் நாட்டிலுள்ள துவெர் நகரத்தைச் சேர்ந்தவர் அபனசி நிகிதன் என்னும் வணிகர். அவர் 1472-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார். இந்தியாவுக்கு வந்து சென்ற அவர், நாட்குறிப்பு (டைரி) எழுதும் பழக்கத்தைக் கைக் கொண்டிருந்ததால் இந்தியாவுக்கு வந்து சென்றதையும், இங்கே கண்ட நிகழ்ச்சிகளையும் தமது டைரியில் எழுதி வைத்துள்ளார்.


வால்கா நதிக்கரையிலுள்ள துவெர் நகரிலிருந்து புறப்பட்ட அந்த வணிகர், பாலைவனங்களையும் புயல் வீசும் கிழக்குக் கடல்களையும் கடந்து, தாம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்ததை விவரித்து எழுதியுள்ளார். 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியா எவ்வாறு இருந்தது என்பதை விளக்குகின்ற செய்திச் சித்திரமாக அவரது நாட்குறிப்பு விளங்குகிறது.

'மூன்று கடலுக்கு அப்பால் செய்த சுற்றுலாப் பயணம்' என்று அந்த நாட்குறிப்புக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

# ரப்பர்ச் சாலை

தார், கருங்கல், ஜல்லி இவற்றால் சாலை போடப்பட்டு வருகிறது. சில பகுதிகளில் காங்கிரீட் சாலை போடுகிறார்கள். கேரள மாநிலம் புதிய வகையில் ரப்பர்ச் சாலை போடத் திட்டமிட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் கோட்டயத்திலும், போக்குவரத்து அதிகமுள்ள சில பகுதிகளிலும் ரப்பர்ச் சாலைபோடும் பணியை மேற்கொள்வதற்கு, இந்திய ரப்பர் கழகம் ஓர் ஆய்வுத் திட்டத்தை அனுமதித்திருக்கிறது. இந்தியாவில் முதல் முறையாக உருவாகவிருக்கும் இந்த ரப்பர்ச் சாலைக்குரிய செலவு சாதாரணச் சாலைகளுக்கு ஆவதை விட 15 சதவிகிதம் அதிகம் ஆகிறது; என்றாலும் குறைந்தது 30 ஆண்டுகளுக்கு நீடித்திருக்கும் தன்மை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# இனிக்கும் செய்தி

1972 அக்டோபர் முதல் நாளிலிருந்து 1973 ஜூன் 22-ஆம் நாள் வரையுள்ள ஒன்பது மாதங்களில் 37·84 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையோடு ஒப்பிடுகையில் இது 7·39 இலட்சம் டன்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

1973 ஜூன் 22-ஆம் நாள் வரை 25·65 இலட்சம் டன்கள் சர்க்கரை வெளியே அனுப்பப்பட்டது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 29·18 இலட்சம் டன்கள் சர்க்கரை வெளியே அனுப்பப்பட்டது.

1973 ஜூன் 22-ஆம் நாளன்று சர்க்கரைக் கையிருப்பு 18·11 இலட்சம் டன்கள். கடந்த ஆண்டு இதே நாளன்று சர்க்கரைக் கையிருப்பு 15·31 இலட்சம் டன்கள்தான். 1973 ஜூன் 29-ஆம் நாளன்று 8 சர்க்கரை ஆலைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. கடந்த ஆண்டு இதே தேதியில் 5 சர்க்கரை ஆலைகள் மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன.

# நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
**மாநிலத் திட்டக்குழுவின் பணிகள்**

எல்லாச்
சிற்றூர்களுக்கும்
**சாலை**
இணைப்புகள்!

இவைகளால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

*அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!*
**இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!**

குடும்ப நலத்துறை தமிழ்நாடு அரசு

# எண்ணும் எழுத்தும் உருவாகும் விதம்

நாட்டு நடப்புக்களை நாளும் நமக்குத் தெரிவிப்பவை நாளிதழ்களென்றால், அறிவுக்கு விருந்தூட்டும் கட்டுரைகள், மனதை மயக்கும் சிறு கதைகள், உள்ளத்தை உருக்கும் கவிதைகள் முதலானவற்றைத் தருவது வார-திங்கள் இதழ்கள் அன்றோ?

இவையன்றிப் புதிய புதிய புத்தகங்கள் பல, புதிய புதிய உருவிலே அவ்வப்போதுவெளி வந்த வண்ணமிருக்கின்றன. அவற்றிலே உள்ள அச்சு அமைப்புகள் தெளிவாகவும், அழகாகவும், அமையும் போது அந்தப் புத்தகத்தின் மதிப்பு மேலும் உயர்கிறது.

நாளிதழ்கள், வார-திங்கள் இதழ்கள், புத்தகங்கள், துண்டு வெளியீடுகள் முதலியன, அச்சு எழுத்துக்கள் இல்லாமல் குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் வெளிவர முடியுமா? இவற்றுக் கெல்லாம் அச்சு எழுத்துக்களும், அச்சகங்களே அன்றோ முதற் காரணம்!

அச்சுக்கலை வளர்ந்திரா விட்டால், பண்டைக்கால ஓலைச் சுவடி இலக்கியங்களை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்குமா? மொழி வளம், இலக்கியவளம், அறிவு வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி என்றெல்லாம் இன்று பரந்து விரிந்து வளர்ந்திருக்குமா? சுருங்கச் சொன்னால் அறிவு வளர்ச்சிக்கு அருந்துணைபுரிவது அச்சுக்கலையே என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

அச்சுக் கலையின் உயிர் அச்சு எழுத்துக்கள் என்றால் அது தவறல்ல. சிறிய பெரியஅளவுகளில், வகை வகையான எழுத்துக்கள் — அவற்றை உருவாக்கும் எழுத்துவார்ப்பட சாலைகள் (Type Foundry) இன்று அச்சுக்கலைக்கு மெருகூட்டிக் கொண்டிருக்கின்றன. "பான்ட் (Fount) என்னும் சொல், ஓர் எழுத்தினத்தின் எல்லா வகை எழுத்துக்களையும் குறிப்பதாகும். இது முதலில் பவுண்ட் (Found) என்று அச்சு உருக்கி வார்த்தலையோ அச்சு அடித்தலையோ குறிக்கப் பயன்பட்டது. இதிலிருந்துதான் வார்ப்படக்காரர் (Founder), வார்ப்படச் சாலை (Foundry) என்பன வந்தன. முன்னது இலத்தீனச் சொல்லான புாண்டோ (Fundo) என்பதிலிருந்து பவுண்டர் (Founder) என ஆயிற்று".

சில வார்ப்படச் சாலைகளில் கையால் இயங்கும் இயந்திரங்கள் மூலம் எழுத்துக்களைத் தயாரிக்கின்றனர். ஆனால், இங்கோ முழுக்க முழுக்க 'மோனோடைப்' என்னும் நவீன இயந்திரங்கள் மூலம் எழுத்துக்களைத் தயாரிக்கின்றனர். இவற்றில் எழுத்துக்கள் உருவாகும் விதமே விந்தையாக இருக்கும். கண் மூடித் திறப்பதற்குள் எழுத்துக்கள் உருவம் பெற்று வெளி வந்து விடுகின்றனவே!

**அச்சு எழுத்தின் தந்தை!**

உலோக எழுத்துக்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில்தான் சீனாவிலும் கொரியாவிலும் வழக்கில் வந்தன. மரக்கட்டைகளில் எழுத்துக்களைச் செதுக்கி அவற்றை மணலில் அழுத்தி, அதில் உலோகத்தை உருக்கி வார்த்தனர்.

அச்சு எழுத்துக்கள் வார்ப்படத்தில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் ஜான்கூட்டன்பர்க். அவர்தான் முதன்முதலில் 1450-ல் தனித்தனி எழுத்துக்களைத் தயாரிக்கும் முறையை ஏற்படுத்தினார். இதனால் அவரை 'அச்சு எழுத்தின் தந்தை' என்று கூறுவர்.

1884-ல் லின்பாயிட் பெண்ட்டர் என்ற அமெரிக்கர் எழுத்துக்கரு (Matrix) செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

'மோனோடைப்' இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள வார்ப்படச் சாலைகளில் உலகிலேயே மிகப் பெரியது நார்ட்டன் கம்பெனிதான் என்று எழுதுகிறது பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'மோனோடைப்' என்னும் இதழ்.

அச்சுக்கள் (Types) அச்சு உலோகம் என்ற மூவகை உலோகக் கலவையால் உருவாக்கப்படுகின்றன. அவை, காரீயம், வெள்ளீயம், ஆண்டிமனி என்பவையாகும். இவை முறையே ஆஸ்திரேலியா, மலேசியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கின்றன. இம் மூவகை உலோகம் கலப்பதால் என்ன நன்மை?

வெறும் ஈயத்தினால் மட்டும் எழுத்துக்களை உருவாக்கினால் அந்த எழுத்துக்கள் மென்மையாகவும், விரைவில் மழுங்கித் தேய்ந்து போகக் கூடியவையாகவும் இருக்கும். இதைத் தவிர்க்கவே இந்த உலோகங்கள் கலக்கப்படுகின்றன. ஈயக் கலவை குளிர்ந்துவிடும் போது அதனைச் சுருங்க விடாமல் காக்க ஆன்டிமனியும், எழுத்துக்கள் தேய விடாமல் பாதுகாக்க வெள்ளீயமும் பயன்படுகின்றன.

அச்சை வார்க்குமுன் அதன் மாதிரி ஒன்று எஃகினால் அமைக்கப்படுகிறது. இது மிருதுவான பித்தளையின் மேலோ, செம்பின் மேலோ வைத்து அழுத்தப்படுகிறது. இது தான் அச்சின் வார்ப்பாகும். அச்சு உலோகத்தை உருக்கி இதற்குள் வார்த்து அது இறுகுமாறு செய்யப்படும். உலோகம் குளிர்ந்த பின் வார்ப்பிலிருந்து அச்சு வெளியே எடுக்கப்படுகிறது. முன்பெல்லாம் இந்த வேலையினைக் கையினால் செய்து வந்தார்கள். ஆனால் இன்றோ, தானே இயங்கும் இயந்திரங்கள் இப்பணியை விரைவில் செய்து முடிக்கின்றன.

எழுத்துக்களைத் தயாரிக்கும் 'மோனோடைப்' இயந்திரத்தில், உருக்கும் ஈயக் குழம்புள்ள ஒரு தொட்டி இணைக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கான அச்சுரு ( Mould ) இயந்திரத்தில் பொருத்தப்படுகிறது. இயந்திரம் இயங்கும்போது எழுத்துக்கள் மிக விரைவாக உருவாக்கப்பட்டு வரிசை வரிசையாக வெளி வருகின்றன. இந்த விந்தையினை நேரில் கண்டு மகிழ வேண்டும்.


எழுத்துக்களுக்கான அச்சுரு (Mould) இலண்டனில் தயாராகி வருகின்றது. சுமார் 60 பேர் பணியாற்றும் இவ் வார்ப்படச் சாலையில், ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ 12 டன் எழுத்துக்கள் தயாராகின்றன. தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் எழுத்துக்கள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன.

அச்சுஎழுத்துக்களின் அளவுப் புள்ளி ( point ) என்ற அலகினால் குறிப்பிடப்படுவதை நாம் அறிவோம். இவ்வார்ப்படச் சாலையில் 3 புள்ளியிலிருந்து 72 புள்ளி வரையிலான எழுத்துக்கள் தயாராகின்றன. இங்குத் தயாரிக்கப்படும் எழுத்துக்கள் நல்ல தரமாக இருப்பதால் இதற்கு உலகெங்கும் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, டில்லி, அமிர்தசரஸ், ஜலந்தர், லூதியானா, பம்பாய், ஆமதாபாத், சூரத், நாசிக், கல்கத்தா, கட்டாக், முதலிய நகரங்களுக்கும் நார்ட்டனின் எழுத்துக்கள் விற்பனையாகின்றன. இவை மட்டுமா? மலேயா, சிங்கப்பூர், நைஜீரியா, ஈராக், போன்ற நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் கூட இங்குத் தயாரான எழுத்துக்கள் அனுப்பப்படுகின்றன. தமிழ் நாட்டில் தயாரான எழுத்துக்கள் மேலை நாட்டில் நூல்களாக வெளிவருகின்றன என்றால் நமக்கெல்லாம் பெருமை தானே!

வார்ப்படச் சாலைகளில் உருவாகும் எழுத்துக்களைப் போல வேறிரு சாதனங்களிலும் எழுத்துக்களை உருவாக்கலாம். அவைதான் : 1. லைனோ டைப் (Lino type) 2. மோனோடைப் (Mono typ3) லைனோ டைப் வரிவரியாக அச்சுக்களைக் கோக்கும்; மானோ டைப் தனித்தனியே அச்சுக்களை வார்த்துக் கோக்கிறது.

லைனோ டைப் இயந்திரத்தில் ஒவ்வொரு முறையும் புது அச்செழுத்துக்களைத் தயாரிப்பதால் அச்சுக்கள் தேயாமல் தெளிவாக இருக்கும். பல அளவுள்ள எழுத்துக்களையும் இம்முறையில் வார்த்துக் கொள்ளலாம். இது திறமையுள்ள ஐந்து தொழிலாளர்கள் செய்யும் வேலையைச் செய்ய வல்லது.




# அச்சுக் கலை வரலாறு

மேடு பள்ளங்கள் கொண்ட பரப்பொன்றின்மேல் மை தடவிக் காகிதத்தின் மேலோ, வேறொரு பரப்பின்மேலோ அழுத்திப் பரப்பிலுள்ள உருவத்தை அதில் தோற்றுவிப்பது அச்சடித்தல் எனப்படும். பல நூற்றாண்டுகளாகவே இம்முறை இந்தியாவிலும், சீனாவிலும் வழங்கி வந்துள்ளது. ஐரோப்பாவில் இது 15-ஆம் நூற்றாண்டில் தான் அறியப்பட்டது. சீனாவில் ஒரு பலகையில் எழுத்துக்களைச் செதுக்கிப் பக்கம் பக்கமாக அச்சடித்தார்கள். துணிகளில் அச்சடிக்க இம்முறை நம் நாட்டில் நிலவியது. ஐரோப்பாவிலும் இதே அச்சடிப்பு முறை முதலில் ஏற்பட்டது. ஆனால் இது மிகத் தொல்லையானதாக இருந்ததோடு இம்முறையில் ஒரு பக்கத்தை அச்சடிக்கப் பல நாள் பிடித்தது. ஆகையினால் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு அச்சைச் செதுக்கிச் சொற்களுக்கேற்ற எழுத்துக்களை ஒன்று சேர்த்து அச்சடிக்கும் முறை வழக்கத்

லைனே டைப்பை 1886-ல் ஓட்மர் மெர்கன் தேலர் என்பவர் கண்டுபிடித்தார்.

மோனே டைப் முறையில் அச்சுக் கோப்பதும், எழுத்துக்களை வார்ப்பதும் ஒரே இயந்திரத்தில் செய்யப்படுவதில்லை. இந்த இயந்திரத்தில் எழுத்துக்கள் குறித்த பொத்தான்களை அழுத்தினால், ஒரு நீண்ட காகிதச் சுருளில் ஒவ்வொரு எழுத்திற்கும் சரியாக ஒரு துவாரம் ஏற்படும். இவ்வாறு துவாரங்கள் கொண்ட சுருளை, வார்ப்பட இயந்திரத்தில் மாட்டி விட்டால் அது துவாரங்களுக்கு ஏற்ற எழுத்துக்களைத் தனித் தனியே வார்த்து வரிவரியாக தக்கபடி சேர்த்துக் கொண்டே வரும். இம்முறையிலும் பல அளவுள்ள எழுத்துக்களை வார்க்கலாம். மோனே டைப் முறையை 1898-ல் டால்பர்ட் லான்ஸ்டன் என்பவர் வழக்கத்திற்குக் கொண்டு வந்தார்.

லைனே டைப் முறையில் ஒரு வரியில் ஒரு பிழை ஏற்பட்டாலும் அந்த வரி முழுவதையும் திருப்பி வார்க்க வேண்டும்.



மோனே டைப் முறையில் பிழையான எழுத்தை மட்டும் வார்த்தால் போதுமானது.

திற்கு வந்தது. முதலில் மரத்தில் செதுக்கப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தினார்கள். உலோகத்தில் வார்க்கப்பட்ட எழுத்துக்கள் பின்னர் புழக்கத்திற்கு வந்தன.

தமிழ்நாட்டில் 16-ஆம் நூற்றுண்டில் மேனுட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட மர எழுத்துக்களைக் கொண்டு சில கிறித்தவ நூல்கள் அச்சடிக்கப்பட்டன. தற்காலத்தில் உள்ளவை போன்ற அச்சு எழுத்துக்களையுடைய அச்சகங்கள் பின்னர்த் தோன்றின. 1713-ல் தரங்கம்பாடியில் நிறுவப்பட்ட லூதரன் மிஷன் அச்சகமும், சென்னையில் தொடங்கிய எஸ். பி. சி. கே. அச்சகமும் இந்தியாவிலேயே முதன்முதலில் இவ்வாறு அமைக்கப்பட்ட அச்சகங்கள் எனலாம். இந்தியர் அச்சகங்களை நடத்தக்கூடாதென்ற சட்டம் 1835-ஆம் ஆண்டு வரை அமலில் இருந்ததால் நெடுநாள் வரையில் நம் நாட்டில் அச்சகங்கள் ஏற்படவில்லை.

இவ்விரு சாதனங்களும் பத்திரிகை அலுவலகங்களில் மிகுதியாகப் பயன்படுகின்றன.

' எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதற்கிணங்க எழுத்தறிவு வளர்ச்சிக்குத் துணை நிற்கும் இத்தகைய அருஞ் சாதனங்கள், வாழ்க்கை வளத்துக்கு மிக இன்றியமையாததாக விளங்குகின்றன. எழுத்துக்களின் அருமையை உணர்ந்த வள்ளுவர்கூட,

"எண்ணென்ப ஏனை எழுத்
தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"
என்ருர்.

எழுத்துச் செல்வம் நமக்குக் கிடைத்தற்கரிய செல்வமாகும். அதனைப் பயன்படுத்திக் கொள்வார்தான் பெருமளவில் பெருக வேண்டும். எழுத்துச் சுதந்தரம் இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதாமல், நடுநிலை நின்று, கண்ணியம் தவருமல், கடமையினின்று வழுவாமல், எழுதுதல் வேண்டும். அந்த எழுத்துக்கள்தான் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்தரும்.

அறிவுக்கு விருந்தூட்டும் கையெழுத்துப் பிரதிகள், அச்செழுத்துக்களால் நூல் வடிவம் பெற்றுப் பெருகிட வேண்டும், நல்ல நூல்கள் பெருகப் பெருக சமுதாயத்தில் மறுமலர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் ஏற்படும், இதற்கு வழிகோலும் அச்சு எழுத்துக்கள் — அச்சகங்கள் பல்கிப் பெருகிட வேண்டும்!

——பி.வி.ஜி

# வெண்பாப் போட்டி

## தொழில் துறையில் தமிழக அரசின் தொண்டு

செல்வத்தை நம்நாட்டில் சேர்க்கும் தொழில்வளத்தைக்
கல்லில், இரும்பில், கனிப்பொருளில்,—சில்லருவி
நீர்மீதும் கண்டோம் ; நெருங்குகிறோம் மின்னணுவால்
பாரறியும் நம்மையினிப் பார்.

— சு. மலர்க்கொடி, குளக்காநத்தம்

சர்க்கரையா ? காகிதமா ? சார்ந்த பிறபொருளா ?
அக்கரைக்கு நாம்சென்ற தக்காலம்—தக்கபடி
ஆலைத் தொழிலமைத்தே அத்தனையும் இந்நாட்டில்
வாழ வகுத்தார் வழி !

— ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை

நெய்வேலி, சேலம் நெசவுக்குக் கோயமுத்தூர்
நெய்மணக்கும் தஞ்சாவூர் நெல்லுக்குப்—பொய்யில்லை
தூத்துக் குடிமுத்து தொல்புகழாம் பல்தொழிலைப்
பார்த்தால் வடித்திடலாம் பா !

— புலவர் கு. பழனிச்சாமி, கவுந்தப்பாடி

வாழ்வில்லம், நோயுதவி, வைப்புநிதி, சேமிப்பும்
தாழ்வின்றிப் பாட்டாளி தானடையக்—காழ்ப்பகற்றி
ஆலையிலே கண்ணியமாய் ஆற்றும் தொழிலுறவால்
நாளை உலகம் நமது.

— து. ம. இராமசாமி, துடியலூர்

நாளும் தொழில்வளர்த்து நாட்டின் நலிவகற்றி
ஆளும் தமிழரசை ஆர்எதிர்ப்பார் ?—பாழும்
வறுமையினை வீழ்த்தி வளங்காண வேண்டிப்
பொறுப்பேற்றுக் கொண்டவரைப் போற்று !

— சண்முக தாயுமானவன், பொன்மலை

இந்திய நாட்டில் இணையற்ற மாநிலமாய்
செந்தமிழ் நாடு செழிப்புறவே—விந்தையுடன்
பாட்டாளி செய்தொழிலில் பங்குபெற வேசட்டம்
போட்டார் கலைஞர்இப் போது.

— கோ. புகழேந்தி, புதுவை-4

தொழில்துறை யாவும் தொழிலாளர் யாரும்
செழிப்பில் திளைத்திடச் செய்யும்—அழிவிலாத்
திட்டங்கள் பண்ணியே தேர்ந்தாளும் நல்லரசு
சுட்டபொன் ஒக்குமெனச் சொல்.

— விநோதலீலன், இரா. வெள்ளோடு

சிற்றூரும் பேரூரும் சீராய்த் தொழில்பெருகி
பொற்காலம் என்றெவரும் போற்றிடவே—பற்பலவாய்
ஊக்கப் படுத்தி உதவும் தமிழரசைக்
காக்கும் தமிழரினம் காண் !

— கோ. அருளாழி, புதுவை-4

நிலத்தில் பிறந்தாலும் நீலக் கடலில்
குலம்வாழச் சென்றுழைக்கும் கோளார்—நலம்மலர
நல்லவலை தந்திட்டார்; நாவாயும் கொள்ளென்றார்;
தொல்லை ஒழிக்கும் துணை.

— கா. அப்துல்லா, கணியூர்

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்
சு. மலர்க்கொடி,
குளக்கா நத்தம் (அஞ்சல்),
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

வெட்ட வெளிகள் வியனுர் தொழிற்சாலைக்
கட்டடங்க ளாகநற் காட்சிதரும்—பொற்புதனைப்
பாடுதற்கு நான்குவரிப் பாட்டால் முடிந்திடுமோ ?
ஈடுண்டோ எம்மரசுக் கீங்கு !

— புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை

பல்தொழிலும் நல்வளனும் பாரிற் பெருகிடவே
இல்லைகாண் துன்பமே என்ருக—நல்லபல
திட்டமிட்டு நாடித் தொழில்வளர்த் தார்தம்மை
இட்டமுடன் பாடிடுவேன் இன்று.

— புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனு

தொழிற்கல்வி கற்ருேர் தொழில்துவங்க வங்கி
வழங்கும் கடனுதவி வாய்த்த—தொழிற்சலுகை !
இன்னும் தமிழக மெங்கும் தொழில்பெருகப்
பன்னீராண் டுத்திட்டம் பார்.

— வை. இரத்தினசாமி, தேத்தாகுடி

கைத்தொழில்கள், பட்டறைகள், கைவினைகாண் கூடங்கள்,
மெத்தத் தொழிலகங்கள், ஏற்படுத்தி—எத்தொழிலும்
நாட்டுனீடமை ஆக்கிவரும் நம்மரசின் நற்பணிவெண்
பாட்டதனில் பாடலே பாங்கு.

— புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி

தேர்விட்டான் முல்லைக்கு வேள்பாரி ; செந்தமிழின்
பேர்விட்டார் ‘ சாராபாய் பேட்டை ’ யென்ருர்—கூர்விட்ட
அன்பு மடமென்போம் ; யாரிதனைத் தெற்றென்பர் ?
நன்று தொழில்வளர்க்கும் நட்பு.

— தமிழ்மணி, பல்லடம்

ஆய்ந்த தனிச்சலுகை, ஆற்றலறிந் தேற்றதொழில்,
வாய்ந்த கடனெல்லாம் வந்துதவி,—தோய்ந்திடும்
மக்களுக்கு வேலை மனமார வாய்ப்பளிப்பு,
தக்கநல்ல திட்டமிது தான்.

— மா. சே. இராசு, திருப்பூர்

ஏட்டுப் படிப்பையே எந்நாளும் நம்பாமல்
வாட்டும் பசிநீங்கி வாழ்தற்கு—நாட்டினிலே
கைத்தொழிலும் செய்யக் கடனுதவும் நம்மரசை
எத்தினமும் போற்றல் இனிது.

— புலவர் ப. சம்பந்தன், திருக்கோவலூர்

சிறுதொழில்கள், வேளாண்மை சீர்பெறவே நாளும்
உறுபொருளைத் தந்துதவி, ஊக்கிப்—பெருமளவில்
நாட்டில் தொழில்கள் நலமுறவே நம்மரசு
காட்டிடுதே நல்லார்வம் காண்.

— புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்

எழிலோங்கும் இந்நாட்டில் எங்கெங்கும் ஆலைத்
தொழிலோங்கச் செய்திட்டார், ஏழை—விழியெங்கும்
இன்பம் தழைத்தோங்கும் இவ்வரசின் நற்ருேண்டால்,
நன்றி வழிந்தோங்கும் நன்கு.

— புலவர் கோமுகி, ஆதமங்கலம்

நாடெங்குஞ் சீராக நற்ருெழிற் கூடங்கள்
தேடி அமைத்தே திறமாக ;—வீடெங்கும்
கொல்பசி போக்கவே கூட்டுப் பணியாற்றும்
நல்லரசின் சாதனையை நாடு.

— ப. சக்திவேலன், திருச்சி-4

தொழிற்றுறையில் நல்லமைதி தோன்றிவர, நாட்டின்
தொழிலாளர் வாழ்வியலில் துய்க்க—விழிபோன்றே
உற்றுதவி செய்யும் உயர்தமிழ் நாட்டரசைப்
பொற்செல்வி நீபாடிப் போற்று !

— வி. மு. உலகநாதன், சூலை

நாடு வளம்பெற நற்ருெழில் ஏற்றமுற
ஈடில்லாச் சேலத்து இரும்பாலை—பீடுறவே
எண்ணில் தொழிலகங்கள் ஏராளம் செய்திட்ட
வண்ணத் தமிழரசை வாழ்த்து.

— புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி

# வெண்பாப் போட்டி

மின்மய மானதொழில் மிக்குடைய எந்நாடும்
குன்றாப் பொருள் வளத்தைக் கொண்டோங்கும்;—நின்று
வளர்தொழிற்கு நம்மரசு வாய்ப்பளிக்குந் தொண்டு
நலத்தினைப் போற்றிடும் நாடு.

— சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு

சேலத் திரும்பு சிறப்பான மின்நிலையம்
கோலக் குடிமுத்தும் கொண்டோம்நாம்—சாலவே
சொந்தமாய்ச் செய்யும் தொழிலுயர்த்தி வாழ்விக்க
வந்த தமிழரசை வாழ்த்து.

— சைதை சுந்தரமூர்த்தி, பொன்மலை

தொழிலும் வளமும் தொழிலாளர் ஏற்றம்
எழிலும் வளர்கவென இன்று—முழங்கும்
ஒலிகேட்டோம்! உள்ளம் உவந்தோம்! உயர்ந்தோம்!
நலிவில்லை என்றும் நமக்கு!

— சிவ. கிருட்டினன், கணியூர்

சிக்கல்கள் நீங்கிச் சிரமமே இல்லாமல்
மிக்கவே நன்குழைப்போர் மேன்மையால்—எக்காலும்
வாழ வழிவகுக்கும் வண்டமிழ் நாடாள்வோர்
ஏழைகள் கூட்டாளி ஏத்து!

— உ. தாமோதரன், சூளை

வறுமையில் வாழ்வோரின் வாட்டத்தைக் கண்டே
சிறுதொழில் செய்தேனும் சீரார்—மறுவாழ்வை
ஈட்டிடுவீர் என்றுதவி ஈந்திட்ட நற்றமிழ்
நாட்டரசே நல்லதென நாடு!

— புலவர் பாக்கியமணாளன், மட்டப்பாறை

சீர்புகழ் சென்னையில் பார்புகழ் 'சாரா'வின்
கூர்த்தமதி கூறுந் தொழிற்கூடம்—தேர்ந்த
தொழில்துறையின் மேன்மை துலங்குவதே ஈண்டு
தொழுதேத்தும் எம்மரசின் தொண்டு.

— ப. திருவேங்கடம், திருச்சி-4

கனிவளமும் கைத்திறனும் கூற்றதனால் வந்த
தனியறிவும் கொண்ட தமிழா!—இனிமேலே
பல்தொழிலும் செய்யப் பணவுதவி உண்டென்றார்;
தொல்லை மறையும் தொலைந்து.

— தேவத்தூர் அ. காந்தி, தேவத்தூர்

பழமுதிர் சோலையெனப் பட்டண மெங்கும்
தொழிற்பேட்டை தோன்றிற்றே தோதாய்!—எழிலார்ந்த
எந்தமிழ் நாட்டின் இளைஞர்க்கே வாழ்வளிக்க
வந்த தமிழரசை வாழ்த்து.

— மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி

ஆக்கத் தொழில்கள் அனைத்திற்கும் வாய்ப்பீந்தார்!
ஏக்கப் பிணியகற்றி இன்றாள்கள்—வீக்கமுற
வெற்றிப் படியமைக்க வேண்டும் தமிழ்மகனே
பற்றிமேல் சென்றிடுவாய் பாய்ந்து.

— அ. பொன்னையன், தொட்டியம்

விஞ்ஞான வித்தகர்கள் வேறெங்கும் போகாமல்
எஞ்ஞான்று மிங்கே இயங்கிடவே—செஞ்ஞாயி
றன்ன தமிழரசு ஆய்ந்தே தொழில்துறை
முன்னேற்றங் கண்டார் முனைந்து.

— நா. மணிமேகலை, வந்தவாசி

வேலையில்லை என்றுதினம் வீதியினைச் சுற்றியநாம்
ஆலையிலே இன்றுபணி யாற்றுகின்றோம்—கோலமலர்ச்
சோலைநிழ லீயும்! தொழில்பெருக்கும் நம்மரசு
வேலையுலர்க் கீயும் விரைந்து.

— த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை

பெய்யும் முகிலினமும் பெய்யாக் குளிர்வின்றிச்
செய்வார் திறமிருந்துஞ் செய்யார்காண்—மைவிழியே!
வேண்டும் பொருளிலதால் வேண்டியாங் கெய்துவித்தார்
நீண்டுறைக! நீரும் நிறைவு.

— மா. சு. ஜெயராமன், ஓலைப்பாடி


சுற்றுலா சுந்தரம்
கதை : இளவல்
சித்திரம் : முத்து
அதோ பஸ்கூடத்திரும்பி வந்திருக்கிறது!
சுந்தரம், அருள். நீங்கள் இரண்டு பேரும் ஜீப்புக்குப் போங்கள் நாங்கள் பஸ்ஸைச் சுற்றி வளைத்துக் கொள்கிறோம்.
இது தான்டா அருள் சரியானசமயம், நாம தப்பி ஓடி விடலாம்
இன்னும் உன் புத்தி இப்படிப் போகுதேடா! இந்த இருட்டிலே எங்கேடா போகமுடியும் ?
அருள்! சத்தம்போட்டுக் காரியத்தைக் கெடுத் காதே, பஸ்ஸிலே மாலா அக்கா, மீரா அக்கா இரண்டுபேரும் இருக்காங்க... அவர்களிடம் மாட்டிக்குவோம்! அதைவிட பயங்கரம் அந்த டிரைவர்! போலீஸ் அவரைத் தேடுது நமக்கு ஏன் வம்பு? நம்ப சுற்றுலா வந்தது போதும் நல்லபிள்ளையா வீடு திரும்புவோம்.
என் அருமை நண்பனே! உனக்கு இந்த நேரத்தில்தானா ஞானோதயம்? இதுவரை உன்னை நம்பினேன்! இனியும் நம்புகிறேன், தலைக்கு மேல் போகும் தண்ணீர் சென்டி-மீட்டராக இருந்தால் என்ன? மீட்டராக இருந்தால் என்ன?
நம்பினோர் கெடுவதில்லை நண்பனே! விவாதிக்க நேரமில்லை கிளம்பு.
டேய்.... பசங்களா எங்கே நைஸாக் கிளம்பிட் டீங்க.... எங்களைக் காட்டிக் கொடுத்திட்டு ஓடப்பாக்கிறீங்களா?
டிரைவர்,.. நா....ங்...கள்..
பொடிப்பயல்கள் என்னை ஏமாற்றியதுடன் காட்டிக் கொடுத்து விட்டார்கள், எங்கள் கூட்டம் மறைந்திருக்கும் இடிந்த சத்திரத் தையும் போலீசாருக்குக் காட்டிக் கொடுத்து விட்டீர்களா? நானும் மற்றவர்களும் தப்பிவந்துவிட்டோம்.ம்
ஐயய்யோ... நாங்க ஒண்ணும் செய்யலே! எங்களுக்கு ஒண்ணுமே தெரியாது!




ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்:
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




Criterion CO 2883

பதிவு எண். M. 8676






# எழிலார்ந்த ஒரு பொருள் என்றுமே இன்பம்!

## இன்றே வாங்குங்கள்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

**முதல் பரிசு:**

**ரூ. 1,00,000**

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

59-வது குலுக்கல் நாள்: **12-9-1973**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர். செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 9.

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்